Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
11/00
ஜன.04-10,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 238

## வேட்டுகளும் வோட்டுகளும்

## காணாமல்போன இலட்சியங்கள்

## குன்றுகளில் குண்டுகள்



## எங்கே ரஞ்சிதா

## பூஜாவின் பேட்டி

## தேர்தலும் சேகுவேராவும்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## கூத்தும் பரீட்சையும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஜனவரி 29ல்
ஜனநாயகத்திற்கு மற்றொரு
மரண அடி காத்திருக்கிறது!

அன்றுதான்
யாழ் மாவட்ட
உள்ளூராட்சித் தேர்தல்!

தில்லுமுல்லுகள் இல்லாத
தேர்தல்கள்
நடப்பது அரிதுதான்!

ஆனாலும்,
தில்லுமுல்லுகளின்
உச்சக்கட்டம்
யாழ் மாவட்ட
உள்ளூராட்சித் தேர்தல்!

உலகில் இதுவரை
நடைபெற்ற தேர்தல்களில்
'டம்மி வேட்பாளர்கள்'
எங்கும் நிறுத்தப்பட்டதில்லை!

யாழ் மாவட்ட
உள்ளூராட்சித் தேர்தலில்
பாதிக்கு மேற்பட்டோர்
'டம்மி வேட்பாளர்கள்'
என்பது உலக சாதனை!

சில கட்சிகளின்
வேட்பு மனுக்கள் மட்டும்
நிராகரிக்கப்பட்டமையால்,
ஏற்கப்பட்டவை எல்லாம்
நியாயமானவை என்று
அர்த்தம் அல்ல!

பிடிபடாமல் செய்தாலும்
களவு களவுதான்!

எப்படியாவது,- யாழில்
உள்ளூராட்சித் தேர்தலை
நடத்தி முடிப்பதுதான்
அரசின் இலட்சியம்!

நடக்கப்போவது
கேலிக்கூத்துதான் என்பது
அரச தரப்புக்கு
முன்கூட்டியே தெரியும்!

அதனால்தான்,
ஓர் இடத்தில்
போட்டியிடக்கூட
பொதுஜன முன்னணி
முன்வரவில்லை!

இந்தக் கேலிக்கூத்தில்
நேரடியாக பங்கெடுத்து
தன் முகத்தையும்
கெடுத்துக் கொள்ள
அரச தரப்பு விரும்பவில்லை!

தமிழ்க் கட்சிகளின்
முதுகுக்குப் பின்னால் நின்று
இந்தக் கூத்தை
நடத்தி முடிக்கவே
ஆளும் தரப்பு விரும்புகிறது!

கேலிக்கூத்தில் நடக்கின்ற
திருகுதாளங்களுக்கான
அவப்பெயர்கள் யாவும்
தமிழ்க் கட்சிகளுக்கே சேரும்!.

கூத்தில்
கிடைக்கும் இலாபம்
அரசுக்குச் சேரும்!

அரசைப் பொறுத்தவரை
இது நஷ்டம் இல்லாத
தேர்தல் கூத்து!

யாழ் மாவட்ட மக்கள்
என்ன செய்யப்போகிறார்கள்?

வாக்களிப்பதும்
வாக்களிக்காமல் இருப்பதும்
மக்களின் உரிமை!

புள்ளடி போடுவது
தங்கள் எதிர்காலத்திற்கு
பொல்லடியாகுமா?
இல்லையா? என்று
ஆராய்ந்து அறியும்
பக்குவம் மக்களுக்குண்டு!

கடந்த காலத்தில்
மக்களை கட்டாயப்படுத்தி
வாக்குச் சாவடிகளுக்கு
அழைத்துச் சென்றதுண்டு!

அந்தச் சந்தர்ப்பங்களில்
செல்லாத வாக்குகளின்
எண்ணிக்கை
அதிகமாக இருந்தன!

தங்கள் எதிர்ப்பை
மக்கள் மௌனமாக
வெளிப்படுத்திய விவேகம்
என்று அப்போது
அதனைக் கூறினர்!


எனவே- மக்கள்
ஒரு முடிவுக்கு
வந்து விட்டார்கள் எனில்
அதனை மாற்றியமைக்க
எவராலும் முடியாது!

எனவே- இந்நிலையில்
யாழ் மக்களின்
அரசியல் முதிர்ச்சிக்கும்
ஜனவரி 29 இல்
பரீட்சை காத்திருக்கிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## அர்ப்பணிப்பு!

நாம் கடவுளின் சமூகத்திலே, பாவமற்று வாழ, அவருடைய சித்தம் இப்பூவுலகில் நிறைவேற எம்மை அர்ப்பணிக்கின்றோம். அதற்கு அடையாளமாக காணிக்கையும் செலுத்துகின்றோம்.

நாம் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், நம்முடைய பாவ வினைகள் அகல வேண்டும், என்ற சிந்தையோடு நம்மை அர்ப்பணிக்கின்ற அதே வேளை, ஒரு கையில் பரிசுத்தத்தையும் மறு கையில் பாவத்தையும் பிடித்துக் கொண்டிருக்கிறோம்.

காணிக்கையின் அளவை கடவுள் பார்க்காமல் ஆளையே பார்க்கிறார். அகம் கறையற்றதாக இருக்கும்போதே, காணிக்கையும் அதனூடாக அர்ப்பணிப்பும் அர்த்தமுள்ளதாகின்றது.

"ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை." (ஆதி 4: 4,5) காரணம், காயீனுடைய உள்ளம் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையாக இருக்கவில்லை. நாமும் நம்முடைய உள்ளங்களை ஆண்டவர் இயேசுவின் பார்வைக்கு செம்மையாக்கி அவருடைய நோக்கம் அவனியில் சீராய் நிறைவேற அர்ப்பணிப்போமாக.

சகோ. எஸ். யேசுநாதன், செங்கலடி.

## திருப்தியே மேலான செல்வம்!

ஆணாயினும் பெண்ணாயினும் அவர் மூமினாக இருக்கும் நிலையில், நற்கருமங்கள் செய்தால் நிச்சயமாக நாம் அவரை (இம்மையில்) நல்ல திருப்தியான வாழக்கையாக வாழச்செய்து (மறுமையிலும்) அவர் செய்துகொண்டிருந்ததைவிட மிக்க நேர்த்தியான சன்மானத்தை நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்.

(16:97 அல்குர்ஆன்)

செல்வம்- பொருள் பெருக்கத்தினால் ஏற்படுவதில்லை, மன நிம்மதியாலேயே மெய்யான செலவம் கிடைக்கிறது. திருப்தியே தீர்ந்து போகாத செல்வம்- மாய்ந்து போகாத பொக்கிஷம். (நபி ஸல் அருளியது), 'திருப்தி' என்ற அரசாங்கமும் நற்குணம் என்ற சம்பத்துக்களுமே நமக்குப் போதும். திருப்தி என்ற நண்பனே நல்லவன், கல்வி- கண்ணியமான சொத்து. ஒழுக்கம்- ஒப்பற்ற அணிகலன்; சிந்தனை- தெளிவான கண்ணாடி.

அறிவிப்பவர்- ஹஸரத் அலி (றலி)

எனவே நம்மிடமிருப்பதைக் கொண்டு இவ்வுலகில் திருப்தியடைவோமாக.

பஷீரா முஹைடீன், பாலையூற்று.

# கவிதைப் போட்டி இல. 235

பரிசுக்குரிய கவிதை

### காலக்கொடுமை

அக்காளும் தம்பியும்
அழகாகக் கைகோர்த்து
திக்குத் தெரியாமல்
ஓடுகின்றார்-அது
இக் காலக் கொடுமையினால்....!

பா. தம்பிராஜா- தம்பிமுத்து வீதி,
தம்பிலுவில்-02.



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### எதிர் நீச்சல் போடுக!

எமது
இந்த தலைமுறையேனும்
பேரினவாத
பெருங்கடல் கடந்து,
சமத்துவக் கரையினிலே
சுதந்திரமாய் உலா வருமா?

மலையகன்- தளதா வீதி, கண்டி.

### ஓட்டம்

கறை படிந்த சமரின் கரை எங்கே?
புரை விழுந்த போரினால் பெற்றோர் எங்கே?
மன்னிப்புச் சபையின் பட்டியலில் சேர்ந்தனரோ?
ஓடுகிறோம்! தேடுகிறோம்!
தேடிக் கொண்டே ஓடுகிறோம்!

வே. கீர்த்திநாதன்- கொ/ முகத்துவாரம்.

### எவ்விடம்?

சுற்றி வளைப்பிலே
சுட்டனர் தந்தையை!
பற்றி இழுத்துமே
கொன்றனர் அன்னையை!
மற்றுள அண்ணனும்,
'மகசீன்' சிறையிலே!
சிட்டுக்கள் இருவரும்
செல்வது எவ்விடம்?

அ. கௌரிதாசன்-
ஆலங்கேணி கிழக்கு,
கிண்ணியா.

### இறவா வரமோ...?!

பிஞ்சுக் குழந்தைக்கும்
மரணம் உண்டு!
வஞ்சக யுத்தத்துக்கு
மரணம் உண்டா?

சோழியூர் சிவபரீஸ்வரன்-
யாழ்ப்பாணம்.

### விழுந்தவை

வேர் அறுந்த மரத்தினின்று
விழுந்து விட்ட கனிகள் இவை!
யார் அறுத்துப் போட்டாலும்
கேட்க இங்கே நாதியில்லை!

ஆ. ஜெகதீஸ்வரன்- புசல்லாவ.

### இதே கதி!

சட்டம் குழியில்
சாய்ந்து வெகுநாள்!
பெற்ற மகவை
விற்கும் உலகம்!
சொந்த மிருந்தும்
பந்தம் இருந்தும்
இந்தக் கதிதான்
இனி- இருவர்க்கும்!

ஜீ. மோகனேஸ்வரி-
ஈச்சந்தீவு-3.

### அறியாமை

"நிலவுக்கு போவோமா?"
உன் துணை இருந்தால்
நிலவென்ன நிலவு
யாழ்ப்பாணமே போவேன்!

சுபா வரன்- கண்டி.

### புறப்படு...!

தொடர்ந்தது யுத்தம்
தொலைந்தது நிம்மதி!
போருக்குள் வாழ்வு
புளித்துப் போச்சு...!
புறப்படு ஜாலியாய்
கடற் குளித் திடலாம்!

பஷீரா முஹைடீன்-
பாலையூற்று, திருமலை.

### நீ(நீ)ர்க்கதி!

நீர் நிழல் தொடருது- இங்கே
போர் சூழல் துரத்துது- எங்கோ
நிர்க்கதியாய் நடக்கிறோம்...
நீர்க்கதிதான் நம் விதியென
அழைத்திடுமோ அலை கடல்!?

செல்வி. ப்ரிய நேசி- களுத்துறை (தெற்கு)

### ஓடிப்போவோம்

துப்பாக்கிச் சத்தங்களும்
ஒப்பாரிச் சத்தங்களும்
இல்லாத
தேசம் நோக்கி...
ஓடிப் போவோம்!

அ. அச்சுதன்-
சேனையூர்-06, மூதூர்.

### அகதி!

அரபிக் கடலோர
உல்லாசப் பயணிகள் அல்ல
இவர்கள்....!
வட கடலோர
அகதிக் குஞ்சுகள்!

ந. ரதீஸ்வரன்- பிரதான வீதி,
தம்பிலுவில்-02.

### எங்கே ஆறுதல்?

போர் முழங்கும் பூமியிலே
பிறந்து விட்டோம்!
சீர் பெற்று வாழ்ந்திடவே
வழியில்லை இங்கே!
ஆர்ப்பரிக்கும் கடலேனும்
ஆறுதலைத் தந்திடாதோ?

திருமதி. கிருஷ்ணன்
ராஜேஸ்வரி- வவுனியா.

# கவிதைப் போட்டி இல.238



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 10.01.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.238,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

## பத்திரிகைகள் தயாரா?

அன்புள்ள முரசுக்கு;

உண்மையான தமிழ்ப் பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும்தான் மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டும். வெறுமனே தமிழ்க் கட்சிகளைத் திட்டித்தீர்ப்பதால் பயனில்லை. ஏன் எனில் தெரிந்து கொண்டே தவறு செய்யும் கட்சிகளை சகதியில் இருந்து மீட்டெடுக்க நினைப்பது வீண்முயற்சி. சேற்றில் குளிப்பதில் போட்டி போடும் கட்சிகளுக்குள் யார் உசத்தி? யார் தாழ்வு? அதை விடுத்து இக் கட்டத்தில் மக்கள் செய்யவேண்டியது என்ன என்பதை தமிழ் விமர்சகர்களும், பத்திரிகைகளும் எடுத்துக்கூற வேண்டும். ஜனநாயக அரசியல் மேடையில் உருப்படியான கட்சிகள் எதுவும் இல்லாத நிலையில் தமிழ்ப் பத்திரிகைகள் அக் கடமையைச் செய்யலாமே? முரசும், ஏனைய தமிழ்ப் பத்திரிகைகளும் தேர்தல் நாடகத்தை அம்பலப்படுத்தி, உண்மையை உரைக்கலாமே?

இ. தம்பித்துரை, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

## தரம் தாழ்ந்த அரசியல்

யாழ் மாவட்ட உள்ளூராட்சி தேர்தல் பற்றிய அலசல்களும், தகவல்களும் பிரமாதம். தரம் தாழ்ந்த அரசியலின் சின்னங்களாக தமிழ்க் கட்சிகள் மாறி விட்டமை உள்ளங்கை நெல்லிக்கனி. இனிமேலும் இக் கட்சிகள் திருந்தும் என்ற நம்பிக்கை முயற் கொம்புதான்.

அ. திருச்செல்வம், கொழும்பு-03.

## வீதி விளக்கா? விமோசன வெளிச்சமா?

கடந்த காலத்தில் தேர்தலைக் குழப்பியவரே, தேர்தலில் மாநகர முதல்வருக்கு போட்டியிடும் விந்தையை 'முரசு' சுட்டிக்காட்டியிருந்தது. ...ாணிக்க தாசன் மட்டுமல்ல, ஏனைய இயக்கங்களும் தெருவுக்கு விளக்குப் போட ஆயுதம் ஏந்தியவை அல்ல; இனத்திற்கு விமோசன வெளிச்சம் போடப் போவதாகக் கூறி நூற்றுக்கணக்கான இளம் உயிர்களைப் பலியிட்டவையே. அந்த உயிர்களின் தியாகத்தில்தான் இன்று குளிர்காய்ந்தும் வருகின்றன தமிழ்க் கட்சிகள்.

சி. இருதயராஜ், சுவிற்ஸர்லாந்து.

'இனி என் முறை' விறுவிறுப்பாகிவிட்டது. பாலகுமாரன் கதைகளில் இது வித்தியாசம்தான். 'மேக்கப் புன்னகை' இன்னொரு ரகம். சினிமா உலகம் என்ற விட்டிலை நம்பிச் செல்லும் விட்டில் பூச்சிகளின் அவலத்தை பட்டுக்கோட்டை பிரபாகர் நேரில் அறிந்திருப்பார் போலுள்ளது. அவரும் சினிமா உலகில் காலடி வைத்து விட்டாரல்லவா?

செல்வி சி. சங்கீதா, மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

## கடிக்கும் கட்டெறும்புகள்

'கழுதை தேய்ந்தால் கட்டெறும்பு' என்னும் முதுமொழியைக் கேள்விப்பட்டுள்ளோம். தமிழ்க் கட்சிகளின் நிலையும் அதுதான். இக் கட்டெறும்புகள் மக்களைக் கடிக்கின்றன. பரிதவிக்கும் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு அலைகிறார்கள். இத் தேர்தல் நடந்தபின்னர், இதையே ஜனநாயக மறுமலர்ச்சியாக காட்டி அரசும் வெளிநாடுகளில் கடன் கேட்டு கைநீட்டப்போகிறது.

உ. சிறீகணேசன், திருமலை.

முரசே! முரசே!
தெருத் தெருவாய்
வீர முழக்கம் இட்டவர்கள்;
வீதி வீதியாக
ஆயுதங்களுடன் நடமாடி
ஆள் பிடித்தவர்கள்;
இளம் குருத்துக்களை
சாக்களத்தில் பலியிட்டு
வீர வணக்கம் செய்தவர்கள்-
இன்று...வெட்கம்...வெட்கம்-
வீதி விளக்குப்போட்டுத் தருவதாக,
தெருப் போட்டு தருவதாக
பிரசங்கம் செய்கிறார்கள்!

பா. ஏபிரகாம், நீர்கொழும்பு.

## துரையப்பாக்கள்

முன்னர் யாழ் மண்ணில் ஒரே ஒரு துரையப்பாதான். இப்போது ஆயிரம் துரையப்பாக்கள். வேலை வாய்ப்பு பெற்றுத் தந்து வாக்குக் கேட்டவர் துரையப்பா. விளையாட்டரங்கங்கள், நவீன சந்தை என்று எத்தனையோ அபிவிருத்திகள் செய்தவர் துரையப்பா. அவர் செய்ததில் பாதிகூட அரசுடன் நிற்கும் இயக்கங்களால் இன்று செய்யமுடியவில்லை. இதற்கு என்ன காரணம்? இக் கட்சிகள் ஒதுங்கி நின்றுகொண்டு ஆளும் கட்சி போட்டியிட அனுமதித்திருக்கலாம். அபிவிருத்திதான் தேவை என்றால், இக் கட்சிகளைவிட அரச ஏஜண்ட்டுக்கள் நன்கு செய்வர்.

பூ. பேரின்பநாயகம், குருநகர்.

# வாசக(ர்)சாலை


'தாய்', 'தூக்கு மேடைக் குறிப்பு',இப்போது 'கியூபாவின் புரட்சியாளர்களது கடிதங்கள்.' முரசின் ஆத்மா அதன் வாசகர்களுக்கு புரியாமல் போகுமா? 'சே'யின் கடிதங்கள் அற்புத புரட்சிகர இலக்கியம் என்பதில் ஐயமில்லை.

ஆர். பிரகாஷ், திருமலை.

முரசே! கெரில்லா தளபதி சேகுவேராவின் கடிதங்கள் அருமையிலும் அருமை. அரசியலில் ஈடுபாடு இல்லாத எனக்குக்கூட திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது. ஈரமுள்ள நெஞ்சில்தான் உண்மைகளும், உறுதிகளும் வாழமுடியும். சேகுவேரா அதற்கு உதாரணம்.

செல்வி என். சுபைதா, கொழும்பு-13.

முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:



- ஆர். மணிவண்ணன், கொழும்பு.
- சந்திரசேகரன் தமிழ்ச் செல்வி, குவைட்.
- இ. மன்மதராசன், யாழ்ப்பாணம்.
- க. ஜெயந்தி, வவுனியா.
- எஸ்.எஸ். குமார், மன்னார்.
- சிவகுமார், ஆனந்தபுரம்.
- இரா. கந்தமூர்த்தி, உடப்பு.
- பி. ஜூட், கனடா.
- கி. அமுதா, மூதூர்.
- அ. தயாபரன், ஜெர்மன்.
- கே. சிவராஜா, பாரதெக.
- இ. ஐங்கரன், மண்டூர்.
- பசினா, நாவலப்பிட்டிய.
- என். மோகன், நாவற்குழி.
- கே. நஸார்டீன், மாங்குளம்.
- த. ரவிச்சந்திரன், வவுனியா.
- கே. சாவித்திரி, மட்டக்களப்பு.
- க. சுப்பிரமணியம், அமெரிக்கா.
- ஏ. பழனிச்சாமி, ஹப்புத்தளை.
- சி. பேரின்பராசா கந்தளாய்-01.
- இப்திகார் பர்ஸான், மடவளை.
- மா. குருபரன், மட்டக்களப்பு.
- சந்திரலேகா மருதமுத்து, பறகடுவ.
- ஏ. முனாப் எம் மும்தாஸ், கொட்டாரமுல்லை.
- இஸ்லத்துல் இர்பான், மூதூர்.
- பூ. இராசரத்தினம், ஆரையம்பதி.
- முருகேஸ் கலைவாணி, காவத்த.
- த. லக்ஸ்மணராஜ், மட்டக்களப்பு.
- எம். உதயகுமார், ஃபிரான்ஸ்.
- சி. நேசராசா, அவுஸ்திரேலியா.
- ஆர். பத்மன், கனடா.
- ஜெ. தயாசேகரம், சுவிற்ஸர்லாந்து.
- எல். பத்மா, உமாஜினி, கொழும்பு-10.
- க. டேவிட், அவுஸ்திரேலியா.
- என்.கே. சாஜகான், சவுதிஅரேபியா.
- பி. உமேஷ்குமார், துபாய்.

# சகல தரப்பாரும் பலத்த அதிருப்தி!

## கடும் எதிர்ப்பு மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல்!

### முகாமில்தான் கூட்டம் நடத்த வேண்டும்

**யா**ழ் மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த அதிருப்திகளை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கு முன்னர் எத் தேர்தலிலும் இல்லாதளவுக்கு தமிழ்ப் பத்திரிகைகள், விமர்சகர்கள், புத்தி ஜீவிகள், மற்றும் சகல தரப்பு மக்களினதும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

யாழ் குடாநாட்டில் நிலவும் உண்மை நிலையை மறைத்துக் காட்டுவதன் மூலம், அங்கு மேலும் மோசமான சூழல் தோன்றவே இத் தேர்தல் வழிவகுக்கும் என்பதே பொது அபிப்பிராயமாக நிலவுகிறது.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளையும் அரச சார்பான விமர்சகர்களையும் தவிர வேறு எவரும் இத் தேர்தலை ஆதரித்துப் பேச முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தேர்தலில் போட்டியிடுவது மூலம் குறிப்பிட்டளவு வாக்குகளை தமிழ்க் கட்சிகள் பெற்றாலும்கூட, ஒட்டு மொத்தமான தமிழ் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள பாரிய அதிருப்திக்கு அவை ஈடாகமாட்டாது. இக் கட்சிகள் தீராத அவப்பெயரைத் தேடிக் கொண்டன. இதன் பாதிப்புக்கள் எதிர் காலத்தில் தெரியவரும் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

யாழ் மாநகரசபை, மற்றும் சில நகர சபைகள் தவிர பிரதேச சபைகள் பல கூடவே முடியாத நிலை உள்ளது. அவ்வாறு கூடுவதானால்,இராணுவ முகாம்களுக்குள் தான் கூட்டம் நடத்த வேண்டும்.

இவ்வாறான நிலையில் சிவில் நிர்வாகம் இயங்குவதற்காக தேர்தல் நடத்தப்படுவதாக கூறுவது எவ்வகையிலும் ஏற்கப்படக்கூடிய கருத்தல்ல என்று கூறப்படுகிறது.

# "வேட்பாளர்களுக்கு எச்சரிக்கை கடிதங்கள்"

## புலிகளின் உளவுப்பிரிவு தகவல் திரட்டல்

**யா**ழ் குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பேட்பாளர்கள் பற்றிய விபரங்களை புலிகளின் உளவுப்பிரிவு திரட்டி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம் வரணியில் புலிகள் இருவர் அண்மையில் படையினரால் கொல்லப்பட்டனர். அவர்கள் இருவரும் தேர்தலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக அனுப்பட்ட அணியை சேர்ந்தவர்கள் என யாழ்ப்பாணத்தில் படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

வேட்பாளர்கள் பலர் 'டம்மி'கள் என்பதாலும், ஏனையோர் இயக்க உறுப்பினர்கள் என்பதாலும் புலிகளால் சுலபமாக இனம் கண்டு இலக்கு வைக்க முடியாமல் உள்ளது.

அதுமட்டுமல்லாமல் யாழ் நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தேர்தல் பிரசாரங்கள் மந்தமாகவே உள்ளன. புலிகளின் நடமாட்டம் அதிகமுள்ளதாக கருதப்படும் பகுதிகளுக்கும் தமிழ்க் கட்சிகள் பெரியளவில் செல்லவில்லை.

இக் காரணங்களால்தான் யாழில் வேட்டுக்கள் வோட்டுக் கேட்போரை குறிவைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதேவேளை தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் புலிகளுக்கு எதிரான பிரசாரத்திலும் ஈடுபடவில்லை.

விடுதலைப் புலிகளை பகைத்துக் கொள்ளாத வகையில் தேர்தலில் போட்டியிட்டு முடிக்கவே சகல தமிழ்க் கட்சிகளும் விரும்புகின்றன.

ஆனால் கொழும்பில் உள்ள சில விமர்சகர்கள், தேர்தல் கள நிலவரம் தெரியாமல் கருத்துக்கள் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

புலிகளுக்கு மக்களிடம் உள்ள ஆதரவை அளவிடும் தேர்தல் எனவும் புலிகளை ஓரம் கட்ட உதவும் தேர்தல் எனவும் சில விமர்சகர்கள் கூறியிருந்தனர். யாழ் குடாநாட்டின் நிலவரம் எதுவும் மேற்கண்ட விமர்சகர்களுக்கு தெரியவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் அனைத்துமே 'இராணுவ நிர்வாகத்திடம் இருந்து மக்களை விடுவித்து சிவில் நிர்வாகம் ஏற்படுத்தவே தேர்தலில் போட்டியிடுகிறோம்' என்றே அறிவித்துள்ளன. பிரசுரங்களிலும் பத்திரிகை விளம்பரங்களிலும் அவ்வாறுதான் தெரிவித்துள்ளன.

வேட்பாளர்கள் சிலருக்கு புலிகளிடம் இருந்து எச்சரிக்கை கடிதங்கள் சென்றுள்ளன. எனினும் கடிதங்கள் எதுவும் தமக்கு கிடைக்காததுபோல குறிப்பிட்ட வேட்பாளர்கள் நடந்து கொள்கின்றனராம்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக இது வரை புலிகள் எவ்வித கருத்தையும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிப்பது புத்திசாலித்தனமல்ல என்று புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது. எனினும் புலிகளின் கருத்தை அறிய தமிழ்க் கட்சிகள் ஆவலாக உள்ளன. ■

## சோதனை இல்லாத பாதை

**கா**லியில் வெடி விபத்துக்கு உள்ளான லொறி கிழக்கு மாகாணத்தில் இருந்தே வந்தது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கில் இருந்து காலிவரை சோதனை அரண்களை சந்திக்காமல் வருவதற்கான வழிகள் உள்ளன. அப்பாதை வழியாகவே லொறி சென்றுள்ளது.

இக் குண்டு லொறி தொடர்பாக கிழக்கில் ஐந்து தமிழ் பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர். ■

அன்பு நெஞ்சங்களுக்கு
பிறக்கும் புத்தாண்டில்
யாவும் சிறக்கட்டும்!
உங்கள் முரசின்
மங்கள வாழ்த்துக்கள்!

# "காணாமல் போனோர் எவருமில்லை"

## அரச விசாரணைக்குழு தெரிவிப்பு!

**யா**ழ் குடாநாட்டில் காணாமல்போனோர் தொடர்பான புகார்களை விசாரிக்க அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் தம் விசாரணைகளை முடித்துக் கொண்டனர்.

"காணாமல் போனதாக 695க்கு மேற்பட்ட புகார்கள் கிடைத்தன. அதில் 9பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் சிலர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் கைது செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. எந்தவொரு முகாமிலும் அவ்வாறானவர்கள் யாரும் தடுத்துவைக்கப்பட்ட தற்கான தடயங்களோ, பதிவுகளோகூட இல்லை" என்று அந்த விசாரணைக்குழு கூறியுள்ளது.

இதேவேளை சுயாதீன விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி கூறியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசு முன்னர் நியமித்த விசாரணைக் குழுவில் இராணுவப் பொலிசாரும் இருந்தனர். முகாம்களில் யாராவது இருந்திருந்தால் அவர்கள் நிச்சயம் கண்டுபிடித்திருப்பர்.

அது மட்டுமல்லாமல், யாருக்கும் தெரியாமல் அப்படி தடுத்துவைத்திருப்பதில் பலன் எதுவுமில்லை. எனவே காணாமல்போனோர் என்ன ஆகினர் என்பது இனிமேல் இரகசியம் அல்ல.

சுயாதீன விசாரணைக் குழுவுக்கு படையினர் ஒத்துழைக்க மாட்டார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யலாம். காலத்தைக் கடத்தலாம்.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோர் தொடர்பாக ஆராய இந்த அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்களது முடிவுகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. உறவினர்களை இழந்தவர்களுக்கு நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை.

சுயாதீன விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படுமா? என்பது முதற் கேள்வி. அவ்வாறு நியமிக்கப்பட்டால் கூட காலத்தை கடத்துவதைத்தவிர,அதன் முடிவு கருத்தில் கொள்ளப்படுமா? என்பது இரண்டாவது கேள்வி.

காணாமல் போனோரின் உறவினர்களுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் எக்கட்டத்திலும், படையினர்தான் பொறுப்பாளிகள் என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும், 'தவறு செய்தவர்களை தண்டிக்கத் தயங்கேன்' என்று கூறியுள்ளார். தண்டிக்கப்படுகிறார்களோ இல்லையோ,தண்டனை பற்றிப் பேசியது மூலம், காணாமல் போனோர் உயிருடன் இல்லை என்பதை ஜனாதிபதி மறைமுகமாக ஒப்புக்கொண்டு விட்டார்.

கைதாகிப் பலியானோரின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு முன்வருமா? என்பதும் கேள்விக்குறிதான். அவ்வாறு வழங்கினால் அவர்கள் பலியானதை ஒப்புக் கொண்டதாகிவிடும் என்பதால் அரசு முன்வராது எனக் கூறப்படுகிறது. ■

## கனடாவில் மோதல் – ஒருவர் பலி!

**க**னடாவில் ஸ்காபுறோ நகரில் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கோஷ்டிகளுக்கிடையே மோதல் மூண்டது. இம்மோதலில் ஒருவர் பலியானார்.

27.12.97அன்று ஸ்காபுறோ நகரில் தேநீர் கடை ஒன்றில் இருந்த இளைஞர் ஒருவரை, அங்குவந்த நான்கு இளைஞர்கள் சரமாரியாக சுட்டனர். கபிலன் பாலசந்திரன் (19) என்ற அந்த இளைஞர் ஸ்தலத்திலேயே பலியானார்.

கடந்த மூன்று வருடமாக கனடாவில் தமிழ் இளைஞர் கோஷ்டிகள் இரண்டுக்கிடையே நடைபெற்றுவரும் மோதலின் எதிரொலியே இதுவாகும்.

1994ம் ஆண்டு நவம்பர் முதல் 1997 டிசம்பர் வரை இலங்கைத் தமிழ்கோஷ்டிகளுக்கிடையே 18 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. எனினும் ஒருவர் பலியானது இதுதான் முதற்தடவை. ■

## சுதந்திர தின ஏற்பாடுகள் துரிதம்

### நகர அபிவிருத்திக்கு 49 கோடி

(கண்டி நிருபர்)

**இ**லங்கையின் சுதந்திர தின பொன் விழாவை இம்முறை மலையகத் தலைநகரில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக்கப்பட்டு வருகின்றன.

49 கோடிரூபா நகரின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவிடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தொலைபேசிச் சேவையும் நகரின் நடைபாதை சீர்திருத்தமும், வீதி அலங்கார மின் வெளிச்ச வசதிகளும், 53 பாடசாலைகளின் அபிவிருத்திகளும் முக்கிய இடம்பெறும்.

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் இதில் சிறப்பு அதிதியாகவும் மற்றும் வெளிநாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் இவ்விழா ஏற்பாட்டுக்காக மாத்திரம் 3கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ தலதா மாளிகை முன்பாக உள்ள மகா மலுவைத்திடல் விழாவின் மத்திய நிலையமாக அமையும்.

தலதா மாளிகை உட்பட நான்கு தேவாலயங்கள்- கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில், புனித அந்தோனியார் ஆலயம், மீராமக்காம் பள்ளி வாசல் ஆகியவற்றில் பெப்ரவரி 4ல் அதிகாலை விசேட பூசை ஆராதனைகளும் பிரார்த்தனைகளும் இடம்பெறும்.

விழாவின் முன் இரவு 3ம் திகதி விசேட பிரித் பாராயணம் இடம்பெறும். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டு மக்களுக்கு உரையாற்ற முன்னர் பொலிஸ் உட்பட முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொள்வார்.

விழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன. பாதுகாப்புக்காக அதிக பாதுகாப்புப் படை வீரர்கள் கடமையில் அமர்த்தப்படுவர்.

தலைநகர் கொழும்பில் பெப்ரவரி 5ல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசேட கலாசார நிகழ்ச்சிகளும் கண்காட்சிகளும் இடம்பெற உள்ளன. இது தொடர்ந்து 20ம் திகதி வரை நடைபெறும்.

## படிக்கவும் இல்லை கிழிக்கவும் இல்லை

**யா**ழ் குடாநாட்டில் பலியாகும் அப்பாவிகளும் புலிகளாகிறார்களா? என்ற சந்தேகம் பலமாக எழுந்துள்ளது.

25.12.97 அன்று யாழ்ப்பாணம் தென்மராட்சியில் மட்டுவில் பகுதியில் சுவரொட்டியை கிழித்த புலி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கப்பட்டன.

ஜனாதிபதியின் சுவரொட்டியை கிழித்த போதே புலிகள் இயக்க உறுப்பினர் சுடப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், பலியானவர் புலியுமல்ல; அவர் சுவரொட்டி எதனையும் படிக்கவுமில்லை. இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது:

மட்டுவில் பகுதியில் புலிகள் சிலர் நடமாடுவதாக படையினருக்கு தகவல் கிடைத்ததாம்.உடனடியாக படையினர் புறப்பட்டு வந்தபோது, மட்டுவிலைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் புலிகள்தான் என நினைத்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது ஏனைய இளைஞர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

சைக்கிளில் சென்றவர்களில் ஒருவரான யோகராஜா ரமேஷ் என்னும் 18 வயது வாலிபரே கொல்லப்பட்டவராவர்.

இவ்வாறு வேறு சில சம்பவங்களும் நடந்துள்ளன என்று கூறப்படுகிறது. இவை தொடர்பாக யாழ் குடாநாட்டில் தேர்தல் போட்டியில் கடும் தீவிரமாகவுள்ள கட்சிகள் எதுவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

காணாமல் போனோர்- யாரால் காணாமல் போயினர் என்றுகூட தெளிவாக கூறாமல், காணாமல் போனோர் பற்றி கவலைப் படுவதாக மட்டும் தமிழ்க் கட்சிகள் காட்டிக் கொள்கின்றன. தற்போது பலியாவோர் தொடர்பாகவும் மௌனம் சாதிக்கின்றன.

## 'திம்பு கோட்பாடு' நிராகரிப்பு!

### தமிழ்க் கட்சிகள் மௌனம்!

**தி**ம்பு கோட்பாடுகளை ஏற்க முடியாது என்று ஜனாதிபதி சந்திரிக்கா ரூபவாஹினிப் பேட்டியில் கூறியுள்ளார்.

இப்பேட்டி விபரம் பத்திரிகைகளில் வெளியானபோதும், தமிழ்க் கட்சிகள் எதுவும் கருத்துக் கூறவில்லை.

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம், பிரிப்புக்கு இடமில்லை என்பதே தமது நிலைப்பாடு என்று தமிழ்க் கட்சிகள் கூறிவருகின்றன.

திம்பு கோட்பாட்டில், 'வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம்' என்பதும் பிரதானமான அம்சமாகும்.

திம்பு கோட்பாட்டை ஜனாதிபதி நிராகரித்திருப்பது மூலம்,வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதையோ, அது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமி என்பதையோ அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரித்திருப்பது தெளிவாகியுள்ளது.

தீர்க்கமான இந்த அடிப்படை விடயத்தில் ஜனாதிபதி கூறியுள்ள கருத்தை தாம் அறியாதது போன்று தமிழ்க் கட்சிகள் நடந்து கொள்வது வியப்பளிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை,அரசாங்கம் புலிகளை சமாதானப் பாதைக்கு கொண்டுவர நிர்ப்பந்திக்கிறது எனவும், அதன் ஒரு கட்டமே யாழ் உள்ளூராட்சித் தேர்தல் எனவும் சில அரச சார்பான ஊடகங்கள் கருத்துக்களை வெளியிட்டன.

திம்பு கோட்பாடுகளை ஒரேயடியாக ஜனாதிபதி நிராகரித்தது மூலம், சமாதான ஆர்வத்தைவிட, தாம் நினைத்ததை சாதிக்க புலிகளின் கைகளைப் பின்புறமாக திருகும் ஆர்வம்தான் அரசிடம் உள்ளது என்பதும் தெளிவாகியுள்ளது என்றும் அந்த ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ■

## பலியான பின்னர் புலியான முஸ்லிம் நபர்!

### மயானத்திலும், மையவாடியிலும் ஒரே சடலம் அடக்கம்!

**ம**ட்டக்களப்பு செங்கலடியில் கடந்த 22.12.97 அன்று இரவு ரெலோ இயக்கத்தினர் பதுங்கியிருந்து ஒருவரைக் கண்டு சுட்டுவிட்டனர். இரவு 12.20 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது. புலிகள் இயக்க அங்கத்தவர் எனக்கூறிச் சடலம் ஏறாவூர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் புலிகளிடம் அந்தச் சடலத்தை எடுத்துச் சென்றனர்.

அது தமது அங்கத்தவருடையதல்ல என்று புலிகள் இயக்கத்தினர் மறுத்துவிட்டதனால் மீண்டும் அது ஏறாவூருக்கு எடுத்து வரப்பட்டு நான்கு நாட்களின் பின்னர் நீதிமன்றக் கட்டளைப்படி அரச செலவில் மணியபுரம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இது நடந்த பல மணி நேரத்தின்பின், கொல்லப்பட்டவர் காத்தான்குடி மீரா முஹைதீன் பள்ளி வீதியைச் சேர்ந்த முஹம்மது அலியார் நஸார் (23) என்றும், ஏறாவூருக்கு வந்த தனது மகன் திரும்பவில்லையென்றும் கொல்லப்பட்டவரின் தந்தை ஏறாவூர் பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து மீண்டும் நீதிமன்றக் கட்டளைப்படி சடலம் மயானத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, ஏறாவூர் காட்டுப்பள்ளி மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது.

கொல்லப்பட்டவர் முன்னர் ஊர்காவல் படையிலிருந்து விலகியவர் என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இடத்துக்கிடம் மாறி திருட்டுச் செயல்களைப் புரிந்துவரும் திருட்டுக் கும்பலொன்றுடன் இவருக்குத் தொடர்புகள் இருந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தத் திருட்டுக் கும்பல் நீண்டகாலமாக காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடிப் பகுதிகளில் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர. ■

## 4500 தமிழ் பேசும் ஆசிரியர்கள்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு!

(கண்டி நிருபர்)

**ஜ**னவரி மாதம் தொடக்கம் 4500 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர். இவர்கள் தவிர மேலும் 1500 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் நியமிக்கப்பட இருக்கின்றார்கள்.

அக்குறணை தேசிய பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் திரு ரிச்சட் பத்திரன மேற்குறிப்பிட்ட தகவலை வெளியிட்டார்.

1994ம் ஆண்டு ஆகஸ்ட்டில் தாம் அமைச்சரானதும் 11,000 தமிழ் மூல ஆசிரியர் வெற்றிடம் நிலவியதாகவும் எம்.பீக்கள் உட்பட மற்றும் பலரும் இதனைச் சுட்டிக்காட்டியதால், 1997 ஆண்டு முடிய 4850 தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சையில் புள்ளி அடிப்படையின் கீழ் நியமிக்கப்பட்டனர். மட்டக்களப்பு உட்பட வடக்கிலும், கிழக்கிலும் ஒரே ஒரு ஆசிரியரைக் கொண்டு இயங்கிய பாடசாலைகள் இருந்தன. அந்த துர்ப்பாக்கிய நிலையை மாற்றி அமைக்கவே ஆசிரியர் நியமனங்களைச் செய்யப்போவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இதே போன்று மௌலவி ஆசிரியர்களும் இந்து, கிறிஸ்தவ சமய ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள் எனவும் கூறினார்.

"உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகள் உட்பட பல வெளிநாடுகளின் உதவி கோடிக்கணக்காக புத்தாண்டில் எம் நாட்டுக்கு கடனாகவும், உதவியாகவும் கிடைக்க இருக்கிறது. எத்தகைய பாரபட்சமின்றியும் சகலருக்கும் உதவும் வகையில் கல்வியில் பல மேம்பாட்டுத் திட்டங்களை கொண்டுவர இருக்கிறோம்." பகிடிவதையை ஒழித்துக்கட்ட ஜனவரி மாதம் புதிய சட்ட நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ■

## துணைப்படைக்கு பதிலடி!

### ஏழுபேர் பலி

**ரா**சிக் குழுவினர் என அழைக்கப்படும் தேசிய துணைப்படை அங்கத்தவர்கள் கடந்த வாரம் மட்டக்களப்பு ஏறாவூர் தளவாயில் மறைந்திருந்து இரு புலிகள் இயக்க அங்கத்தவர்களைச். சுட்டுக் கொன்றனர்.

இச் சம்பவத்திற்கு இரு தினங்களுக்குப் பின்னர் சென்ற 26.12.97 அன்று அவ்விடத்திற்குப் புலிகள் இயக்கத்தினரைத் தேடிச் சென்று நடவடிக்கைக்காகக் காத்திருந்தனர் ராசிக் குழுவினர். அவ்வேளையில் இவர்களை ஏற்கனவே எதிர்பார்த்து காத்திருந்த புலிகள் இயக்கத்தினர் நடவடிக்கையில் முந்திக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற இரு தரப்பு மோதலில் முப்பது பேருடன் சென்ற ராசிக் குழுவில் ஏழுபேர் பலியானார்கள். புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் ஏற்பட்டதாகத் தகவலில்லை.

மோதல் நடந்த பின்னர் அந்த இடத்தில் ராசிக் குழுவைச் சேர்ந்த ஆறு பேரின் சடலங்களே கண்டெடுக்கப்பட்டன. காணாமல்போனவரான ராசிக் குழுவைச் சேர்ந்த முஸ்லிம் நபரின் சடலம் இரண்டு நாட்களின் பின்னர் களுவன்கேணிக் கடற்கரையில் ஒதுங்கிக் கிடந்தது. இவர் வாழைச்சேனையைச் சேர்ந்த முஹம்மது பாறூக் நௌபர் அலி (தம்பி) என அடையாளம் காணப்பட்டுள்ளார். ■

## வடக்கு-கிழக்கு இணைப்பா?

### யாழில் சுவரொட்டி ஒட்டத் தடை!

**யா**ழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு சுவரொட்டிகள் ஒட்டுவதில் தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டு வருகின்றன.

தேர்தல் சட்டப்படி சுவரொட்டிகள் ஒட்டக்கூடாது என்றாலும்கூட, தற்போதைய நிலையில் போட்டியிட தமிழ்க் கட்சிகள் முன்வந்தமையால், சில விதிவிலக்குகள் இருக்கின்றன.

"சுவரொட்டிகளை ஒட்டுங்கள், பொதுக் கூட்டம் வேண்டுமானாலும் நடத்துங்கள் நாம் பாதுகாப்பு தருகிறோம், ஆனால் சுவரொட்டிகளில் எத்தகைய வாசகங்கள் இடம் பெறுகின்றன என்பதை எம்மிடம் தெரிவியுங்கள்" என்று படை அதிகாரி ஒருவர் பணித்துள்ளாராம்.

'வடக்கு-கிழக்கு இணைப்பு, வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம்' என்ற வாசகங்கள் சுவரொட்டிகளில் இருக்கக்கூடாது என்றும் படை அதிகாரி திட்டவட்டமாக தெரிவித்துள்ளாராம்.

## 6 வருடங்களாக கிடைக்கப்பெறாத சான்றிதழ்

**1990/1991** காலப்பகுதியில் கல்வி அமைச்சு பாடசாலையில் கல்வி கற்கும் ஆண்டு 9 மாணவர்களுக்கான 'கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சை' ஒன்றை அறிமுகம் செய்தது. இப்பரீட்சைக்கு ஆண்டு 9ல் கல்வி கற்கும் இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களும் தோற்றி அதன் முடிவுகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

இதில் சிலர் சாதாரண தரத்திலும், ஒரு சிலர் அதி விசேட தரத்திலும் சித்தி பெற்றமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதே. அதுமட்டுமன்றி, இப்பரீட்சையில் சித்தி பெறுகின்ற சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அப்போதைய கல்வி அமைச்சினால் பறைசாற்றப்பட்டது. ஆனால், இன்று 6 வருடங்களைத் தாண்டியும் இச் சான்றிதழைப் பெற முடியாமல் மாணவர்கள் தவியாய்த் தவிக்கிறார்கள்.

அன்று இப் பரீட்சையின் முக்கியத்துவம் உணரப்படவில்லை. ஆனால், இன்று இப்பரீட்சைச் சான்றிதழ்களுக்கு தொழில் நிலையங்களிலும், உயர் டிப்ளோமாவுக்கும், பிரத்தியேக கல்வி நிறுவனங்களுக்கும் இதன் அவசியம் உணரப்பட்டு, இதற்கு விண்ணப்பிப்போரிடம் மேலதிக தகமையாக இச் சான்றிதழே கோரப்படுகின்றது.

எனவே, இனியாவது, கௌரவ கல்வியமைச்சர் அவர்கள் இம் மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு இச் சான்றிதழைப் பெற வழிவகை செய்து தர வேண்டும்.

இப்பரீட்சைக்கு தொழில் நுட்பப் பாடங்களாக- வர்த்தகம் கணக்கியல், விவசாயம், மனைப் பொருளியல் ஆகியனவே உள்ளடக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஏ.எச்.எம்.பூமுதீன், மஹரகம.

## சிங்களத்தில் தமிழ்!

(காரைதீவு நிருபர்)

ரூபவாஹினியில் பிரதி சனிதோறும் ஒளிபரப்பாகும் 'ஆயுபோவன்' நிகழ்ச்சியில் தமிழ் அறிவிப்பாளராக அடிக்கடி ஒரு சிங்கள அன்பரைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அவர் தமிழை அப்படியே கொல்கிறார். ஏன் தமிழ் அறிவிப்பாளர்கள் இல்லையா? அல்லது தமிழைக் கொல்ல வேண்டுமென்பதற்காக அவரைப் போட்டுள்ளார்களா? என்பது புதிராகவுள்ளது. செந்தமிழ் பழகும் இளம் பராயத்தினருக்கு இவ்வொளி ஒலிபரப்பு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். தமிழ்ப் பிரதிநிதிகள் ஏன் இதைப் பற்றிப் பேசக்கூடாது?

மற்றது, இலங்கை சுதந்திரமடைந்த பொன்விழா அறிவிப்பு தனிச் சிங்களத்தில் போடப்படுவதன் மர்மம் என்ன? தமிழர்களுக்கு சுதந்திரம் இல்லை என்பதனாலா? தமிழ்ச் செய்தியறிக்கைக்கு முன்பாவது தமிழில் அந்த பொன்விழா நாள் கணக்கெடுப்பை போடலாம் அல்லவா? கண்ணை மூடி நித்திரை செய்பவனை எழுப்பவே முடியாது.

## பரசிட்டமோலுக்கும் பஞ்சம்!

(அக்குறணை நிருபர்)

முஸ்லிம்கள் செறிந்து வாழும் அக்குறணை பதினொரு பகுதிகளையும் உள்ளடக்கிய துனுவிலை, வத்தேகமயின் மேற்குப் புறம் மற்றும் ரத்துகொஹதீகல எனும் சிங்களக் கிராம மக்களுக்குமான ஒரு பொது வைத்தியசாலையாக 'ஸியா' வைத்தியசாலை உள்ளது.

அக்குறணை பஸாரை அண்டி, பாகிஸ்தான் முன்னைய ஜனாதிபதி அவர்களின் உதவியுடன் கட்டப்பட்டதே 'ஸியா' வைத்தியசாலையாகும்.

இங்கு சில மாதங்களுக்கொரு தடவை மருந்துகள் மற்றும் வைத்தியக் குறைபாடுகள் இருந்து வருவது பெரும் பிரச்சனையாக காணப்படுகிறது. இதனால் முஸ்லிம்-சிங்கள நோயாளிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஏற்கனவே அவசர நோயாளிகளை கண்டி போன்ற பெரிய வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்கான அம்புலன்ஸ் வசதியற்ற நிலையும்-மின்சாரத் தடை ஏற்படும்போது பாவிக்கவென ஜெனரேட்டர் ஒன்று இல்லாத குறையும் இருந்து வந்தது.

இக்குறைகளை முன்னைய சுகாதார அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எஸ்.எம்.பௌஸி அவர்கள் தீர்த்து வைத்தார்கள்.

தற்பொழுது மீண்டும் பல குறைபாடுகள் தலைதூக்கியுள்ளன. மிகவும் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய 'டெற்றாசைக்கிளின்' மாத்திரைகளும், 'பரசிட்டமோல்' வில்லைகளுக்கும்கூட வைத்தியசாலை வைத்தியர்கள் மருந்துக் கடைகளில் வாங்கும்படி துண்டெழுதிக் கொடுக்கிறார்கள்.

இது பலரின் விசனத்திற்கும் வெறுப்புக்கும் உள்ளான செயலாகும். சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு இச் செய்தி எட்டுமாக!

## பாடசாலைகளில் கொள்ளை
## ஏழைப் பெற்றோருக்குத் தொல்லை!

திருகோணமலையில் உள்ள பல பிரபல பாடசாலைகளில் சென்ற வருட இறுதியிலேயே கொப்பிவியாபாரம் நடைபெற்றது. இக் கொப்பியானது பல தனியார் வியாபார நிலையங்களின் விலையை விட 50% உயர்வானதாகவே காணப்பட்டது. இக் கொப்பி வியாபாரத்தினால் பல வறிய பெற்றோர்களும் மாணவர்களும் பல இன்னல்களுக்கு உள்ளானார்கள்.

இச்செய்தியை முரசும் குறிப்பிட்டிருந்தது. பிள்ளைகளை படிப்பிப்பதற்கு பெற்றோர் பல இன்னல்களை எதிர்நோக்கும் இவ்வேளையில் விலை கூடுதலாக கொடுத்து கொப்பிகளை கொள்வனவு செய்ய நிர்ப்பந்திக்கப்படுவது ஆசிரியர்களுக்கே அநியாயம் என்பது புரியவில்லையா?

வேறு இடங்களில் கொப்பிகளை கொள்வனவு செய்தால் அம் மாணவர்கள் தண்டிக்கப்படுவதுடன் அக் கொப்பிகளை ஆசிரியர்கள் திருத்துவதற்கு மறுக்கிறார்கள். பாட நேரங்களில் படிப்பிக்க வேண்டிய ஆசிரியர்கள்-மாணவர்களின் கொப்பிகள் எங்கே கொள்வனவு செய்யப்பட்டன என்பதைத்தான் சோதிக்கின்றார்கள். குறித்த பாடசாலைகளின் கொப்பி வியாபாரத்தினால் மாணவர்களும் பெற்றோரும் பாதிக்கப்படுவது உயர் அதிகாரிகளின் கண்களில் படவில்லையா? இதனை உயர் அதிகாரிகள் தடுத்து நிறுத்தி, வறுமையான மாணவர்கள் பாதிக்கப்படுவதை தடுப்பார்களா?

கொப்பி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள்:

திி/ சூசையப்பர் கல்லூரி.
தி/ புனித மரியாள் கல்லூரி.
தி/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
தி/ ஸ்ரீ. சண்முகா இந்து மகளிர் கல்லூரி.
தி/ விபுலானந்தா கல்லூரி.
தி/ விவேகானந்தா கல்லூரி.

விலை விபரம்:

| வகை | தனியார் நிறுவனம்/ | பாடசாலைகள். |
|---|---|---|
| 40 பக்கம் | 3.75 | 6.00 |
| 80 பக்கம் | 6.50 | 10.65 |
| 120 பக்கம் | 11.00 | 17.50 |
| 160 பக்கம் | 15.00 | 22.50 |
| 200 பக்கம் | 20.00 | 27.50 |

## பரீட்சையும் பார்சலும்

கல்முனைப் பிரிவிலுள்ள க.பொ.த(சா/த) பரீட்சை நிலையத்தின் பரீட்சார்த்திகளுக்கு வினாத்தாளோடு சாப்பாட்டுப் பார்சலும் வழங்கப்பட்டதாம். ஏனென்று கேட்கிறீர்களா? மாலை நேரத்துக்குரிய பாட வினாத்தாளை காலை வேளையில் கொடுத்தால் என்ன செய்ய? அந்த மண்டபத்திலிருந்த அத்தனை பேருக்கும் அடித்தது லக்!

சில பகுதிகளில் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி வினாப்பத்திரங்கள் வெளியாகியதாக வந்த செய்தியில் உண்மை புலப்படுவதாக தெரிகிறது. முதல்நாளே தமது பிள்ளைகளுக்கும், இன பந்துக்களுக்கும் விடை சொல்லிக் கொடுத்த ஆசிரியரே விடயத்தை கக்கியுள்ளாராம். 'அரபு' பாட வினாத்தாள் விநியோகித்த நோக்குநர் ஒருவர் வீதியால் வந்த ஒரு இளைஞருக்கும் விநியோகித்துள்ளாராம். அது பிரதிபண்ணப்பட்டு ஒரு சில நிமிடங்களில் விடைகளாக மண்டபத்தில் பகிரப்பட்டதாம். எப்படி கல்முனையில் பரீட்சை நடந்த இலட்சணம்! தேவையா பரீட்சை?

எல்.எஸ்.

## தபால் விநியோகம் தாமதம்!
## ஓட்டோ குண்டு வெடிப்பின் விளைவு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த இரவு நேரத் தபால் தரம்பிரிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இரவுக் கடமை செய்வதில் எழும் பாதுகாப்புப் பிரச்சனை காரணமாகவே இந்த வேலைகள் நிறுத்தப் பட்டுள்ளன.

இதுவரை காலமும் மாலையிலிருந்து காலைவரை மட்டக்களப்புப் பிரதம தபாலகத்தில் அஞ்சல் தரம் பிரிக்கும் வேலைகள் நடைபெற்று, மாவட்டத்தின் உள்ளூர்களுக்கும், வெளியூர்களுக்கும் விநியோக வேலைகள் இடம்பெற்று வந்தன.

ஆனால் தற்சமயம் காலை ஏழு மணிக்கே தபால் தரம்பிரிக்கும் வேலைகள் தொடங்கி தபால் விநியோகம் காலை 11 மணிக்குப் பின்னரே நடைபெறுகிறது. மாவட்டத்தின் ஏனைய இடங்களுக்கான தபால் விநியோகம் காலை 10 மணிக்குப் பின்னர் பஸ்களில் அனுப்பப்பட்டு, அதன் பின்னர் அங்கு அவை தரம்பிரிக்கப்பட்டு நண்பகலுக்குப் பின்னரே தபால் விநியோகம் இடம்பெறுகிறது.

## ஐந்து வீடுகள் இடிப்பு

யாழ் குடாநாட்டில் அல்வாய் பகுதியில் ஐந்து வீடுகள் படையினரால் இடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இயக்கத்தினர் அந்த வீடுகளை தமது தங்கும் இடங்களாக பயன்படுத்தினர் எனக் கருதியே படையினர் அவ்வீடுகளை இடித்துள்ளனர்.

இப்பகுதியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சமர் இடம் பெற்றிருந்தது. அதன்பின்னரே அப் பகுதி வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன.

## வன்னியில் எம்.ஜி.ஆர். நினைவு தினம்

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். நினைவு தினக் கூட்டங்கள் நடைபெற்றன. டிசம்பர் 24,25,26ம் திகதிகளில் எம்.ஜி.ஆர். நினைவுதின நிகழ்ச்சிகள் வன்னியில் பரவலாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு பெரும் நிதி உதவிகள் செய்ததோடு, புலிகள் இயக்கத்திற்கு இறுதிவரை அனுசரணையாகவும் இருந்தவர் எம்.ஜி.ஆர். என்பது குறிப்பிடத்தக்கது.


**தெய்வீக மருத்துவம்**
**சர்வதேச சமூக தெய்வீக சேவை**
THEYVIGA SAKTHY CENTRE — DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES
GOVT REGED NO. HA\04\BT\219
வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.
'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.
பாலுசோதிடர்-S.A.M.P.
தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி-அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு. (P.O).
BALUSOTHIDAR-S.A.M.P.
THEYVIGASAKTHY CENTRE,
BATTICALOA (P.O.)
SRI LANKA.
"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



**அஸ்மா வைத்தியம்**
* அஸ்மா * தொய்வு * முட்டு
* சளி * இருமல் * இழுப்பு
* இளைப்பு
போன்ற குணங்களுக்கு சுகமடைய
ஒரு முறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்
டாக்டர்
சுறாஜ். சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
25, சென். சில்வெஸ்டர் றோட், கல்கிசை. (மவுண்ட்லேவினியா)
தினமும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை
☎ 074 - 201582



**சித்தர் மாந்திரீகம்**
அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.
25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை
அன்பர்களுக்கும், தினமுரசு வாசகர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்



**காணி விற்பனைக்கு**
புத்தளம் அனுராதபுர வீதியில் புகையிரதக் கடவைக்கு அண்மையில் 33 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
1. (தொலைபேசி இலக்கம் 031-22538)
2. செல்வராஜ், (தொலைபேசி இலக்கம்: 032-65591)



அழகை விரும்பும் சகோதரிகளே!
புத்தாண்டில் புதுப்பொலிவுடன் திகழ அழகு சிகிச்சைகளான:
FACIAL, BLECHING, PEDICURE, MANICURE TINT, போன்றவற்றை செய்து கொண்டு அழகாகத் திகழ இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
மணப்பெண் அலங்கார ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
அழகுக் கலையை பயில விரும்புபவர்களும் தொடர்பு கொள்க.
PEARL BEAUTY CENTRE
210/9, F, BLOCK
PRINCE OF WALES AVENUE,
COLOMBO-14.
T.P. 334310.



கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....
**நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்**
★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான்
★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்
NAGOOR Travels & Tours
33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.
அங்கீகார இல: 1094
☎ 439392
- Royal - 071-35132




**அழகுக்கலை வகுப்புக்கள்**
நான்கு வித மணப்பெண் அலங்காரங்கள் உட்பட, மலர் அலங்காரங்கள்.
FABRIC PAINTING. POT PAINTING
COUSTUME JEWELLEARY
என்பவை ஒரே இடத்தில், குறுகிய காலத்தில் கற்றுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
SHREE BEAUTY CARE
40 1/2 GALLE ROAD,
WELLAWATTE.
(HONG KONG BANK) அருகில்
T.P.No: 595403, 595927
கண்காட்சி & மலிவு விற்பனை
ஜனவரி-3 சனி, 4 ஞாயிறு



**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218





**மலையாள மாந்திரீகம்**


மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வலரயே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831



**மட்டக்களப்பு மாந்திரீகம்**
உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.
DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.



**மனோதத்துவ வைத்தியம்**
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.
ஓட்டமாவடி ஜனவரி 2,3ம் திகதிகளில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி T.P. 065-57345
கல்முனையில் ஜனவரி 4,5,6ம் திகதிகளில்
T.M.M. பாமசியிலும் T.P. 065-29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33, Tissa Weerasingam Sq,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.
வவுனியாவில் ஜனவரி 10,11,12ம் திகதிகளில்
வன்னியல் ஞான வைரவர் கோவில் வீதி, வன்னி INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388



**COMPUTER COURSES**
The Computer Academy
Affiliated to IMIS (IDPM) - U.K.
DIPLOMA IN COMPUTER STUDIES
Information Technology, Ms Dos, Windows 3.1, Windows 95, Word, Excel, Turbo Pascal, Programming Techniques, Dbase & Clipper.
காலம் : 3 மாதம் கட்டணம் : 4,750/-
MICROSOFT OFFICE
Information Technology, Ms Dos, Windows 3.1, Windows 95, Word, Excel, Powerpoint, Access.
காலம் : 3 மாதம் கட்டணம் : 6,000/-
ஆரம்பம் : 5th, 10th & 12th January 98
கிழமை நாட்கள்/வார இறுதி நாட்கள்- 9am/2pm/ 6pm
INDIVIDUAL AND GROUP CLASSES
INSTITUTE OF INFORMATION SYSTEMS
IIS
379, First Floor, Galle Road,
Wellawatte, Colombo-06.
Tel : 074 - 517390
(Adjoining St. Lawrence Church)

**14.11.97** அன்று கொழும்பிலும், மலையகத்தில் பதுளையிலும் குண்டுகள் வெடித்தன.

கொழும்பில் களனி திஸ்ஸ மின் நிலைய எண்ணெய் தாங்கிகளிலும், பதுளையில் மின் மாற்றிகளிலும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் குண்டுகள் வெடித்தன.

பதுளை குண்டுவெடிப்பை புலிகளின் நடவடிக்கை என்று கூறுவதற்கு அரசாங்கமும், பாதுகாப்புத் தரப்பும் சங்கடப்பட்டன.

**'பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டிக் கொண்டிருக்கிறோம்' என்று கூறிக்கொண்டிருக்கையில், ஒரே நாளில் நாட்டின் இரு வேறு பகுதிகளில் குண்டுகள் வெடித்தன எனக் கூறுவது சங்கடமான விடயம்தான்.**

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் பொறுப்பில் உள்ள மின்சார நிலையம்,

# நாடெங்கும் விரியும் யுத்த களம்

# படைப் பகிர்வும்- புலிகளின் நகர்வும்

மின்மாற்றிகள் என்பவைதான் இலக்குகளாகவும் கொள்ளப்பட்டிருந்தன.

பதுளைக் குண்டுவெடிப்பும், கொழும்பு குண்டுவெடிப்புக்களும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட புலிகளின் தளத்தில் இருந்தே வழிநடத்தப்படுகின்றன என்பதை அப்போது எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தெரிவித்திருந்தோம்.

அதன் பின்னர் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ள சம்பவங்கள் நம் தகவலை உறுதிப்படுத்தி வருகின்றன.

குன்றுகளிலும் புலிகளின் குண்டுகள் வெடிக்கப்போவதற்கான முதல் அறிவிப்புத்தான் பதுளை மின்மாற்றித் தகர்ப்பு.

ஒவ்வொன்றும் 60 ஆயிரம் மின்வலுக் கொண்ட மின்மாற்றிகள் மூன்று பதுளையில் தகர்க்கப்பட்டன.

குண்டுவெடிப்புக்கு காரணம் புலிகள் என்று வெளியே கூறாவிட்டாலும், பதுளையில் பாரிய தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டன.

அதே தினத்தில் பதுளை-பசறைப் பிரிவில் உள்ள மின்மாற்றி ஒன்றிலும் குண்டு பொருத்தப்பட்டு இருந்தது. பொது மக்கள் சிலர் தகவல் கொடுத்தமையால் கண்டுபிடிக்கப்பட்டது.

பதுளை மின்மாற்றித் தகர்ப்பு நடைபெற்று கிட்டத்தட்ட ஒரு மாத காலத்தில் மலையகத்தில் இரண்டு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

**18.02.97 அதிகாலையில் பண்டாரவளை நகரில் வெலிமட வீதியில் அமைந்திருந்த இரண்டு மின்மாற்றிகள்தான் புலிகளால் குறிவைக்கப்பட்டன.**

குண்டு வெடித்ததில் ஒன்று முற்றாக நாசமானது. இன்னொன்று பாரிய சேதமானது.

இத்துடன் ஐந்து மின்மாற்றிகள் மலையகத்தில் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன.

இவற்றின் நோக்கம் என்ன?

**1) அரசிற்கு முடியுமான வழிகளில் எல்லாம் நஷ்டத்தை ஏற்படுத்தல்.**

**2) பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு விடுக்கப்படும் சவால்களில் ஒன்றாக, அவரது துறையான மின்சக்தித் துறையை சீர்குலைத்தல்.**

**3) நாட்டின் சகல பகுதிகளிலும் பெருமளவான படையினர் பாதுகாப்புக்கு தேவை என்ற கட்டாயத்தை ஏற்படுத்தல்.**

**4) வடக்கு-கிழக்கின் எல்லைக்குள் யுத்தத்தை கட்டுப்படுத்தி வைக்கும் அரசின் முயற்சியை முறியடித்தல்.**

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்திக் கொண்டு, கொழும்பிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துவிட்டால் போதும் என்ற திட்டத்தோடுதான் அரசாங்கம் படைப் பகிர்வை மேற்கொண்டு வருகிறது.

அரசின் தற்போதைய இராணுவ திட்டங்களுக்கு ஏற்ப, படைப் பகிர்வு முறை பின்வருமாறு அமைகிறது.

வடக்கை முழுதாக கைப்பற்றிய பின்னர் கிழக்கை பிடிப்பதுதான் நோக்கம். எனவே கிழக்கில் பிரதான நகர் மற்றும் நகர் சார்ந்த பகுதிகளில் அரச நிர்வாகம் நடக்குமளவுக்கும், அங்குள்ள படை முகாம்களை பாதுகாக்கக்கூடிய அளவுக்கும் மட்டும் படைகளை வைத்திருப்பது.

கொழும்பு பாதுகாப்புக்கு முக்கிய கவனம் கொடுத்து, புலிகளின் ஊடுருவலை தடுக்கக்கூடிய அளவுக்கும், பாதுகாப்புக்கும் ஏற்ப படைகளை வைத்திருப்பது.

ஏனைய படையினரை வடக்கு யுத்தத்தில் ஈடுபடுத்துவது போன்றவைதான் படைப் பகிர்வுக்கான அடிப்படையாக உள்ளன.

**பெரும் படைபலத்தை வன்னியில் குவித்து, புலிகளை ஓரம்கட்டுவது என்பதுதான், அரசின் பிரதானமான இராணுவத் தந்திரம்.**

**அதற்கேற்பத்தான் படைகள் படைப்பகிர்வுக்கான எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகிறது.**

**எனவே இந்தப் படைப்பகிர்வு முறைக்கு ஏற்ப, கிழக்கு மாகாணம், கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள படைகள் வடபகுதியில் குறிப்பாக வன்னிக் களத்தில் குவிக்கப்படும்.**

அரசாங்கத்தின் இந்த படைப்பகிர்வு முறை சரிவர நடக்க வேண்டுமானால், வடக்கு-கிழக்கு, கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதிகள் அமைதியாக இருக்க வேண்டும்.


மலையகத்திலோ, சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தென்பகுதிகளிலோ புலிகளின் அச்சுறுத்தல்கள், ஊடுருவல்கள் நடக்கக்கூடும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், கதிர்காமம் பஸ் நிலையத்தில் புலிகள் நடத்திய தாக்குதல் அரசின் நினைப்பைப் பொய்யாக்கியது.

**அரசு ஒரு திட்டத்தை போட்டு வடக்கு- கிழக்கில் யுத்தத்தை முன்னெடுக்க தீர்மானிக்கையில், புலிகள் அந்தத் திட்டத்தை முறியடிக்கும் மற்றொரு தந்திரத்தை வகுத்துவிடுகிறார்கள்.**

யால காட்டுக்குள் புலிகளின் ஊடுருவல், கதிர்காமத் தாக்குதல், மலையகத்தில் மின்மாற்றித் தகர்ப்புக்கள் என்பவை, யுத்த வெற்றிக்கு ஏற்ப படைப்பகிர்வை மேற்கொள்ளும் அரசின் திட்டத்துக்கு புலிகள் கொடுக்கும் பதிலடிகள்தான்.

**இதன்காரணமாக நாட்டின் சகல பகுதிகளிலும் குறிப்பிட்டளவு படையினரைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.**




படையினர் மட்டுமன்றி பொலிசாரும் வட பகுதிக்கு பெருமளவில் தேவைப்படுகிறார்கள்.

ஆனால், போர்முனைக்கு அனுப்பத்தான் அழைக்கிறார்கள் என்பது தெரிந்து பொலிஸ் வேலைக்கும் ஆட்கள் செல்கிறார்கள் இல்லை.

அதனால், தற்போதுள்ள பொலிசாரில் ஒரு பகுதியினரைத்தான் வடபகுதிக்கு அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால், நாட்டின் ஏனைய பகுதிகளில் சோதனை அரண்களில் பணியாற்ற பொலிசாருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விடும்.

படைக்கும், பொலிஸ் துறைக்கும் புதிதாக ஆட்களை சேர்க்க முடியாத நிலையில், இருக்கிற படைகளையும், பொலிசாரையும் வைத்துக் கொண்டு, படைப் பகிர்வுகளைச் செய்து, பிரதான போர்முனைக்கு அதிக படையினரை ஒதுக்கிக் கொடுத்தாக வேண்டும்.

அதனை புலிகள் அனுமதிக்கப் போவதில்லை என்பதையே நிலவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**இப்போது கிழக்கில் இருந்துதான் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள இலக்குகளை நோக்கிய தாக்குதல்கள் திட்டமிடப்படுகின்றன.**

வடக்கில் இருந்து மக்கள் கொழும்புக்கு வருவதை தடுக்க வவுனியாவில் தடை முகாம் போடப்பட்டது போல், கிழக்கில் இருந்து வரும் மக்களை தடுக்க அரசு முயலுமா?

அப்படி முயன்றால், வடக்கு-கிழக்கு முழுவதையுமே தனியான பகுதியாக அரசாங்கமே பிரித்துவிட்டது போன்று ஆகிவிடும்.

அது மட்டுமன்றி, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் தவிர, கணிசமான சிங்கள மக்களும் உள்ளனர். மூவின மக்களதும் அதிருப்திகளை சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, கிழக்கில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குள் ஊடுருவும் பாதைகளில் சோதனை அரண்களை அதிகமாக்குவதுதான் ஒரே வழியாக இருக்கும்.

அதற்கு படையினரும், பொலிசாரும் பெருமளவில் தேவைப்படுவர். அவ்வாறான சோதனை அரண்கள் போட்டால்கூட முற்று முழுதாக புலிகளின் ஊடுருவலை கட்டுப்படுத்த இயலாது.

**கடைசியாக அரசுக்கும், படையினருக்கும் ஏற்பட்டுள்ள அதிர்ச்சி காலியில் நடைபெற்ற குண்டுவெடிப்பு.**

கிறிஸ்மஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு கொழும்பு நகரில் சோதனைகள் கண்காணிப்புக்கள் தீவிரமாகியிருந்தன. சோதனைச் சாவடிகளில் மக்களை வறுத்தெடுத்துக் கொண்டிருந்தனர்.

படையினரின் கவனமெல்லாம் கொழும்பு நகருக்குள் இருந்தபோது, புத்தாண்டை முன்னிட்டு பாரிய குண்டுத்தாக்குதல் ஒன்றை கொழும்புக்கு வெளியே நடத்த புலிகள் திட்டமிட்டனர்.

அத் தாக்குதலுக்காக கொண்டுவரப்பட்ட குண்டின் ஒரு பகுதிதான் காலியில் வெடித்திருக்கிறது.

காலியில் லொறியில் குண்டு வெடித்தவுடன் பல்வேறு ஊகங்கள் வெளியாகின.

கடற்படைத் தளபதிக்கு, அல்லது ஜனாதிபதிக்கு குறிவைத்து குண்டு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று செய்திகள் வெளியாகின.

காலியில் உள்ள கடற்படை முகாமுக்கு அருகில் குண்டுவெடித்தமையால், கடற்படை முகாமை தாக்க வந்தபோது இடை நடுவே குண்டு வெடித்துவிட்டது எனவும் ஊகங்கள் கூறப்பட்டன.

ஆனால் குறிப்பிட்ட லொறியில் இருந்த குண்டின் எடை, ஊகிக்கப்படும் மேற்கண்ட இலக்குகளை தாக்கப் போதுமானதல்ல.

பத்து கிலோவுக்கு உட்பட குண்டுதான் லொறியில் இருந்திருக்கிறது.

கடற்படை முகாம்மீது மோதியிருந்தால்கூட பாரிய சேதம் ஏற்படப் போதுமானதல்ல.

அது தவிர லொறியில் மூன்றுபேர்தான் இருந்துள்ளனர். அதில் சாரதியையும் தவிர்த்தால் இரண்டு பேர்.

அவர்களிடம் பிஸ்டல் ஒன்று மட்டும் இருந்துள்ளது. தற்கொலை உடையின் பாகங்கள் இருந்ததாக கூறப்பட்ட போதும், அவை பொலிசாரால் காண்பிக்கப்படவில்லை

முகாம் ஒன்றுக்குள் லொறியை செலுத்த வேண்டுமானால், முதலில் முகாம் காவல் அரணைத் தாக்கி, லொறி உட்பிரவேசிக்க வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறான தாக்குதலுக்கு இரண்டுபேர் மட்டும் போதாது. தவிர, பிஸ்டலும் தாக்குதலுக்கு போதுமான ஆயுதமல்ல.

கரும்புலி ஒருவர் முதலில் இறங்கி ஓடிச் சென்று காவலரணில் வெடித்தால், அதன் பின்னர் லொறி செல்லலாம் என்று கருதக் கூடும். ஆனால் அக் கருத்து சரியானதல்ல.

வெடிச்சத்தத்தில் முகாம் விழிப்பாகிவிடும். உட்பிரவேசிக்கும் லொறியை நோக்கி எட்டத்தில் இருந்தே சுட்டுத் தள்ளுவார்கள். கட்டடத்தை எட்ட முன்னரே லொறி வெடித்துவிடும்.

**லொறியை நோக்கி அவர்கள் சுடுவதை தடுக்கவேண்டுமானால், குறைந்தது ஐந்துபேர் கொண்ட அணியாவது கரும்புலிகளாக நவீன குறுந்தூர ஆயுதங்களுடன் உட்பிரவேசிக்க வேண்டும்.**

கிரனேட் லோஞ்சர்கள், மற்றும் 'லோ' என்றழைக்கப்படும், கையில் கொண்டு செல்லத்தக்க சிறியரக மோட்டார் ஆகியவற்றையே இவ்வாறான தடை உடைக்கும் தாக்குதல்களுக்கு புலிகள் பயன்படுத்துவது வழக்கம்.

**கலதாரி ஹொட்டலுக்குள் குண்டுலொறி பிரவேசிக்கும் போதே தாக்குதல் அணி ஒன்றும் சேர்ந்து வந்தது. சாரதி தவிர ஐந்துபேர் வந்தனர். அதில் மூன்று பேர் கரும்புலிகள். ஒருவர் தப்பிச் சென்றார். ஐவர் பலியாகினர்.**

கலதாரி ஹொட்டல் தாக்குதலில் நூறுகிலோ குண்டு பாவிக்கப்பட்டது. தாக்குதல் அணி கிரனேட் லோஞ்சர்கள், ரி.56 துப்பாக்கிகள் போன்றவற்றுடன் வந்தது.

கரும்புலிகள் என்பவர்கள் தாக்குதலில் ஈடுபடும்போது இரண்டு விதமான தொழிற்பாட்டை மேற்கொள்வர்.

**ஒன்று; ஆயுதம் ஏந்தி தாக்கிக் கொண்டு செல்வது.**

**இரண்டு; ஆயுதத் தாக்குதல் தொடர முடியாத நிலையிலோ, அல்லது வேறு அவசியம் ஏற்பட்டாலோ தங்கள் உடலில் அணிந்துள்ள குண்டை வெடிக்க வைப்பது.**

தனிநபர்களை குறிவைக்கும்போது மேற்கண்டவற்றில் இரண்டாவது தொழிற் பாட்டை மட்டும் செய்வர். கூட்டத்தோடு கூட்டமாக நின்று இலக்கை குறிவைக்க வேண்டி இருக்கையில் ஆயுதம் கொண்டு செல்ல இயலாது.

**ஆக, எவ்வாறு பார்த்தாலும் காலியில் வெடித்த லொறியில் காணப்பட்ட குண்டின் எடையும், அதில் இருந்தோரின் எண்ணிக்கை, மற்றும் ஆயுதங்கள் காணப்படாமை என்பவை, குறிப்பிட்ட லொறி இலக்கு நோக்கி சென்ற லொறியல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றன.**

குறிப்பிட்ட முகாமை தாக்குவது புலிகளின் இலக்காக இருந்திருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட லொறி மட்டும்தான் தாக்குதலுக்கான கருவி என்ற ஊகம்தான் தவறு.

குறிப்பிட்ட முகாமையோ, அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள பிரிதொரு இலக்கையோ தாக்கியழிக்க, கிழக்கில் இருந்து குண்டுகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன.

படிப்படியாக கொண்டுவரப்பட்ட சகல குண்டுகளையும் ஒரு இடத்தில் வைத்து ஒன்று சேர்த்த பின்னர், தாக்குதல் குழுவுடன் இலக்கு நோக்கிப் புறப்பட திட்டமிட்டிருக்கலாம்.

அல்லது மட்டக்களப்பில் இருந்து காலி வழியாக கொழும்புக்குள் உள்ள தங்கள் இரகசிய தளத்திற்கு குண்டை கொண்டுவந்து

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

சேர்க்க முயற்சித்திருக்கலாம்.

எப்படியோ, வெடித்திருப்பது இலக்கு நோக்கி வந்த லொறிதான் என்று படைத் தரப்பு திருப்தியாக கூறுவது பிரசார தம்பட்டம் மட்டும்தான்.

**முன்னரும் இரத்மலானை வீடு ஒன்றில் சில ஆயுதங்களை பிடித்துவிட்டு, கொழும்பில் புலிகளின் பாரிய தாக்குதலுக்கான சகல முஸ்தீபுகளையும் கண்டுபிடித்து விட்டதாகக் கூறினர்.**

மாட்டிய ஆயுதங்கள் விமான நிலைய தாக்குதலுக்கு போதுமானவையல்ல. மாட்டியவர்களும் பிரதானமானவர்களல்ல என கூறியிருந்தோம். கலதாரி ஹொட்டல் குண்டுவெடிப்பு அதனை உறுதி செய்தது.

ஆனால், படையினர் வெளியே என்ன கூறினாலும், காலியில் மீதிக் குண்டுகளைத் தேடி பாரிய தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதற்கிடையே காலிக் குண்டு கடற்படை தளபதியை குறிவைத்து கொண்டுவரப்பட்டது என்பதும், ஜனாதிபதியை இலக்காகக் கொண்டது என்பதும் காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதைதான்.

**கடற்படை தளத்திற்குள் தனிநபர் ஒருவரை குறிவைத்து குண்டுத்தாக்குதல் நடத்த முடியாது. பாரிய தளத்தில் அவர் எந்த மூலையில் இருப்பார் என்பது யாருக்குத் தெரியும்?**

அது மட்டுமல்ல, குண்டுவெடித்தது அதிகாலையில். அதற்கு முன்னர் முதல் நாள் இரவே கடற்படைத் தளபதி சென்றுவிட்டார். அங்கு அவர் தங்கி இருந்ததாக கூறப்படுவது தப்பான செய்தி.

ஜனாதிபதி 30.12.97ல் காலி செல்ல விருந்தார். அவரை தாக்க திட்டமிட்டிருக்கலாம் என்பது இன்னொரு ஊகம்.

**அந்த ஊகத்தை புறக்கணிக்க முடியாது. ஆனால், அப்படி தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தால்கூட, குறிப்பிட்ட லொறியில் காணப்பட்ட குண்டின் எடை போதுமானதல்ல. தவிர, லொறியையும் பாவிக்க முடியாது.**

லொறியைக் கண்டாலே மரண தூதனைக் கண்டதுபோல படையினர் உஷாராகிவிடும் காலம் இது. எனவே ஜனாதிபதியின் வாகனத் தொடர் செல்லும் பாதையிலோ, ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்ச்சிப் பக்கமோ லொறி செல்ல படையினர் அனுமதிக்க மாட்டார்கள். தடுத்து நிறுத்தி விடுவர்.

**எனவே, ஜனாதிபதி இலக்காக இருந்திருந்தால் லொறியில் கொண்டுவரப்பட்ட குண்டும், ஏற்கனவே கொண்டுபோய் ஓரிடத்தில் சேர்க்கப்பட்ட குண்டுகளையும் தாங்கிய வேறு ஒரு வாகனம்தான் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும்.**

எனவே, இலக்கு எது? ஏற்கனவே மேலும் குண்டுகள் கொண்டுவரப்

## நாரதர்

பட்டுள்ளதா? என்பதையெல்லாம் அறிய முடியாமல் பாதுகாப்புத் தரப்பினர் திணறுகின்றனர்.

காலிக் குண்டு வெடிப்பு எப்படி ஏற்பட்டது? பொலிஸ் சோதனை அரணுக்கு நூறுயார் தூரத்தில் லொறி நிறுத்தப்பட்டிருக்கிறது.

வேறு வாகனம் ஒன்றை சோதனை அரணில் சோதனையிடும்போது, தாம் புறப்பட்டுச் செல்லலாம் என காத்திருந்திருக்கலாம்.

பொலிசாருக்கு சந்தேகம் வராதிருக்க லொறியில் ஏதோ கோளாறுபோன்று காண்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் செய்த தவறால், வெடி விபத்து ஏற்பட்டுவிட்டது என்று நம்ப இடமுண்டு.

இவ்வாறான வெடி விபத்துகள் முன்னர் தரையில் மட்டுமன்றி, கடலில்கூட புலிகளுக்கு நேர்ந்தது உண்டு.

ஆனால், வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அரசு கடும்போக்கை கையாளும்போது, நாடெங்கும் யுத்தத்தின் அதிர்வுகள் கேட்கும் என்பதை புலிகள் நிரூபிக்க முனைவது மட்டும் உண்மை! யுத்தத்தையோ, படைகளையோ அரசு தனது திட்டப்படி நடத்திச் செல்வதையும் புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. ■

## அதிரடி அய்யாத்துரை



**உள்ளூராட்சித் தேர்தல்கள்** நடத்தப்படுவது புலிகளை பேச்சுக்கு கொண்டு வரும் நிர்ப்பந்தமாம். அக்கரையில் இருந்துவரும் 'இந்து' பத்திரிகை கற்பனை செய்திருக்கிறது. இதே 'இந்து'தான் இந்திய அரசு வடக்கு-கிழக்கில் நடத்திய தேர்தல்களை கண்டிச்சு கிழித்தது என்பதை மறக்கவியலாது. நடக்கப்போவது பேச்சுக்கு இழுக்கும் முயற்சியல்ல; உலகில் ஆதரவு வீச்சுப் பெறும் முயற்சி. அதன் மூலம் பலம் என்ற மூச்சை நிறுத்தும் முயற்சி. 'இந்து' ஏன் இப்படி இடறுகிறது?!

**இயக்கங்கள் சிலவற்றில்** முக்கிய தலைவர்களாக இருந்து ஒதுங்கிப் போன சிலரும் தேர்தல் திருவிழாவில் பங்கு கொள்ளுகினமாம். ஈரோஸ் தலைமைப் பீடத்தில் இருந்தவரும், பின்னர் 'ஈழநாதம்' ஆசிரியராக இருந்தவருமான பால நடராஜா (சின்னபாலா அல்லது ஐயர் பாலா) என்பவரும் பிரதேச சபைக்கு கேட்கிறார். ஏன் இப்படிக் கோவணத்துடன் ஆண்டியானாய்? ஐயோ பாலா!

**நகரைச் சுத்தப்படுத்த,** பிரதேசத்தை சுத்தப்படுத்த எண்டு கரிசனையிலேதானே தேர்தலில் நிக்கினமாம்! அப்படியென்றால் ஏன் சுவர்களையெல்லாம் போஸ்டர் ஒட்டியும், சின்னங்கள் வரைந்தும் அசிங்கப்படுத்துகினம் எண்டு பொதுமக்கள் கேட்கினமாம்.

**'டம்மி வேட்பாளர்கள்'** பற்றி கட்சிப் பிரமுகர் ஒருவரிடம் பிரஸ்தாபித்தேன். அவர் நெத்தியடியாகச் சொன்ன பதிலைக் கேட்டுப் புல்லரித்துப்போனேன். "அந்தக் காலத்தில், றெயினிங்குக்கு 'டம்மி'களை வைத்துத்தானே சுட்டுப் பழகினோம். இந்தக் காலத்திலை 'டம்மி'களை வைத்து லெக்ஷன் கேட்டுப் பழகிறோம். தப்போ?" எண்டு கேட்டார். தப்பைத் தப்பென்று தெரிந்து தப்புப் தப்பாய் தப்புச் செய்தால் தப்பே இல்லை!

**கட்டுக்கதைகளுக்கு** பஞ்சம் இல்லைப் பாருங்கோ. ரெண்டு எழுத்தார் ஏவிய ஏவுகணை ஹெலியின் வாலில் செருகி இருந்ததாம். அதை வைத்து ஆராய்ந்து எந்த ரக ஏவுகணை என்று கண்டுபிடித்து விட்டார்களாம். செருகி நிற்க அது தடியோ? கம்போ? ஒழுங்காகப் பிடித்திருந்தால் ஹெலி அன்று காலி. உரசிக்கொண்டு போனதால்தான் ஹெலி தப்பியது. பிறகெப்படிச் செருகுவதாம்?

**அந்தக் கால குறுநில** மன்னர்கள் வாளுடன் திரிந்தனர். இந்தக்கால குறுநில மன்னர்களும் வாளுடன்தான் திரிகிறார்களாம். யாழ் வேலணையில் கழக வீரர்கள் வாள் வீச்சு. கத்திக்குத்து. சதக். சதக். சதக். பிடிப்பது வால். வீசுவது வாள். எப்படியோ ஒற்றுமை மட்டும் பாழ், பாழ், பாழ்!

**கமிஷன் போட்டாச்சு** எண்டதும், தீர்வு கிடைச்சாச்சு எண்ட மாதிரி காணாமல் போனோரின் உறவினர்கள் சிலர் நினைச்சுக் கொண்டிருக்கினம். களுத்துறை சிறைப் படுகொலைக்கும் கமிஷன் போடுவதாய்தானே அறிவித்தவை! சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைவீசிக் கொண்டுதான் திரிகினம். எப்படியோ காணாமல் போனோர் உயிருடன் இல்லை எண்டு சமாச்சாரத்தை நாசூக்காக அம்மையாரும் ஒப்புக் கொண்டாச்சு! 'முரசு' சொன்னது சரிதானே!

**தேனகத்தில் தமிழ்க் குழு** ஒன்று, படைக் குழுவாக மாறி விட்ட செய்தியை 'முரசு' சொன்னதல்லோ? தேனக அவல மர்மங்களின் பின்னால் மறைந்து நிற்பதும் அக் குழு என 'முரசு' உரைத்தது அன்றோ. ரெண்டு எழுத்தாருடனான மோதலில் பலியான மேற்படி குழுவினருக்கு பதவி உயர்வுகள் அறிவிக்கப்பட்ட சங்கதி மூலம் உண்மைகள் பளிச்சாகிப்போச்சு! ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ கண்ணா!

**கூட்டான கட்சியினர்** விழுந்தும் மீசையில் மண்படாததுபோல கதைகள் பல விடுகினமாம். தெரிந்து கொண்டுதான் நிராகரிக்கப்படக்கூடிய மனுவாகப் போட்டவையாம். ஆனால் விஷயம் என்ன தெரியுமோ? சட்டப்படி அறிவித்தல் பலகையில் போட வேண்டிய வேட்புமனுப் பிரதியைக்கூட போடாமல் விட்டிருக்கினம். அப்படி போட்டால் ஏதாவது பிழைகள் கண்டுபிடிக்கப்படும் எண்டு கருதித்தான் டிமிக்கி விட்டவையாம். பின்னர் தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் பலத்த கண்டனம் தெரிவித்த பின்னர்தான் விளம்பரப் பலகையில் பார்வைக்கு போடப்பட்டதாம். பிழைக்க வேணும் எண்டு முதலே 'பிளான்' பண்ணியிருந்தால், யாராவது பார்த்து பிழை பிடிக்கட்டும் என்று விளம்பரப் பலகையில் போட்டல்லோ வைச்சிருப்பினம்? இப்பவெல்லாம் முந்தி மாதிரி சுத்தல் சரிப்பட்டுவராது.

**வாக்குச் சீட்டு** என்று பெயர் வந்தது எப்படி? கவிஞர் மு.மேத்தா சொல்வதைக் கேட்டுப்பாருங்கோ:

**"வாக்குக் கொடுத்து**
**வாக்குறுதி யளித்து**
**வாங்கும் சீட்டதனால்**
**வாக்குச் சீட்டு நான்"** ■



**அசியல் தொடர்**

**அற்புதன்**
**எழுதுவது**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# புலிகளுக்கு நெருக்கமான உதவியாளர் பேச்சுக்கு புலிகள் தந்த விளக்கம்

புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்த ஐந்து அமைச்சர்களை நியமித்தார் பிரேமதாசா.

தம்முடன் பேச்சு நடத்தும் அமைச்சர்கள் தங்களுக்கு பிடிக்காதவர்களாக இருக்கக்கூடாது என்று புலிகள் கூறி விட்டனர்.

யாழ் நூலகத்தை பொசுக்கிய நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய காமினி திசநாயக்கா, தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து கடும் போக்காளராக நடந்து கொண்ட அத்துலத் முதலி இருவரும் பேச்சில் கலந்து கொள்வதை புலிகள் விரும்பவில்லை.

அதனால் புலிகளுடன் பேச நியமிக்கப்பட்ட அமைச்சர்களில் அந்த இரண்டு பேரும் இடம் பெறவில்லை.

காமினியும், அத்துலத் முதலியும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்ற பட்டியலில் இருந்தனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகளாக தங்களால் சுட்டிக் காட்டப்பட்ட மேற்கண்ட அமைச்சர்களுடன் கைகுலுக்குவதை புலிகள் விரும்பவில்லை.

குறிப்பிட்ட அமைச்சர்கள் கலந்து கொள்வதாக இருந்தால், பேச்சை நிறுத்தி விட்டு திரும்பிவாருங்கள் என்பது தங்கள் பிரதிநிதிகளுக்கு பிரபாகரன் போட்டிருந்த உத்தரவு.

யாழ் நூல்நிலைய எரிப்புக்காக காமினி திசநாயக்காவையும், 'வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷனில்' நடைபெற்ற படுகொலைகளுக்காக அத்துலத் முதலிக்கும் மரண தண்டனை விதிப்பது என்ற முடிவு விடுதலைப் புலிகளால் முன்னரே எடுக்கப்பட்டுவிட்ட முடிவாகும்.



பிரேமதாசாவுடன் புலிகள் இயக்கப்பிரதிநிதிகள் மற்றும் பிரேமதாசாவின் மகன் சஜித்.

புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்துவதற்காக உயர்கல்வி அமைச்சர் எ.சி.எஸ்.ஹமீத், மின்சக்தி எரிபொருள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, காணி நீர்ப்பாசன மகாவலி அமைச்சர் திரு.பி. தயாரத்தினா, தகவல்துறை அமைச்சர் லொக்கு பண்டார ஆகியோர் புலிகளுடன் பேச்சு நடத்த நியமிக்கப்பட்டனர்.

பிரேமதாசா அரசுடன் பேச்சு தொடங்கியதில் இருந்தே புலிகள் வெளியிட்ட கருத்துக்கள் அனைத்தும், பலவீனமான ஒரு தரப்பின் கருத்தாகவோ, மக்களிடம் இலங்கை அரசுமீது நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகவோ இருக்கவில்லை.

## பேச்சு ஏன்?

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்துவது ஏன்? என்ற கேள்விகளுக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கம் அளித்திருந்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சுவார்த்தை என்பதால், அப் பேச்சுவார்த்தை தொடர்பான புலிகளின் விளக்கத்தை வாசகர்கள் அறிந்திருப்பது அவசியம்.

அன்ரன் பாலசிங்கம் கூறிய கருத்துக்கள்:

*சர்வதேச அபிப்பிராயத்தை எமக்கு சாதகமாக வென்றெடுத்தல் என்பதோடு, இந்தியப் படைகளை வெளியேற்றுவதற்கான சூழலை உருவாக்கவும், இப் பேச்சுவார்த்தை அவசியமாகிறது.*

*இந்தியப் படைகளை வெளியேற்றுதல் என்பதில் உள்ள அடிப்படை ஒற்றுமை புலிகள், சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கான அத்திவாரத்தினை அமைத்துக் கொடுத்தது எனலாம்.*

*ஒரு பொது நோக்கத்திற்காக இரு முரண்பட்ட சக்திகள் பேச்சுக்களில் ஈடுபடுவது வரலாற்றில் ஒன்றும் புதுமையல்ல.*

*எமது வரலாற்றினை முன்நோக்கி நகர்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதன் அடிப்படையிலேயே, விடுதலைப் புலிகள் சிங்கள அரசுடனான இப் பேச்சுக்களை ஓர் ராஜதந்திர நகர்வாக மேற்கொள்கின்றனர்.*

*மேடை அரசியலை நடத்திய தலைமை கள் பேச்சுவார்த்தைகளை தங்கள் அரசியல் இருப்பிற்கான விடயமாகக் கருதின. அதற் குப் பயன்படுத்தின. நாம் அவர்களைப் போலன்றி, இந்தியா வெளியேறும்வரை யுத்த நிறுத்தம் என்பதற்கே இடமில்லை என்று பிரகடனப்படுத்திய போர்க் குணாம்சம் கொண்டவர்களாகவே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கிறோம்.*

*உயிர் வாழ்வதற்கான கவசமாக பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டோ, அல்லது பலவீனத்தின் வெளிப்பாடாகவோ புலிகள் இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.*

## வெளியேறிய பின்னர்

*இந்தியப் படைகள் வெளியேறுமானால் சிறிலங்காப் படைகள் தமிழர்களை அழித்தொழித்துவிடும் என்று இந்திய அரசின் பிரசார சாதனங்கள் கூறிவருகின்றன.*

*இந்தியா வெளியேறியபின்னர் தமிழீழப் பிரதேசங்களில் சிறீலங்காப் படைகள் இன அழிப்பில் ஈடுபட முனையுமானால், விடுதலைப் புலிகள் அதனை எதிர்கொள்வர்.*

*முதலையின் வாயினுள் அகப்பட்டிருக்கும் ஒருவன், தான் முதலையின் பிடியில் இருந்து விடுபட்டு வெளியேறினால், ஆற்றங்கரையின் காடுகளில் உள்ள மிருகங்கள் தாக்கலாம் என்பதால், முதலையின் பிடியில் இருந்து விடுபடத் தயங்குவது எந்தளவு அர்த்தமற்றதோ, அதைப்போலத்தான் இந்திய ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட, சிறீலங்கா ஒடுக்குமுறை குறித்து அஞ்சுவதும் அமைகின்றது.*

*தமிழீழ இலட்சியத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளைக் களப்பலி கொடுத்த விடுதலைப் புலிகள் வெறும் அற்ப சொற்ப அதிகாரங்களுக்காக மக்களையும், உரிமைகளையும் விலைபேச மாட்டார்கள்.*

*பதவிகளை அடைவதையோ, அல்லது சலுகைகளைப் பெறுவதையோ விடுதலைப் புலிகள் நோக்கமாகக் கொண்டிருந்தால், இந்திய அரசினையும், ஆளும் வர்க்கத்தினையும் எஜமானர்களாக ஏற்று இலகுவாக ஆட்சிபீடம் ஏறியிருக்க முடியும்.*

*எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட இந்தியப் படைகளை எதிர்த்து யுத்தம் நடத்தும் நிலை ஏற்பட்டிருக்காது.*

*மக்களின் உரிமை விடயத்தில் எந்தவித விட்டுக் கொடுப்புக்கும் இடம் இல்லை என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றார்கள்.*

*போராட்ட வடிவங்கள் மாறலாம், ஆனால் போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை"*

மேற்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டது.

## தவறான வியாக்கியானம்

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பிரபாகரன் அதிகாரத்தை விரும்புகிறார் என்று ஏனைய இயக்கங்கள் கூறியது உண்டு.

பிரபாகரன் விரும்பியிருந்தால் மாகாண சபை முதல்வராக வருவதற்கான சகல வாய்ப்புக்களையும் இந்திய அரசு வழங்கி இருக்கும்.

தனியான மாளிகை தனியான பாதுகாப்புப்படை போன்ற ஏகப்பட்ட பந்தாக்களுடன் ஒருநாட்டின் பிரதமருக்கு ஈடான கௌரவத்துடன் பிரபாகரன் இருந்திருக்க முடியும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

ஏனைய இயக்கங்களுக்கு பயந்து அரசியலில் ஈடுபட பிரபாகரன் தயங்கியிருக்கலாம் என்று கருதுவது எவ்வகையிலும் சரியாக இருக்காது. ஏனெனில் அந்த இயக்கங்களின் பலமும், பலவீனமும் புலிகள் அறியாததல்ல.

இன்று புலிகளின் அச்சுறுத்தல் மத்தியில் கூட ஏனைய இயக்கங்கள் உயிரைப் பணயம் வைத்து அதிகாரப் போட்டியில் குதித்துள்ளன.தேர்தலில் பங்கு கொள்கின்றன. இந்த இயக்கங்களே அவ்வாறு துணியும்போது புலிகள் இந்த இயக்கங்களை நினைத்து தயங்கியிருப்பர் என்பது வேடிக்கைதானே!

## அமைச்சர் ஹமீத்

பிரேமதாசாவுடன் பேச்சு நடத்த புலிகள் சென்றுவந்த நாட்களில் புலிகளுடன் ஒருவர் நெருக்கமானார், அவர்தான் முகைதீன். பிரேமதாசா வுக்கு நம்பிக்கைக் குரிய உதவியாளராக இருந்தவர்.

முகைதீனுடன் புலிகளுக்கு ஏற்பட்ட நெருக்கம் தான், பின்னர் முகைதீனே அறியாமல் அவரை பிரேமதாசாவை தீர்த்துக் கட்டும் திட்டத்துக்கு பயன்படுத்தும் அளவுக்குச் சென்றது.

முகைதீனிடம் இருந்த சில பலவீனங்களை புலிகள் கண்டுகொண்டனர். பிரேமதாசாவின் குகைக்குள் தங்களால் பயன்படுத்தக்கூடிய நபர் அவர்தான் என்றும் புலிகள் கணிப்பிட்டு விட்டனர்.

ஒருமுறை பிரேமதாசாவுடன் புலிகளின் பிரதிநிதிகள் பேசிக் கொண்டிருந்தபோது, முகைதீன் சிற்றுண்டிகள் பரிமாறிக் கொண்டிருந்தார்.

அப்போது முகைதீன் செய்த காரியம் ஒன்று புலிகளின் கவனத்தில் விழுந்தது.

பிரேமதாசாவின் பார்வையில் படாது என்ற நம்பிக்கையில் சிற்றுண்டி ஒன்றை வாய்க்குள் திணித்து ருசிபார்த்துக் கொண்டிருந்தாராம்.

நல்ல சாப்பாட்டு மன்னன். ஆசையுள்ள ஆள். தட்டவேண்டிய இடத்தில் தட்டினால் விழுந்துவிடுவார் என்று புலிகள் அப்போதே கணக்குப்போட்டுவிட்டனராம். காமினி திசநாயக்கா யார் மூலமோ அறிந்து பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் கூறிய தகவல்தான் அது.




'ஐலன்ட்' வெளியிட்ட காட்டூன்– "இந்தியர்களே திரும்பிச் செல்லுங்கள்"

## அபிவிருத்தி முழக்கங்கள்

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைக்க வேண்டும் என்பதும் இலங்கை அரசிடம் புலிகள் முன்வைத்த கோரிக்கையாகும்.

எனினும் இந்தியப் படைகள் வெளியேறிய பின்னரே அக் கோரிக்கையை வலியுறுத்தலாம் என நினைத்திருந்தனர்.

இதே நேரம், மாகாணசபையில் ஆளும் கட்சியாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் மக்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறிவந்தனர்.

வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு கனடா அரசு உதவப் போகிறது. கோடி கோடியாக கொட்டித் தரப்போகிறது. திட்டங்கள் தயார் என்று ஒரு அறிவிப்பு வரும்.

பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க ஏற்பாடுகள் நடக்கின்றன என்று பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் செய்திகள் வரும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகங்களை நோக்கி மக்கள் படையெடுப்பர். வேலை தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் தங்கள் பெயர்களை பதிவு செய்துவிட்டு காத்திருந்தவர் எண்ணிக்கை ஏராளம்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு புதிய குடியேற்றங்களில் வீடுகள், வீதிகள், கல்விக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள் கட்டித் தரப்பட உள்ளது என்று வடக்கு கிழக்கு மாகாண சபை அறிவித்தது.

இந்த அறிவித்தல்களை நம்பிய மக்களை வைத்தே இந்தியப் படை வெளியேறக்கூடாது என்று கோரும் உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் என்பவையும் நடத்தப்பட்டன.

ஏதோ தாம்தான் நாட்டின் தீர்க்கமான சக்திகள் போலவும், தாம் நினைப்பதுதான் நடக்கும் என்பது போலவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். புதிய ஆரவாரமான திட்டங்களை அறிவித்துக் கொண்டிருந்தது.

இந்தப் பழைய சம்பவத்தை இப்போது நினைவு கூருதல் சுவாரசியம்தான்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளும், மக்களுக்கு இனிக்க இனிக்க ஆசை வார்த்தைகள் கூறிவருகின்றன. ஆனால் இதெல்லாம் மக்களுக்குப் புளித்துப் போய்விட்டன.

'உங்களுக்குத்தான் வாக்கு' என்று இனிக்க இனிக்கப் பேசிவிட்டு, மக்கள் யாருக்குமே வாக்குப் போடாமல் விட்டுவிடப் போகிறார்கள் என்றும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

## வந்தனர்-சென்றனர்

இலங்கையில் இருந்து கட்டம் கட்டமாக இந்தியப் படையைத் திரும்ப அழைக்க இந்திய அரசு முடிவு செய்திருந்தது.

அதனையடுத்து வடக்கு-கிழக்கில் பல பகுதிகளில் இந்தியப் படை முகாம்கள் மூடப்பட்டன.

இலங்கையில் இருந்து முதற்கட்டமாக திரும்பிய இந்தியப் படையினருக்கு தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென்னையில் சென்று இறங்கிய இந்தியப் படையினருக்கு ஏமாற்றம் காத்திருந்தது.

அவர்கள் எதிர்பார்த்தளவுக்கு உற்சாகமான வரவேற்பு எதுவும் கொடுக்கப்படவில்லை.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி வரவேற்கச் செல்லவில்லை.

> ### சயனைட் வில்லைகளுடன் கொழும்பில் புலிகள்!
>
> கொழும்பு, மே 6
>
> கொழும்பு சென்றுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் அனைவரும் சயனைட் வில்லைகளை வைத்திருக்கின்றனர்.
>
> இது பற்றி கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுத் தலைவர் திரு. யோகியிடம் கேட்டார்.
>
> பேச்சுக்கள் நடத்த வந்திருக்கும் இந்த வேளையிலும் சயனைட்வில்லைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?
>
> இக் கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. யோகி, "ஆம். எங்கள் உயிர் உடலை விட்டுப் பிரியும் வரை சயனைட் வில்லை எங்கள் உடம்பை ஒட்டிக் கொண்டிருக்கும்" என்று பதிலளித்தார்.

வழக்கமாக இப்படியான நிகழ்ச்சிகள் எந்த மாநிலத்தில் நடைபெற்றாலும், அந்த மாநிலத்தின் முதலமைச்சர் செல்ல வேண்டும். கலந்துகொள்ள வேண்டும்.

ஆனால், தமிழக முதல்வர் இந்தியப் படையினரை வரவேற்கச் செல்ல முடியாது என்று தீர்க்கமாகக் கூறிவிட்டார்.

தமிழக சட்டசபையில் அப் பிரச்சனையை கிளப்பினார்கள்.

"இந்திய படை அமைதிப்படையாக சென்று வந்திருந்தால் வரவேற்கச் சென்றிருப்பேன். அமளிப்படையாக, அங்குள்ள தமிழர்களை அழிக்கும் பணியாக நடந்து கொண்டுவிட்டு திரும்பி வருகிறது. அதனால்தான் வரவேற்கச் செல்லவில்லை" என்று கூறினார் கலைஞர் கருணாநிதி.

## பிரபாவின் செய்தி

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்திய காலகட்டத்தில் இலண்டனில் உலகத் தமிழர் சம்மேளனத்தின் மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டுக்கு பிரபாகரன் விடுத்த செய்தியில் பின்வருமாறு கூறியிருந்தார்.

"தமிழீழத்தை கட்டியெழுப்பும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் உதவவேண்டும்.

தமிழீழத்தை நோக்கிச் செல்லும் எமது இலட்சியப் பாதையில் முட்டுக் கட்டை போட எந்தச் சக்திகள் முயன்றாலும் அதற்கு இடமளிக்கமாட்டோம்"

பிரபாகரனின் செய்தி அதுதான். இலங்கை அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களில் நம்பி ஏமாறும் நிலையில் புலிகள் இருக்கவில்லை.

இலங்கை அரசுடன் கொழும்பில் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர்.

வன்னிக் காட்டில் பிரபாகரன் தன் உறுப்பினர்களுக்கு தெளிவாகக் கூறியது என்ன தெரியுமா?

"இந்தியப் படை வெளியேறிய பின்னர், சிறீலங்கா படைகளை வெளியேற்ற போரிட வேண்டும்."

அதனால்தான் இலங்கை அரசுடன் புலிகள் நடத்திய பேச்சுக்கள் விடயத்தில் இயக்கத்துக்குள் தளம்பலோ, சோர்வோ தலைகாட்டவில்லை.

1989ல் நடைபெற்ற சம்பவம் ஒன்று இன்றுவரை மர்மமாக உள்ளது. அந்த மர்மத்தை சற்று விலக்கிப் பார்ப்போமா?

(தொடர்ந்து வரும்)

அலசுவது- இராஜதந்திரி

# சிவில் நிர்வாக மாயைகளும்!

## பதவி தேடும் கட்சிகளும்!

**யா**ழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்று முடிவதற்கு முன்பாகவே, அத் தேர்தலை தமது அரசியல், இராணுவ நலன்களுக்கு ஏற்ப ஆட்சியாளர்கள் பிரசாரப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

சிவில் நிர்வாகத்தை மக்களிடம் ஒப்படைப்பதற்கான தேர்தல் எனவும், மக்களின் மனோநிலையை எடைபோடும் அளவுகோல் எனவும் ஆட்சியாளர்களும், அவர்களின் ஆதரவு விமர்சகர்களும் கூறத் தலைப்பட்டுள்ளனர்.

காணி அமைச்சரும், பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளருமான திரு.ஜெயரத்ன அவர்கள் கருத்து வெளியிடுகையில், "உள்ளூராட்சித் தேர்தலின்பின்னர் யாழ் குடாநாட்டில் படையினர் முகாமுக்குள் சென்றுவிடுவர்" எனத் தெரிவித்திருக்கிறார்.

**இக் கருத்தானது, யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அப்பட்டமான பொய்ப் பிரசாரங்களும், உண்மைக்கு முற்றிலும் மாறான சித்தரிப்புக்களும் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்படப் போவதற்கான அறிகுறியாகவே அமைந்திருக்கிறது.**

இங்கு மட்டுமல்ல, உலக வரலாற்றில் போராட்டங்களும், உள்நாட்டுப் பூசல்களும் எங்கெங்கு தீவிரமாக நடைபெற்றனவோ, அங்கெல்லாம் ஆட்சியில் இருந்தோர் தேர்தல் நாடகங்களை அரங்கேற்றி வந்துள்ளனர்.

ரசியப் புரட்சிக் காலகட்டத்தில் மக்களை திசைதிருப்பவும், புரட்சி மீதான நம்பிக்கையை இழக்கச் செய்யும் தேர்தல் மாயைகளில் மக்களை சிக்கவைக்க முயற்சிக்கப்பட்டது.

கியூபாவில் ஆயுதப் போராட்டம் மேலெழுந்தபோது, அங்கு பதவியில் இருந்த சர்வாதிகாரி பாடிஷ்டாவால் பாராளுமன்ற, நகராட்சிமன்ற தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன.

இந்தியாவிலும் பஞ்சாப், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் மக்கள் எழுச்சிகளை திசை திருப்பவும், அங்கு அமைதி நிலவுகிறது என்று காட்டவும் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன.

**இவ்வாறு வரலாற்றில் பல முன்னுதாரணங்கள் உள்ளபோதும், மேற்கண்ட முறையிலான திசை திருப்பும் தேர்தல் அணுகுமுறைகள் இறுதியில் தோல்வியையே சந்தித்திருக்கின்றன.**

தேர்தல் சுதந்திரமாக நடக்க முடியாத நிலையில், அச்சத்துக்கும், பீதிக்கும் மத்தியில் மக்களை வாக்களிக்க நிர்ப்பந்திப்பது மூலம், தமக்கு சாதகமான முடிவுகளை எட்டவே ஆட்சியில் இருப்போர் முயன்று வந்திருக்கின்றனர்.

**இலங்கை இனப்பிரச்சனை வரலாற்றிலும், தேர்தல்களை தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ள ஆட்சியாளர்கள் முயன்று வந்துள்ளனர்.**

1981ம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் பாரிய மோசடிகள் யாழ் மாவட்டத்தில் நடைபெற்றன.

யாழ் நூல் நிலையம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் என்பவற்றை தீயிட்டுப் பொசுக்கி மக்களை பீதியில் தள்ளினார்கள்.

அரசுடன் மோதினால் யாழ் நகரே அழிந்துபோகும் என்பதுபோன்ற அச்சுறுத்தலை ஏற்படுத்தி மக்களை வாக்களிக்காமல் தடுப்பதும், வாக்குப் பெட்டிகளை நிரப்பி தமது வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதுமே அன்றைய ஆட்சியாளரின் நோக்கமாக இருந்தது.

1975ல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தல், 1977ல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தல், 1979ல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் என்பவற்றில் தமிழீழமே முடிந்த முடிவு என்பதற்கு ஆதரவாக தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்தளவில் வாக்களித்திருந்தனர்.

**அத் தேர்தல்களில் ஆளும் கட்சி வேட்பாளர்கள் மட்டுமன்றி, அன்றைய எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களும் மண் கவ்வியிருந்தனர்.**

தென்னிலங்கைக் கட்சிகளை மக்கள் நிராகரித்து, தமிழீழமே முடிந்த முடிவு, தன்மானமே எங்கள் மூச்சு என்று ஒரு கொடியின் கீழ் அணிதிரண்டு நின்றதை உலகம் உற்றுக் கவனித்தது.

எனவேதான், தமிழ் மக்கள் அரசுடன் நிற்கிறார்கள், ஐ.தே.கட்சி ஆட்சியில் நம்பிக்கை வைத்துவிட்டனர் என்று வெளியுலகில் காண்பிக்கக்கூடியளவில் மோசடியான தேர்தல் ஒன்றை யாழ் மாவட்டத்தில் நடத்த ஆட்சியாளர்கள் திட்டமிட்டனர்.

**அன்றைய ஆட்சியின் பிரதான அமைச்சரும், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரின் சிஷ்யருமான காமினி திசநாயக்கா தலைமையில் பெரும் குண்டர் படை ஒன்று யாழ் நகரில் முகாமிட்டிருந்தது. அந்தக் குண்டர்படையும், பொலிசாரும் சேர்ந்தே யாழ் மண்ணில் வெறித்தாண்டவமாடினர்.**

தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளை வெளியுலகின் முன்னால் திரித்துக் காட்டுவதுடன்; யாழ் நகரில் தாங்கள் நடத்திய வெறியாட்டத்தை மூடிமறைக்கக் கூடியதாக மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் முடிவை மாற்ற நினைத்திருந்தனர்.

எனினும் யாழ் மாவட்ட மக்கள் மிகவும் துணிச்சலுடன் வாக்குச் சாவடிகளுக்கு சென்றதுடன், கூட்டணியின் சின்னத்துக்கே பெருவாரியாக வாக்களித்திருந்தனர். அதனால் அத்தேர்தலில் வாக்குப் பெட்டிகள் பலவற்றை மாற்றியும், கள்ளவாக்குகள் போட்டும்கூட ஆட்சியாளர்கள் நினைத்ததை சாதிக்க இயலவில்லை.

இந்தியப் படை காலத்தில் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்,

பாராளுமன்றத் தேர்தல் என்பவையும் இந்திய அரசின் நோக்கங்களுக்கு ஏற்பவே நடந்து முடிந்திருந்தன.

**வடக்கு-கிழக்கில் அமைதி நிலவுகிறது, விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு கட்சிகளுக்கே மக்கள் ஆதரவு உண்டு போன்ற தோற்றப்பாடுகளை ஏற்படுத்தவே இந்திய அரசு விரும்பியது.**


எனினும் குறிப்பிட்ட தேர்தல்களில் வெற்றி பெற்ற கட்சிகளால் இனப்பிரச்சனைத் தீர்வில் பிரதான பாத்திரம் வகிக்க இயலவில்லை.

**கேலிக்கூத்தான தேர்தல்கள் மூலம் தங்களுக்கு பிடித்தமான முடிவுகளை எட்டுவது, தங்களுக்கு ஏற்ற தலையாட்டிகளை மக்களின் தலைமைச் சக்திகளாக காண்பிக்க முற்படுவது போன்ற அணுகுமுறைகள் இங்கும் தோல்விகளையே சந்தித்துள்ளன.**

ஆயினும், சில சமயங்களில் தற்காலிக வெற்றிகளை எட்டக்கூடும். ஏன் எனில் தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற சூழ்நிலை இருப்பதாக கணிப்பிடும்போதுதான் பிரச்சனைக்குரிய பிரதேசங்களில் ஆட்சியாளர்கள் தேர்தல்களை அறிவிக்கின்றனர்.

**அரசுக்கு எதிரான சக்திகள் தேர்தலில் போட்டியிட முடியாத சூழல், தேர்தல் முடிவுகள் தமக்கு பாதகமாக மாறும் என அரசு கருதுமானால், சாதகமாக மாற்றக்கூடிய வாய்ப்புக்கள், மக்களை கட்டாயப்படுத்தி வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு வரக்கூடிய நிலை, போன்றவை அனைத்தையும் ஆராய்ந்தே பிரச்சனைக்குரிய பகுதிகளில் தேர்தல் நடத்தும் முடிவுகள் எடுக்கப்படுவதுண்டு.**

பாதகமான சூழல் இருக்கும் எனக் கருதினால், ஜனநாயகம் பற்றிய தங்கள் முழக்கங்களை ஆட்சியாளர்கள் மூட்டை




கட்டி போட்டுவிட்டு, தேர்தல் நடத்த முடியாமையை நியாயப்படுத்தும் காரணங்களையே தேடுவர்.

1972ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தால் புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டது. தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் அந்த அரசியலமைப்பை எதிர்த்து தந்தை செல்வா அவர்கள் தனது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

**"புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்று நாம் கூறுகிறோம். ஏற்கின்றனர் என அரசாங்கம் கூறுகிறது. இதில் யார் சொல்வது சரியென்று அறிய காங்கேசன்துறையில் இடைத் தேர்தல் ஒன்றை நடத்துங்கள். தமிழ் மக்களின் தீர்ப்பைக் கேட்போம்"** என்று அறைகூவல் விடுத்தார் தந்தை செல்வா.

3.10.72ல் தந்தை செல்வா தனது பதவியைத் துறந்திருந்தார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் இரண்டு ஆண்டுகளாக இடைத் தேர்தலைப் பின்தள்ளி வந்தது.

இடைத்தேர்தல் நடத்தப்பட்டால் தந்தை செல்வா அவர்கள் மாபெரும் வெற்றி பெறுவதுடன், புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர் என்பதும் தெட்டத் தெளிவாகிவிடும் எனத் தெரிந்துதான் அரசாங்கம் பின்வாங்கிக் கொண்டிருந்தது.

அப்போது இடைத் தேர்தல் நடத்தப்படாமைக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் கூறிய காரணம், இன்றைய சூழலில் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாகும்.

**"வட பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அரசாங்க ஆதரவாளர்கள் தாக்கப்படுகிறார்கள். மனிதனை மனிதன் பிடித்துத் தின்பதைத் தவிர மற்றெல்லாக் கொடுமைகளும் அங்கு நடக்கின்றன"** என்று ஆட்சியாளர்கள் அன்று காரணம் கூறியிருந்தனர்.

அக் காலத்தில் இலங்கையிலேயே, அமைதிப் பூங்காக்களாக திகழ்ந்தவை வடக்கு-கிழக்குப் பகுதிகளாகும். அதே காலத்தில் கெஸ்பாவ, நுவரெலியா, புத்தளம், இரத்தினபுரி ஆகிய நான்கு தொகுதிகளில் அரசாங்கம் இடைத்தேர்தல் நடத்தியிருந்தது. இவற்றில் ஒரு தொகுதியில் ஆளும் கட்சி வேட்பாளர் சுடப்பட்டு காயமடைந்தார். அவ்வாறு நடந்தும் இடைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கவில்லை.

**எனவே, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் தமது நலன்களுக்கு ஏற்பவே ஜனநாயக உரிமைகளை வழங்குவதும், பறிப்பதும் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளாக தொடர்ந்து வருகின்றன.**

1972ல் காங்கேசன்துறையில் மனிதரை மனிதர் தின்னும் நிலை இருக்கவில்லை. ஆனால் இன்று யாழ் குடாநாட்டில் அறுநூறுக்கு மேற்பட்டோர் படையினரால் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதை சர்வதேச மன்னிப்புச் சபையே உறுதி செய்துவிட்டது.

1972ல் பதவியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர்தான் இன்றும் ஆட்சியில் உள்ளனர்.

**அன்று என்ன காரணம் கூறி தேர்தலை நடத்த மறுத்தனரோ, இன்று யாழ் குடாநாட்டில் அந்த நிலை உண்மையாகவே நிலவுகிறது. அப்படியிருந்தும் மாவட்டம் முழுக்க உள்ளூராட்சித் தேர்தலை நடத்திட நாள் குறித்திருக்கின்றனர்.**

இன்றைய சந்திரிக்கா அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் தென்னிலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒத்திப் போட்டு வந்தது. அதே சமயம் வடபகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப் போவதாக அறிவித்திருந்தது.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக நின்று, பின் தள்ளிப்போடக் கோரியதால்தான், பின்னர் வடபகுதி உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

**எனவே, 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது போன்றே, யாழ் குடாநாட்டில் ஆட்சியாளர்கள் தேர்தல் நடத்துவதும் தங்கள் சொந்த நலன்களுக்காக மட்டுமே என்பது தெள்ளத் தெளிவாக அவதானிக்கக் கூடியதாகும்.**

வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் ஒன்று தோன்ற வேண்டுமேயானால் போருக்கு முடிவு காணப்பட்ட பின்னரே சாத்தியமாகும்.

**அதுவரை மாகாணசபைத் தேர்தல்களோ, மாநகர சபைத் தேர்தல்களோ எவை நடைபெற்றாலும் அனைத்துமே வெறும் கண்துடைப்பாகத்தான் அமைந்திருக்கும்.**

இவ்வாறான தேர்தல்கள் அரசின் தீர்வு முயற்சியில் காணப்படும் தாமதங்களை மூடிமறைக்கவும் உதவுகின்றன.

தற்போதைய யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் அமளியானது, பல்வேறு தீர்க்கமான பிரச்சனைகள் மீதுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு கவனங்களை திசை திருப்பியுள்ளது.

**அரசியல் தீர்வொன்றை காண்பதில் ஏற்பட்டுள்ள நீண்ட இழுத்தடிப்பு தொடர்பாக சர்வதேச அரங்கில் ஏற்பட்டுவந்த அதிருப்திகள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன.**

**யாழ் குடாநாட்டில் பலியான அறுநூறுபேர் தொடர்பான அவலங்கள் வெளியுலகில் ஏற்படுத்திய தாக்கங்களை குறைத்துள்ளன.**

**மனித உரிமை மீறல்கள் காரணமாக கடன் வழங்கும் நாடுகள் உதவி செய்வதில் ஏற்படக்கூடிய தடைகளை அகற்றவும் இத் தேர்தல் பயன்படவுள்ளமை புலனாகின்றது.**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளில் இன்றுள்ள அதிகாரிகளால் செய்யக்கூடியதைவிட பெரிதாக எதுவும் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளால் செய்துவிட முடியாது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் நடத்தலாம் என தமிழ்க் கட்சிகள் கூறுவது, அவற்றின் அரசியல் வங்குரோத்துத்தனங்களையும், தங்கள் பதவி ஆசைகளுக்காக மக்களை ஏமாற்றும் காரணங்களைத்தேடுவதையுமே வெளிப்படுத்துகிறது.

**இக் கட்சிகள் மேற்கண்ட சபைகளில் இடம்பெறுவதால் மக்களுக்கு கிடைக்கும் இலாபங்களைவிட, மேற்படி சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் இலாபங்கள் பலமடங்காக இருக்கும் என்பதே உண்மையாகும்.**

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிராகரித்து, குறைந்த பட்ச தீர்வொன்றை திணிப்பதில் ஆட்சியாளர்கள் இறுதி வெற்றி பெறுவதற்கான கால அவகாசங்களையும் தேர்தல் அமளிகள் தேடிக் கொடுக்கின்றன.

தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலும் ஒட்டுமொத்தமான தமிழர் போராட்டத்தின் நலன்களை சேதப்படுத்துவதாகவும், அதற்கு யாழ் மாவட்ட மக்களின் வாக்குகளையே பயன்படுத்திக் கொள்ளும் புத்திசாலித்தனமான திட்டமாகவுமே அமைந்திருக்கிறது.

தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போடும் காரியத்தை யாழ் மாவட்ட மக்கள் செய்யுமாறு தமிழ்க் கட்சிகள் தூண்டிவருவதானது தமிழர் அரசியலில் ஏற்பட்டுள்ள மாபெரும் வீழ்ச்சியைக் கோடிட்டுக் காட்டுகிறது.

---

## சந்திக்கு வராத சங்கதிகள் ~நக்கீரன்~

# காணாமல் போகும் கொள்கைகள்

**ப**சி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பார்கள். பதவி ஆசை வந்தாலும் அப்படித்தான்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் தாங்கள் கடந்து வந்த பாதைகளையெல்லாம் மறந்துவிட்டன. கொள்கைகள், கோட்பாடுகளையெல்லாம் அவ்வப்போது அணிந்து கொண்ட சட்டைகளாக உரித்துப் போட்டுவிட்டன.

உள்ளூராட்சித் தேர்தலில் சாதி ரீதியாகவும், மத ரீதியாகவும் தரம்பிரித்துப் பார்த்து வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். அது மட்டுமல்ல, 'நாங்கள்தான் உங்கள் சாதிக்காரருக்கு இடம் கொடுத்திருக்கிறோம்' என்று கூறியும் வாக்குக் கேட்கிறார்கள்.

சாராய வியாபாரிகள், ஓடுகாலிகள், இன்னொரு இயக்கத்தில் இருந்து பஞ்சமா பாதகங்கள் செய்துவிட்டு தாவி வந்தவர்கள் என்று பல ரகங்களில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள்தான் தமிழ்க் கட்சிகள் மக்களுக்கு பரிசளிக்கப் போகும் உள்ளூர் தலைவர்கள்.

1977ம் ஆண்டுத் தேர்தலில் சாதி, மத, பிராந்திய பாகுபாடுகளுக்கு வேட்டு வைக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரே மக்களாக எழுந்து நின்ற காட்சியினை உலகம் கண்டது.

கிறிஸ்தவரான தந்தை செல்வா தமிழ்பேசும் மக்களின் தலைவராக உயர்ந்து நின்றார். மதம் அங்கே ஒதுங்கி நின்றது.

வராது வந்த மாமணிபோன்ற அந்த ஒற்றுமையை கட்டிக்காத்து, உரிமைப் போரை நடத்த கூட்டணித் தலைமை தவறியது.

தாம் முன்வைத்த கொள்கைகளுக்கு கூட்டணியினர் எந்தளவு விசுவாசமாக இருந்தனர் என்பது சந்தேகத்துக்குரியதாக இருக்கலாம். அதற்காக கூட்டணியினர் முன்வைத்த கொள்கைகள் தவறானவை என்று ஒருநாளும் அர்த்தமாகாது.

ஈரோஸ் முன்னாள் தலைவர் பாலகுமார் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டது போல, 'சரியான தொடக்கத்தை தவறானவர்கள் ஆரம்பித்து வைத்தனர்,' என்பதே பொருத்தம்.

கூட்டணியின் பின்னால் அன்று நின்ற இளைஞர்களும், யுவதிகளும் சாதி, மதப் பிரிவினைகளை எதிர்த்து உயிர்த்துடிப்புடன் செயற்பட்டனர். ஓடோடி உழைத்தனர்.

ஆனால், இன்று நடப்பது பெரும் கொடுமை. தமிழ்க் கட்சிகள் தங்கள் தேர்தல் வெற்றிகளுக்காக சாதி, மத பேதங்களைத் தட்டி எழுப்பத் தொடங்கியுள்ளன.

தேர்தல் வெற்றிக்காக எதையும் செய்யலாம். மக்களையும் ஏமாற்றலாம். களவும் பண்ணலாம். கள்ள வோட்டும் சேர்க்கலாம். கொள்ளைகள் வேண்டாம். வெற்றி பெற்றால் போதும் என்ற அபாயகரமான மனநிலையை தங்கள் உறுப்பினர்களிடம் தமிழ்க் கட்சித் தலைமைகள் ஊட்டி வருகின்றன.

தங்கள் உறுப்பினர்களை பதவி வேட்டைக்காரர்களாக மாற்றுவதன் ஊடாகவே, தங்கள் பதவி ஆசைகள் தவறானவையாக கருதப்படமாட்டாது என்று தலைமைகள் நினைக்கின்றனவோ?. எல்லோரையும் நனைத்துவிட்டால் தாங்கள் நனைந்து கொண்டிருப்பது யார் கண்ணிலும் உறுத்தாது அல்லவா.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுமளவுக்கு உள்ளூர்களில் மக்களிடம் பிரபலமான உறுப்பினர்கள், தங்கள் கட்சிக் கிளைகள் என்று எதுவும் இல்லாத நிலையில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட முன்வந்தமை துணிச்சல்தான்.

களைத்துப் போயிருக்கும் மக்களை அமர்க்களப் பிரசாரங்கள் மூலம் பிரமிப்பூட்டலாம், சாதி, மத உணர்வுகளால் கவரலாம், சீரற்ற சூழல் காரணமாக ஒவ்வொரு வேட்பாளரையும் யார் எவர் என்று ஆராயவோ, தங்கள் பகுதிக்கு போட்டியிட வேட்பாளர் இருக்கிறாரா? அல்லது டம்மியா? என்று கண்டுபிடிக்கவோ யாழ் மக்கள் முயற்சிக்கமாட்டார்கள் என்றெல்லாம் கணக்குப் போடுமளவுக்கு துணிச்சல் சென்றுள்ளது.

பக்கம் பக்கமாய் பத்திரிகை விளம்பரங்கள். ஏட்டிக்கு போட்டியான மாபெரும் சுவரொட்டிகள்! ஏன் இத்தனை செலவு செய்கிறார்கள்? இந்தப் பணத்தை வைத்து உள்ளூராட்சி சபைகளுக்கு செல்லாமலேயே வீதி விளக்குகள் போட்டுக் கொடுக்கலாமே. சேவை செய்யலாமே!

போட்டியிடும் சகல கட்சிகளுமே இன்றுவரை அரசை ஆதரித்து வருகின்றன. எங்கள் நட்புக் கட்சிகள் போட்டியிடுகின்றன என்று பொதுஜன முன்னணியும் கூறியுள்ளது. இதெல்லாம் யாழ் மக்களுக்கு தெரியாது என்ற நினைப்பில், அரசுக்கு எதிராக வீரமுழக்கமிடுவதும் துணிச்சல்தான்.

இதைப் பற்றியெல்லாம் யாழ் மக்கள் நினைத்துப் பார்க்க மாட்டார்கள் என்று தமிழ்க் கட்சிகள் எடைபோட்டிருக்கின்றன.

தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாண மக்களை சூடு சுரணை இல்லாத கூட்டமாக, சிந்திக்கும் திறன் இல்லாத மக்களாக கருதிக் கொண்டிருக்கின்றன.

யாழ் மக்கள் இந்த நினைப்புகளுக்கு கொடுக்கப்போகும் பதில் என்ன?

ஜனவரி 29ல் தெரியத்தான் போகிறது.

# கொள்ளை ராணி பூலான்தேவி 76

தருவது ரசிகன்

பூலானின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்ட சிறை அதிகாரி, அவளது தோளைத் தொட்டு அழுத்தினான்.

பூலான் அவனைப் பார்த்து கிறக்கமாகப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகை அவனை வதைத்தது. எட்டிப்பார்த்த அவளின் திரட்சிகள் மிகக் கிட்டத்தில் நின்று அவனை இம்சித்தன.

அவன் அவசரப்பட்டான். அவளின் தோளில் இருந்த அவனது கரம் அங்கிருந்து முன்புறமாக இறங்கி... பூலான் அந்தக் கரத்தை அங்கேயே வைத்து தன் கரத்தால் அழுத்திக்கொண்டாள்.

சிறை அதிகாரி சுயநினைவை தொலைத்தவன் போலானான். அவன் உடம்பு கொதித்தது. இதயத் துடிப்பு எகிறியது. பூலானின் இதயத்துடிப்பும் அவனது கைவழியாக அவன் மூளைக்கு எட்டியது. அவன் கை அவசரப்பட்டது. பரபரத்தது.

பூலான் அவனது காதருகில்: "நான் அழகாக இருக்கிறேனா?"

"ஐயோ... என்னை கொல்லுகிறாய்!" என்றான். அவளோடு மேலும் நெருங்கி அமர்ந்துகொண்டான். அவன் உடல் பட்டதும் பூலானுக்கு தீக்குப் பக்கத்தில் இருப்பதுபோலிருந்தது.

"உனது மனைவியைவிட நான் அழகா?" என்றாள்.

"அவள் கிடக்கிறாள் கழுதை. இந்த நேரத்தில் ஏன் நினைப்பூட்டுகிறாய்?" இன்னொரு கை நீண்டு பூலானின் கால்களை அளவெடுத்தது.

அவன் முழுமையாக பூலான் வசம் இழுக்கப்பட்டுவிட்டான். புஸ் புஸ் என்று மூச்சுவிட்டபடி பூலானைக் கட்டியணைக்கப் பரபரத்தான்.

பூலான் அனுமதித்தாள்.

பூலானின் உடல் தன் மேல் சாய்ந்ததும், இன்னும் மேலே செல்ல வேண்டும் என்ற ஏக்கம் அவனுக்குள் ஆக்கிரமித்தது.

சட்டென்று விலகிக்கொண்டாள் பூலான். சிறை அதிகாரிக்கு அதுவும் விளையாட்டாகத் தெரிந்தது.

"வாடி, போகாதே!" என்றான்!

பூலான், தன்னை மூடிக் கொண்டு வந்த போர்வைக்குள் கைத்துப்பாக்கி மறைத்துக் கொண்டுவந்திருந்தாள்.

கட்டிலின் ஒரு மூலையில் குவியலாய் போட்டிருந்த தன் போர்வைக்குள் கையை விட்டு, கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டாள் பூலான்.

சிறை அதிகாரிக்கு பூலானிடம் ஏற்பட்ட மயக்கத்தில் விபரீதம் உடன் புரியவில்லை.

"ஏய்... ஏய்.. என்ன இது விளையாட்டு?" என்றபடி அவளை நோக்கி கட்டிலில் நகர்ந்தான்.

"அசையாதேடா நாயே!" என்றாள்.

அவள் குரலில் இருந்த கண்டிப்பும், கண்களில் தெரிந்த உக்கிரமும் சிறை அதிகாரியை துணுக்குறச் செய்தது.

எவ்வித எதிர்ப்பும் இல்லாமலேயே கைகளைத் தன் தலைக்கு மேலே உயர்த்தினான்.

பூலான் எழுந்து கொண்டாள்.

அவனை காலால் உதைத்தாள். கட்டிலில் மல்லாந்தபடி கிடந்தான். கால்கள் மட்டும் நிலத்தில் இருந்தன.

அவனைப் பார்க்கப் பார்க்க பூலானுக்கு கோபம் கொந்தளித்தது. அணு அணுவாக சித்திரவதை செய்து கொல்ல வேண்டும்போல இருந்தது.

ஆனால் அவகாசம் இல்லை. நேரம் போதாது.

அவனை நோக்கிக் குனிந்தாள். அவன் கண்கள் மன்றாடின. அவன் முகம் வெளிறியிருந்தது.

அவன் வாய்க்குள் கைத் துப்பாக்கி முனையை செருகினாள் பூலான்.

தன் கதை முடியப் போகிறது என்பது மிக உறுதியாய், மிக நிச்சயமாய், மிகத் தெளிவாய் அவனுக்குப் புரிந்து போனது.

அவன் கைகள் மன்றாட்டமாக கும்பிட எழுந்தன.

அதனை பூலான் தவறாக விளங்கிக் கொண்டாள்.

எதிர்ப்புக்காட்ட முயற்சிக்கிறான் என்று நினைத்துவிட்டாள்.

சட்டென்று துப்பாக்கி விசையை அழுத்தினாள். வாய்க்குள் வெடித்தது.

கட்டிலில் உடல் துடித்துத் துடித்து நிரந்தரமாக இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

'பழிவாங்கும் படலத்தில் மற்றொரு நாய் செத்துப் போனது' என மனதில் குறித்துக் கொண்டாள்.

கைத்துப்பாக்கியை இடுப்பில் செருகிக்கொண்டு, சாவிக் கொத்தையும், சிறை அதிகாரியின் துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு சிறைக்குள் சென்றாள் பூலான்.

பழகிய சிறை என்பதால் ஆண்கள் வைக்கப்பட்டிருக்கும் சிறைப் பிரிவைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை.

நள்ளிரவு என்பதால் காவலுக்கு இருந்த ஒன்றிரண்டுபேரும் நிம்மதியான தூக்கத்தில் இருந்தார்கள்.

காவலன் ஒருத்தனுக்கு அருகே டோர்ச் லைட் உருண்டு கிடந்தது. அவனது குறட்டைச் சத்தம் மட்டும் மிரட்டிக் கொண்டிருந்தது.

டோர்ச் லைட்டை எடுத்துக் கொண்டு ஆண்களின் சிறைப்பிரிவுக்குள் உள்ள கூண்டுகளை ஒவ்வொன்றாக டோர்ச் லைட் வெளிச்சத்தால் அலசிக் கொண்டு சென்றாள் பூலான்.

ஆறாவது கூண்டுக்குள் பூலானின் ஆட்கள் சுருண்டு படுத்துக்கிடந்தார்கள். மேலும் ஒருத்தனும் படுத்திருந்தான்.

சிறைக் கூண்டுகளில் கைதிகளை இரட்டை எண்ணிக்கையில் அடைத்து வைக்கமாட்டார்கள். ஒற்றை எண்ணிக்கை வரத்தக்கதாகத்தான் அடைத்து வைப்பார்கள்.

அதுதான் பூலானின் ஆட்கள் இரண்டு பேருடன் இன்னொரு கைதியையும் சேர்த்துப் போட்டிருந்தனர்.

சாவிக்கொத்தில் இருந்த சாவிகளால் பூட்டை திறந்து பார்த்தாள் பூலான். பல சாவிகளை செருகிப் பார்த்துத்தான் பொருத்தமான சாவியைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

கூண்டு திறக்கப்படும் சத்தம் கேட்டு படுத்திருந்த மூன்று பேரும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து விட்டனர்.



பூலான்


பூலானைக் கண்டதும் அவளது ஆட்களின் முகங்கள் டோர்ச் லைட் வெளிச்சத்தை விடப் பிரகாசமாகிவிட்டன.

மூன்றாம் ஆளுக்கு ஒன்றுமே புரியவில்லை. மலங்க் மலங்க விழித்தான்.

"எங்கள் தலைவி பூலான் தேவி!" என்றனர் கிசுகிசுப்பாக.

பெயரைக் கேட்டதுதான் தாமதம், அப்படியே தரையோடு தரையாக விழுந்து பூலானின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டான் அந்தக் கைதி.

போர்வைகளை எடுத்துக் கொண்டு தன் பின்னால் மூன்று பேரையும் வருமாறு கூறிவிட்டு முன்னால் நடந்தாள் பூலான்.



பூலான் அந்தச் சிறையில் இருந்தவள் என்பது பூலானின் ஆட்கள் இருவருக்கும் தெரியாது. அதனால், பழக்கப்பட்ட இடம் போல பூலான் வழிகாட்டிச் செல்ல, அவர்களின் ஆச்சரியம் உயர்ந்தது.

சிறைவாயிலை அடைய முன்னர் அங்குள்ள காவலனை எப்படி மடக்குவது என்று தன் ஆட்களுக்குக் கூறியிருந்தாள் பூலான்.

உள்ளே நின்று பலமுறை கதவைத் தட்டிய பின்னர்தான் வெளியே நின்ற காவலனுக்கு சத்தம் கேட்டது.

வந்து கதவைத் திறந்து குனிந்து பார்த்தான். சட்டென்று அவன் கையைப் பிடித்து ஒரே இழுப்பாக உள்ளே இழுத்தாள் பூலான்.

அவன் சுதாகரிப்பதற்கு முன்பாக, பூலானின் ஆட்கள் இருவரும் போர்வையால் அவனை மூடி அமுக்கிக் கொண்டனர்.

அவன் திமிற, அவனிடமிருந்து நழுவிய துப்பாக்கியின் பிடியினால் தலையில் ஓங்கி ஒரே அடியாக அடித்தான் பூலானின் ஆள்.

காவலன் மடங்கி விழுந்து கிடந்தான். நால்வரும் வெளியேறினார்கள்.

பூலானும், அவளுடன் மூன்று பேரும் நடந்துவரும் காட்சியை பதுங்கியிருந்த மான்சிங்கும், ஏனையோரும் கண்டுவிட்டனர்.

மான்சிங்குக்கு அப்போதுதான் உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

பூலான் சென்றதில் இருந்து, அவள் ஆபத்து ஏதுமில்லாமல் திரும்பி வர வேண்டும், திரும்பி வரவேண்டும் என்று அவன் மனம் கிடந்து தவித்தது.

**கடந்த வாரம்**

**பூலான் குழுவில் இரண்டுபேரை பொலிசார் கைதுசெய்தனர். அவர்களை சிறையில் இருந்து மீட்கச் செல்கிறாள் பூலான். பூலான் முன்னர் சிறையில் இருந்தபோது–அவளை பலாத்காரம் செய்ய முயன்ற சிறை அதிகாரியை பழிவாங்கவும் திட்டமிடுகிறாள்.**

இனி...

பூலானைக் கண்ட சந்தோசத்தில் அவளுடன் மேலதிகமாக ஒருத்தன் வருவதுகூட மான்சிங்கின் புத்தியில் உறைக்கவில்லை.

மான்சிங்கும், அவனுடன் நின்றவர்களும் பூலானையும், மற்றவர்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அப்போதுதான் புதிய ஆளைக் கவனித்தான் மான்சிங்.

அவனைப் பார்த்ததும் மான்சிங்கின் முகம் சுண்டிப்போனதை பூலான் கவனிக்கவே செய்தாள். ஏன் என்றுதான் புரியவில்லை.

"நீ என்ன செய்யப்போகிறாய்? எங்காவது ஓடித் தப்பு!" என்றாள் பூலான்.

அந்தக் கைதி பூலானின் முன்பாக மண்டியிட்டு, "தாயே! என்னையும் உங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு விசுவாசமாக உழைப்பேன். நாய் மாதிரி உங்கள் கால்களைச் சுற்றிக்கொண்டு கிடப்பேன்!" என்றான்.

பூலானுக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மான்சிங்கைப் பார்த்தாள். அவன் மறுப்பேதும் சொல்லவில்லை.

மான்சிங்கின் போக்கு பூலானுக்குப் புதிராக இருந்தது.

"சரி வா!" அவனையும் அழைத்துக் கொண்டு சென்றனர்.

தங்கள் இடத்துக்கு அவர்கள் சென்ற போது பொழுது புலர்ந்து விட்டது.

சிறையில் இருந்த தம் சகாக்களை மீட்டுக் கொண்டு பூலான் வந்து விட்டதைப் பார்த்ததும், அங்கிருந்த பூலானின் ஆட்களுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

"பூலான் தேவிக்கு ஜே!" என்று முழக்கமிட்டனர். பூலான் மட்டும் ஆணாக இருந்திருந்தால் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு ஆடியிருப்பார்கள்.

அவர்கள் முழக்கமிட்டு முடித்ததும் மான்சிங்கின் குரல் எழுந்தது.

"எங்கள் கூட்டத்திற்கு வந்துள்ள புதிய ஆள் ஒருவரை நாங்கள் எல்லாம் மரியாதை செய்ய வேண்டியுள்ளது!" மான்சிங் கூறியதும் எல்லோரும் புதிய ஆளையே பார்த்தனர்.

பூலானுக்கு மான்சிங் ஏன் அப்படிக் கூறுகிறான் என்று தெரியவில்லை. கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு மான்சிங்கைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"இவர் யார் என்று தெரிந்தால் நீங்கள் எல்லோரும் மரியாதை செய்ய முண்டியடிக்கப் போகிறீர்கள்!" மான்சிங்கின் பேச்சு ஆவலைத் தூண்டியது. பூலானுக்கோ புதிராக இருந்தது.

புதிய ஆளின் முகத்தில் கலவர ரேகைகள் தோன்றுவதையும் பூலான் கவனித்தாள்.

"இவர் யார் என்று பார்த்ததுமே அடையாளம் தெரிந்து கொண்டேன். ஐயாதான் உத்தர பிரதேச பொலிசுக்கு நம்பிக்கையான கைக்கூலி."

பூலான் சட்டென்று நிமிர்ந்தாள். பொலிசின் ஆள் என்று தெரிந்ததும் பூலான் ஆட்கள் ஆவேசத்துடன் அவனை மொய்த்தனர்.

மான்சிங் தடுத்தான்.

"டேய், கைக்கூலி நாயே! உன்னை அடித்தே கொன்றுவிடுவார்கள். நீயாக உண்மையைக் கக்கினால் தப்புவாய். இல்லையோ, இரத்தம் கக்குவாயடா மகனே!"

புயலில் ஆடும் மரம்போல அவன் உடல் தடதடத்தது. கண்கள் பிதுங்கி வெளியே வந்துவிடும்போல இருந்தது.

"சொல்கிறேன். எல்லாவற்றையும் சொல்கிறேன். உயிர்ப்பிச்சை தாருங்கள்!"

"சொல்லடா பரதேசி!" மான்சிங் உறுமினான்.

"உங்கள் ஆட்கள் இரண்டுபேருடனும் பழகிப் பழகி பூலான் தேவியைப் பற்றிய விபரங்களை அறியச் சொன்னார்கள். அதுதான் இவர்கள் இருந்த சிறைக்குள் என்னையும் கைதிமாதிரி அடைத்து வைத்தார்கள்." அவன் மேற்கொண்டு எதையோ மறைக்கிறான் என்பது மான்சிங்குக்கு தெரிந்து விட்டது.

காலை விசிறி அவன் நெஞ்சில் இடியாய் இறக்கினான்.

"ஏனடா, எங்களோடு வந்தாய்?"

அவன் தயங்க, மான்சிங்கின் துப்பாக்கிப் பிடி அவன் விலாவில் விளாசியது.

"அய்...யோ.." சுருண்டு, புரண்டான்.

"சொல்லடா...!"

"சொல்கிறேன்... பூலான் தேவியை கண்டுபிடித்து கொன்றுவிட்டுவா. பத்தாயிரம் ரூபா தருகிறேன் என்றார்..." அவன் குரல் நடுங்கியது.

"எந்த வேசி மகனடா சொன்னான்?"

அவன் சொன்ன பதிலில் இன்னொரு இரை காத்திருந்தது.

(தொடர்ந்து வரும்)

## நிர்வாணம் பிறப்புரிமை

இந்திப்பட நடிகையான பூஜா பட்டின் படம் ஒன்று இன்டர்நெட்டில் வந்தாலும் வந்தது. சர்ச்சைப் புயல் சுழன்றடித்தது.

பூஜா அப் படத்தில் நிர்வாணமாக போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார். விவகாரம் விகாரமாகி பெண்கள் அமைப்புக்கள் கிளர்ந்தெழுந்தன. 'அது என் படமல்ல. 'ஸ்டார் டஸ்ட்' சினிமா இதழ்க்காரர்கள் செய்த கம்பியூட்டர் விளையாட்டு' என்று பல்டியடித்தார் பூஜா பட்.



ஆனால் பூஜா பட் எதற்கும் துணிந்தவர் என்பது தெரிந்த கதை. யாரும் அவர் சொன்னதை நம்பவில்லை. சமீபத்தில் அதிரடிப் பேட்டி ஒன்று கொடுத்திருக்கிறார் பூஜாபட். அதில் பூஜா கொட்டியுள்ள விளக்கங்கள் இவை:

"நீங்கள் ஒரு சினிமா நட்சத்திரம், ஒரு பெண். வாழ்வில் ஒரே ஒரு முறை நீச்சல் உடையில் தோன்றி விட்டீர்கள். அவ்வளவுதான். உங்களை ஒரு வழியாக முத்திரை குத்திவிடுவார்கள்.

என்னுடைய கடந்த காலப் படங்களுக்காக, இப்படி என்னை நிர்வாணமாக நிறுத்தி இன்டர்நெட் மூலம் பழிவாங்கி இருக்கிறார்கள்.

நிர்வாணமாக நிற்பது, போஸ் தருவது எல்லாம் ஒருவரின் பிறப்புரிமை. அப்படியே நின்றாலும் அந்தப் படத்தை பயன் படுத்த என் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

பெண்கள் அமைப்புக்கள் வந்தனர். நான் பணத்திற்காக போஸ் கொடுத்ததாக ஒப்புக்கொள்ளச் சொன்னார்கள். பொது மன்னிப்புக் கேட்கச் சொன்னார்கள். நான் மறுத்தேன். 'பூஜா ஒழிக' என்று கத்திவிட்டுப் போனார்கள்.

என்னை யாரும் நேசிக்கத் தேவையில்லை. நான் சிலரைத் திருப்தி செய்தால் போதும். எல்லோருடைய எதிர்பார்ப்புக்களையும் பற்றி நான் கவலைப்படத் தேவையில்லை. எனக்கு மகிழ்ச்சி தரக்கூடியது என் கல்யாணம் தான். அதுவே எனக்குப் போதும்."

மேற்கண்ட பேட்டியில் பூஜா பட் தன்னை மறைமுகமாக நியாயப்படுத்தி இருக்கிறார் அல்லவா? துணிச்சல் பட்!

## ஜடேஜாவின் காதலி

கிரிக்கெட் நட்சத்திரங்களுக்கும், சினிமா நட்சத்திரங்களுக்கும் இடையே உள்ள ஈர்ப்புச் சக்தி அறிந்த சங்கதிதான்.

அதிலும் இந்திய கிரிக்கெட் நட்சத்திரங்கள் என்றால், இந்திய நடிகைகளுக்கு தனிப்பிரியம்தான்.

இந்திய நடிகைகளின் அன்புப்பிடியில் சிக்கிய கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் சேர்ந்திருக்கிறார் அஜய் ஜடேஜா.

ஜடேஜாவை கொக்கி போட்டு இழுத்திருப்பவர், அல்லது ஜடேஜாவால் கொக்கி போட்டு இழுக்கப்பட்டவர் சோனாலி பந்த்ரே.

'பம்பாய்' படத்தில் பாடல் காட்சியில் குதிரைமாதிரி வந்து துள்ளி தமிழ்ப் பட இரசிகர்களையும் கவர்ந்தவர். தமிழ்ப் படம் ஒன்றில் (காதலர் தினம்) இப்போதும் நடித்து வருபவர் சோனாலி பந்த்ரே.



ஜடேஜாவும், சோனாலியும் அடிக்கடி ஒன்றாகக் காணப்படுகிறார்கள். மும்பாய் பத்திரிகையாளர்கள் மோப்பம் பிடித்து இருவரையும் ஒன்றாக வைத்து 'கிளிக்' பண்ணிவிட்டார்கள்.

ஜடேஜா எப்போதும் அழகை இரசிப்பவர். உலக அழகி ஐஸ்வர்யாராய் பற்றி ஜடேஜா சொன்ன கருத்து: "ஐஸ்வர்யா அழகானவர். ஓவியம் போன்றவர்" சோனாலி எப்படிப்பட்டவர்?!

## "மகாராணியே! கணக்கு என்ன?"

இங்கிலாந்து ராணி எலிஸபெத்துக்கும் அரச குடும்பத்தினருக்கும் எதிரான அதிருப்திகள் வளர்ந்து வருகின்றன.



எலிஸபெத் மகாராணியின் அரண்மனைச் செலவுக் கணக்கை ஆய்வு செய்ய வேண்டும் என்று பிரிட்டன் நாடாளுமன்ற அனைத்துக் கட்சிகளின் பொதுக் கணக்காய்வுக்குழு கோரியுள்ளது.

ஆண்டு ஒன்றுக்கு மகாராணியின் செலவு எவ்வளவு தெரியுமா? 4 கோடியே 30 இலட்சம் பவுண்ட். நம்நாட்டு மதிப்பில் சுமார் 404 கோடியே 20 இலட்சம் ரூபா. என்ன, தலை சுற்றுகிறதா?!

இப்படி தண்ணீராய் விரய மாகும் பணம் ராணியின் சொந்தச் சொத்து என்றால் யாரும் கவலைப்படமாட்டார்கள். எல்லாமே மக்களின் வரிப்பணம். அரசால் ராணி குடும்பத்துக்கு ஆண்டு தோறும் கட்டியழும் பணம்.

அரண்மனை நிர்வாக அலுவலர்கள், சமையல் கலைஞர்கள்,வேலைக்காரர்கள் என்று பெரும்பட்டாளமே ராணியைச் சார்ந்து வாழ்கிறது.அவர்களுக்கான குடியிருப்புக்கள், ஊதியங்கள் மற்றும் அரச குடும்ப ஆடம்பரங்கள் என்பவற்றுக்கு மக்களின் பணம் கரைகிறது.

கணக்கை ஆய்வு செய்ய மகாராணி அனுமதிப்பாரா? என்பது தெரியவில்லை.

## பணம் + பெண்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடி பெண்கள் விஷயத்தில் மகா சபலிஸ்ட் என்பது உலகம் அறிந்ததுதான்.



ஆனாலும் அவரது அந்தரங்கங்களை புட்டுப் புட்டு வைத்திருக்கிறது ஒரு புத்தகம். சிமோர்ஹெர்ஷ் என்பவர் இப்புத்தகத்தை எழுதி இருக்கிறார். அமெரிக்காவில் புத்தக விற்பனையில் இன்று முதலிடம் வகிப்பது அந்தப் புத்தகம்தான். அதில் உள்ள சில அதிரடியான தகவல்கள் பின்வருமாறு:

"இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்வதற்காக கனடாவின் பிரபல நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த நிறுவனத்தின் உரிமையாளர் பெயர், ஜியாங்கானா.

பல நிறுவனங்கள் போட்டி போட்டும் ஜியாங்கானாவுக்கு மட்டும் உரிமை எப்படிக் கிடைத்தது? கென்னடிக்கு பெரும் தொகைப் பணமும், ஜீடித் எக்ஸனர் என்னும் இளம் பெண்ணும் அன்பளிப்பாகத் தரப்பட்டதாம்.

கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோவை கொல்ல தொழிலதிபர் ஜியாங்கானா மூலம் சதி செய்தாராம் கென்னடி.

நடிகை மர்லின் மன்றோவுடன் கென்னடி கும்மாளமடித்தது பரகசியம். ஆனாலும் மர்லின் அதனை தன் வாயால் அம்பலமாக்காமல் இருக்க கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாராம் கென்னடி." இப்படி பல புதிய தகவல்களை அந்த நூல் அம்பலப் படுத்தி இருக்கிறது.

## வரம்பு மீறிய பொலிஸ்காரர்கள்

இங்கிலாந்தில் லாங்ஷையர் என்னும் இடத்தில் பொலிஸ் பயிற்சி மையம் இருக்கிறது. இங்கே விருந்து ஒன்று இடம் பெற்றது. அறுபது பொலிஸ்காரர்கள் வரை கலந்து கொண்டனர்.



மது தலைக்கேறியதால் பொலிசார் ஆட்டம் போட்டனர். 17வயது இளம் பெண் ஒருவரின் உடலில் ஐஸ்கிரீமையும், சொக்கலேட்டையும் ஊற்றி ருசி பார்த்தனராம்.

இந்தக் கிளு கிளு காட்சியை 'சண்டே' பத்திரிகை புகைப்படமாகப் பிரசுரித்தது. இதனை அடுத்து பிரச்சனை கிளம்பியது. விருந்தில் கலந்து கொண்ட பொலிசாரை பிடித்து பொலிஸ் உயர் அதிகாரி விசாரித்தார். மூன்று பொலிசார் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். (நல்ல வேளை விசாரணைக் கமிஷன் வைக்கவில்லை) இரண்டு பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தத் தண்டனையை விதித்தவர் ஒரு பெண் பொலிஸ் அதிகாரி. அவரது பெயர் பாவ்லின் கிளாரின்.

பிரிட்டனில் பொலிசாரின் விருந்துகளில் வழக்கமாக இவ்வாறான கிளுகிளுப்புக்கள் நடப்பதுண்டு. பெண் பொலிஸ் அதிகாரியின் அதிரடி நடவடிக்கைக்குப் பின்னர் பொலிஸ் விருந்துகள் அமைதியாக நடக்கிறதாம்.



← ஷெல் மழைகளால் கட்டடங்கள் பல காணாமல் போயின. எத்தனையோ கட்டிடங்கள் உருக்குலைந்தன.


வாழ்க்கையை நரகமாக்கினால் 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்று மக்கள் பணிந்து போவார்கள். சலுகைகளை கேட்டு கையேந்தி நிற்பார்கள் என நினைப்பது தொன்றுதொட்டு வலியோர் கைக்கொள்ளும் அணுகுமுறை.

இங்கு காணப்படுவது பொஸ்னியாவில் ஷெல் அடியால் உருக் குலைந்த பிரதேசம். நம்பிக்கை இழந்துவிடாமல் சோதனைகளை எதிர்கொள்ளும் பெண் போராளி. பெண்களுக்கு துணிச்சல் போதாது, சோதனைகளை எதிர்கொள்ளும் மனோ தைரியம் இல்லை என்பவர்கள் எங்கே போனார்கள்?!

கீழே இருப்பது ஜப்பான் நாட்டு பெண்கள் படையணி. காடுகளுக்குள் அதிரடி யுத்தப் பயிற்சி. உரு மறைப்பு செய்யப்பட்ட ஆடைகளுடன் தயார் நிலை.

↓ ஜப்பானில் 'செம்படை' என்னும் கொில்லா அமைப்பு உள்ளது. அந்த அமைப்பிலும் பெண்கள் உள்ளனர்.

படத்தில் இருப்பது செம்படைக் கொில்லாக்கள் அல்ல. ஜப்பானின் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். பெண்களுக்கான தனியான இராணுவ பயிற்சிக் கல்லூரியும் ஜப்பானில் ஆரம்பமாகியுள்ளது. ■



## போர்க்களத்து புயல்கள்

**போர்**களங்களில் பெண்கள் புயல்களாகிவிட்ட காலம் இது. பூத்தொடுக்க மட்டுமே இலாய்க்கான கரங்கள் என எள்ளி நகையாடியது அக்காலம்.

ஆரம்பத்தில் விடுதலை இயக்கங்களின் ஆயுதப்படைகளில்தான் பெண்கள் இணைந்து கொள்ளத் தொடங்கினர். பின்னர் அரச படைகளிலும் பெண்களுக்கு போரிடப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

இப்போது அமெரிக்க வல்லரசின் படைகளிலும் பெண்கள் படையணிகள் உள்ளன. போர்க்களத்தில் முதலுதவி நடவடிக்கைகள், மருத்துவ சேவைகள் என்பவற்றுக்கே பெண்கள் இராணுவம் பயன்படுத்தப்பட்டது.

தற்போது எதிரிகளின் அணிகளை எதிர்த்து புயல்களாகச் சாடுவதிலும் பெண்கள் சளைத்தவரில்லை என்று நிரூபித்தாகிவிட்டது. அதனால் பலநாடுகளில் போரில் நேரடியாக பங்குபெற்றும் பெண்கள் படையணிகள் உருவாகிவிட்டன.

← படத்தில் ஆயுதம் ஏந்திக் காட்சி தரும் இரு பெண் போராளிகளும் குர்திஷ் கொில்லா அணியைச் சேர்ந்தவர்கள்.

"கட்டுப் பெட்டித்தனமாக வாழ்ந்த எங்களை அடக்குமுறை போரிடத் தூண்டியிருக்கிறது. இரண்டில் ஒன்றை தீர்மானித்தாக வேண்டிய கட்டாயம். அடிமைத்தனத்தை சகித்தபடி வாழ்வதா? போராடி கௌரவமாக வாழ்வதா? பின்னதையே நாங்கள் தெரிவு செய்தோம்" என்கிறார்கள் இவர்கள். ■





## அதிரடிப் படை

↑ கொில்லாக்களை எதிர்த்துப் போராட விசேஷ பயிற்சிபெற்ற பெண்கள் படையணியைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

எனினும் பெண் கொில்லாக்கள் இவர்களை முறியடித்து விடுகிறார்கள் என்பதுதான் ஆச்சரியம். ■

## தகவல் பெட்டி

↓ ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று கனவு கண்டவர் மகாகவி பாரதி. அந்தக் கனவு முற்றிலும் நிறைவேறாவிட்டாலும், பெண்களின் முன்னேற்றம் ஆரம்பமாகியுள்ளது.

இந்திய நாட்டின் பெண் வீராங்கனைகள் தமிழ்நாட்டிலுள்ள இராணுவப் பயிற்சி மையத்தில் இறுதிப் பயிற்சி பெறும் காட்சி இது. டம்மிகளை நிறுத்தி குறிதவறாமல் சுட்டுத்தள்ளுகிறார்கள். நாட்டைக் காக்கும் கரங்கள் இனி ஆண்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்பதில்லை.

## காக்கும் கரங்கள்



## மீறல்கள்

↑ அமெரிக்காவின் இராணுவத்தைச் சேர்ந்த வீராங்கனைகள்தான் இவர்கள். அமெரிக்காவின் இராணுவம் பலமானது என்ற பீற்றல்கள் ஒரு புறம் இருக்க, பெண் இராணுவத்தினருக்கு எதிரான ஆண் அதிகாரிகளின் அத்துமீறல்கள் பற்றி ஏகப்பட்ட புகார்கள். நோக்கம் என்ற ஒன்று இல்லாவிட்டால் தேக்கங்கள் சகஜம்தான். ■



திரையுலக மறுபக்கம் 36

# பதினாறு அடி பாய்ந்தார் புதுமுகம்

## துன்பத்திலும் விலகாத நடிகையின் நட்பு

மண்வாசனை இயக்குநர் என்று அழைக்கப்படும் இயக்குநர்களில் முதல்வர் அவர். 'ரயில்' படத்தில் புது நடிகை தேடியபோது பிரபல நடிகரின் மகளான அந்தப் பெண் கிடைத்தார். வெளிநாட்டில் வளர்ந்த பெண் அவர். பிஞ்சிலேயே பழுத்தவர். பிரபல நடிகருக்கு பல மனைவியர். அதில் ஒரு மனைவிக்கு பிறந்தவர்தான் அவர்.

இயக்குநர்கள் புதுமுகம் தேடுவதில் புதிது புதிதாக நடிகைகளைக் காட்டி ரசிகர்களை கவர நினைப்பதும் ஒரு காரணம். இன்னொரு காரணம் இயக்குநர்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

நடிகரின் மகளை அழைத்து நடிக்கச் சம்மதமா? என்று இயக்குநர் கேட்டு முடிக்க முன்னரே, பச்சைக் கொடி காட்டப்பட்டுவிட்டது.

அதன்பின்னர் இயக்குநர் தன் வழக்கமான கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்தார். பிரபல நடிகரின் மகளாச்சே என்று இயக்குநரிடம் இருந்த கொஞ்ச நஞ்ச தயக்கத்தையும் புது நடிகையின் ஒத்துழைப்பு போக்கடித்துவிட்டது.

இயக்குநர் 'அந்த விசயத்தில்' எட்டடி பாய்ந்தால், நடிகை பதினாறடி பாய்ந்தார். இயக்குநருக்கு நடிகையின் அணுகுமுறை ரொம்பப் பிடித்துப் போனது.

அதன் பின்னர் படப்பிடிப்பில் தன்னுடன் இணைந்து நடித்த நடிகருடன் நடிகை தாராளமாக பழகியதும், காதலர்கள் போல நடந்து கொண்டதும் இயக்குநருக்கு தெரிந்ததுதான். ஆனாலும் இயக்குநரிடமும் அனுசரணையாக நடந்து கொண்டதால், நடிகை மீது இயக்குநர் கோபப்படவில்லை.

இன்றுவரை அந்த இயக்குநரின் அன்புக்கு பாத்திரமான நடிகையாகவே அவர் இருக்கிறார். இந்த சமாச்சாரம் நடிகையின் வெளிநாட்டுக் கணவருக்கும் அரசல் புரசலாகத் தெரியும்.

நடிகைக்கு பெயர் தேடித்தரக்கூடிய பாத்திரங்களையும் இயக்குநர் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். நடிகையும் நடிப்பில் வெளுத்துக் கட்டக் கூடியவர்தான். நடிகையின் சகோதரியும் ஒரு நடிகைதான் மூன்றெழுத்து 'ரா' நடிகருடன் கிசுகிசுக்கப்பட்டவர்.

### உண்மையான பிரிவு

சூப்பர் காந்தமான நடிகருடன் பல நடிகைகள் ஆரம்பகாலத்தில் ஒட்டி உறவாடினர். அதனை நடிகரே பல பேட்டிகளில் முன்னர் கூறியிருந்தார்.

நடிகரின் புகழையும், பணத்தையும் பங்குபோட்டுக் கொள்ளத்தான் பல நடிகைகள் அவரை தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டனர்.

பகல் முழுவதும் நடிப்பு. சில சமயங்களில் விடிய விடிய படப்பிடிப்பு என்று நடிகரை இயந்திரமாக மாற்றி வேடிக்கை பார்த்தது சினிமா உலகம்.

மது, மாது, பான்பராக் பீடா என்பவைதான் நடிகருக்கு புத்துணர்ச்சி கொடுத்தன. பணம் ஒரு புறம் குவிந்து கொண்டிருந்தது.

சரியான தூக்கம் இன்மை, திடீர் பணமும், திடீர் புகழும் ஏற்படுத்திய படபடப்பு எல்லாமுமாகச் சேர்ந்து நடிகரின் மனநிலையைப் பாதித்தன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவ்வளவுதான். அவர் கதை முடிந்து விட்டது. இனிமேல் நடிக்க முடியாது. பைத்தியம்தான் என்றெல்லாம் நாகூசாமல் புரளிகள் கிளப்பினார்கள்.

அவரை அறிமுகம் செய்த குருநாதரான இயக்குநர்தான் நடிகரை தன் பிள்ளைபோல கவனித்துக் கொண்டார்.

நடிகருடன் இன்பத்தை பங்கிட்ட நடிகைகள் பலர் மருத்துவமனைப் பக்கம்கூட எட்டிப் பார்க்கவில்லை. ஒரே ஒரு நடிகை மட்டும்தான் தினம் நலம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

இயக்குநரிடமும் "எப்படியாவது அவரை மீட்டுக் கொண்டுவாருங்கள். அவர் ஒரு சிறந்த மனிதர்" என்று சொல்லிக் கொண்டே இருந்தாராம்.

அந்த நடிகை வேறு யாருமல்ல; ஸ்ரீபிரியாதான். நடிகர் யார் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். இன்றும் நடிகருடன் மட்டுமல்ல, நடிகரின் குடும்பத்தினருடன் நட்பாக இருக்கிறார் ஸ்ரீபிரியா.



பிரபு-பிரியாராமன் படம் பொன்மனம்

## 'மனசுக்குள் வாரீயா'

விஜய் ஜோடியாக கௌசல்யா நடிக்கும் படம் 'பிரியமுடன்'. இப்படத்தில் விஜய் ஒரு பாடலை பாடியிருக்கிறார்.

மவுரியா, மவுரியா மனசுக்குள்ளே வாரீயா... என்று பாடல் ஆரம்பமாகிறது. இசை தேவா, பாடல் பழனி பாரதி. விஜய் பாட, அனுராதா ஸ்ரீராமும் சேர்ந்து பாடினார்.

மணிவண்ணன், நாசர், ஜெய்கணேஷ், அனிதா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## இறுதி எச்சரிக்கை

பார்த்திபன்-சங்கீதா, பார்த்திபன்- ஐஸ்வர்யா, பார்த்திபன்- ரவளி என்று பட்டியல் நீண்டுபோகிறது. பொறுத்துப் பார்த்தார் பார்த்திபனின் மனைவி சீதா. படப்பிடிப்பு ஒன்றில் சீதா கண்முன்னாலேயே பார்த்திபனுடன் கொஞ்சலாக பேசிக் கொண்டிருந்தாராம் ரவளி. "'அபிமன்யு'தான் நீங்கள் ரவளியுடன் நடிக்கும் கடைசிப்படமாக இருக்க வேண்டும்" என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார் சீதா.

## சுஷ்மிதா இரகசியம்

சுஷ்மிதா சென்னும், நாகார்ஜுனும் நகமும், சதையுமாகிவிட்டனர் என்பது மும்பாய் பத்திரிகைகளின் திட்டவட்டமான செய்தி.

அதற்கிடையே இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளது மும்பாய் இதழ் ஒன்று.

விக்ரம் என்பவரை நீண்டகாலமாக லவ்வி வருகிறார் சுஷ்மிதா. நாகார்ஜுன்-சுஷ்மிதா நெருக்கமும், ரட்சகனில் உதட்டோடு உதடு கொடுத்த முத்தங்களும் விக்ரமுக்கு பொறாமையை ஏற்படுத்தி உள்ளன.

"இப்படி ஏன் தாராளமாக கவர்ச்சி காட்டுகிறாய்?" என்று விக்ரம் கேட்டாராம். "உலக அழகிப் போட்டியில் நீச்சல் உடையில் தோன்றி அழகைக் காட்டித்தானே பட்டம் பெற்றேன். அப்போது நீ எங்கே போனாய்?" என்று பதில் கேட்டாராம் சுஷ்மிதா.

காதலை மூட்டை கட்டி எறிந்துவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம் விக்ரம்.

ஆனால் சுஷ்மிதாவுக்கு அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட நேரமில்லை. "டயானா போன்ற பாத்திரத்தில் நடிக்க அழைத்திருக்கிறார்கள். அது எத்தனை பெரிய பாக்யம்" என்று பூரித்துக் கொண்டிருக்கிறார்.



சுஷ்மிதா சென்

**"பனிவிழும் மலர்வனம்-உன் பார்வை ஒரு வரம்! இனி வரும் முனிவரும்-தடு மாறும் கனிமரம்! பனி விழும் மலர்வனம்!"**

(வைரமுத்து)

## காதோடு சொல்லுகிறோம்

மூவேந்தர்களில் ஒருவரது பெயரை தன் பெயரில் பாதியாகக் கொண்ட ராஜுவின் திருட்டு முழி வெகு பிரசித்தம். இணைந்து நடிக்கும் நடிகைகளை ஓரங்கட்டிப் போய் காதல் லீலை செய்வதில் இவரது பெயர் அடிக்கடி 'ரிப்பேர்' ஆகுவது வழக்கம். சமீபத்தில் இவரது மனதில் வாடகை இல்லாமல் குடியேறி இருக்கிறார் ரசிகமான நடிகை. நடிகரின் மனைவி இதனை அறிந்து தன் மூன்று பிள்ளைகளுடன் தாய் வீட்டுக்கு சென்றுவிட்டாராம். ஆனால் நடிகரோ 'குடும்பத்தில் எந்தக் குழப்பமும் இல்லை' என்று கூறிக்கொண்டிருக்கிறாராம்.

**வே**ட்டியை மடித்துக் கட்டிப் படம் எடுக்கும் நடிகருக்கும், மூன்றெழுத்து 'மா' நடிகைக்கும் இடையே கடைசி சென்ற இடத்தில் 'ஐக்கியம்' ஏற்பட்டது தெரிந்ததே. வேறு வழியில்லாமல்தான் நடிகை உடன்பட்டார். நாடு திரும்பிய பின்னர் நடிகையின் காதலரான 'குமார' நடிகர் கண்ணாடி நடிகரை ஃபோனில் அழைத்து சரக் சரக் என்று கிழித்து விட்டாராம்.

**நீ**டன நடிகருடன் 'ரம்ப' நடிகையின் 'நட்பு' மேலும் ஆழமாகி இருப்பதாக கோடம்பாக்கம் வட்டாரத்தில் தகவல். முக்கிய பிரமுகர் என்று அர்த்தம் வரத்தக்க ஆங்கிலப் பெயர் கொண்ட படத்தில் நடித்தபோதே இருவருக்கும் நெருக்கம் துளிர்விட்டிருந்ததாம். தற்போது ஆழமாகிவிட்டது. அந்த நெருக்கம் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படத்தின் காட்சிகளில் பளிச்சென்று தெரியுமாம்.

**ச**மீபத்தில் திருமணம் செய்துகொண்ட இளம் நடிகரை முன்புபோல ரசிகைகள் மட்டுமல்ல, நடிகைகள்கூட நாடுவது குறைந்துவிட்டது. நடிகர் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. தொல்லைகளில் இருந்து தப்பிக்கொள்ளத்தானே திருமணம் செய்துகொண்டேன் என்கிறார். உண்மைதானா?

**க**ஸ்தூரமான நடிகை சமீபத்தில் விருந்து ஒன்றில் கலந்துகொண்டாராம். தந்தைக் குலமும் கூடவே வந்திருந்தார். விருந்தில் மது நிரம்பி வழிந்தது. நடிகையும் தந்தையின் அனுமதியுடன் 'லிமிட்டோடு' ஊற்றிக்கொண்டாராம்.

## எங்கே ரஞ்சிதா?

ரஞ்சிதாவைக் காணவில்லை என்று அவரது வீட்டார் தேடாத இடமில்லை. பொலிசாருக்கு புகார் கொடுத்தால் வம்பாகிவிடும் என்று, இரகசியமாகத் தேடினார்களாம்.

ஒரு வாரத்தின் பின்னர் தகவல் கிடைத்தது. மலையாள நடிகர் ஒருவரின் பாதுகாப்பில் இருந்தாராம் ரஞ்சிதா.

பாதுகாப்பில் இருந்தது தப்பில்லை. திருமணம் முடித்தால் வருமானம் போய்விடுமே என்பதால் தாய்க்குலம் ஓடோடிச் சென்றாராம். சமாதானம் செய்து ரஞ்சிதாவை அழைத்து வந்துவிட்டாராம்.

குறிப்பிட்ட நடிகருடன் வரம்பு கடந்த நெருக்கம் வேண்டாம் என்று தாய்க்குலம் கண்டித்தாராம். அதுதான் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தாராம் ரஞ்சிதா.

## குழந்தை ஆசை

'பொன்மனம்' படத்தில் பிரபு- கவுண்டமணி தம்பதி[illegible] குழந்தையாக நடிக்கிறான் ராகுல். ஒரு வயது[illegible] கொழுக் மொழுக் என்றிருக்கும் ரா[illegible] மீது கவுண்டமணிக்கு உண்மையாக[illegible] ஆசை ஏற்பட்டுவிட்டதாம். "என[illegible] கல்யாணமானால் இப்படி[illegible] தான் பிறக்கவேண்டு[illegible] குழந்தை" என்று ரா[illegible] லைக் கொஞ்சி[illegible] தள்ளுகிறார்.

'பொன்மன[illegible] படத்தில் பிரபு[illegible] இன்னொரு[illegible] ஜோடியாக[illegible] பிரியா[illegible] ராமனு[illegible] நடி[illegible] கிறா[illegible]



சோனியா

## என்னடி மீனாட்சி?

மீனாட்சியின் நடிப்பைத்தான் காதலிக்கிறேன். மீனாட்சியைக் காதலிக்கவில்லை என்று இயக்குநர் சேரன் கூறுகிறார். ஆகவே மீண்டும் மீனாட்சிக்கு தன் படங்களில் சந்தர்ப்பம் கொடுக்க நினைக்கிறார் சேரன் என்பது தெரிகிறது.

யார் அந்த மீனாட்சி? மீனாவின் சொந்தப் பெயர்தான் மீனாட்சி. மீனா பிறந்தபோது மீனாட்சி என்று பெயர் சூட்டியவர் யார் தெரியுமா? தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனார்.

## மினி சினி

...சக்தி தற்போது வெற்றிகரமாக 'ஆஹா' படத்தின் தெலுங்கு ...வாங்கியுள்ளார். தெலுங்கில் இப்படத்தை சுரேஷ் கிருஷ்ணாவே இயக்கவுள்ளார்.

...தில் விஜய் ஜோடியாக அறிமுகமானவர் கீர்த்தனா. ...கீர்த்தனா? அக்காவைத் தொடர்ந்து இவரது தங்கை ...யில் நடிக்க இருக்கிறார்.

...சக்கை' படத்தை இயக்கிய வி.சி. குகநாதன் புதிய ...வாதி வேடத்தில் நடிக்கப்போகிறார். இப்படத்தை ...டிக்கிறார்.

...மூலம் அறிமுகமான பாபுகணேஷ் தற்போது தனது ...என்று மாற்றி வைத்துள்ளார்.

...- ரசிகா நடிக்கும் 'பிரார்த்தனா' படத்தில் பிரபல ...டாக்டர் வேடத்தில் நடிக்கிறார். இதற்கு முன் ...படத்தில் சிறிய வேடமொன்றில் நிர்மலா சுரேஷ்

...கஸ்தூரி-ரம்யா கிருஷ்ணன் நடித்த தெலுங்குப்படம் ...என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றப்பட்டுள்ளது. ...கஸ்தூரி சொந்தக் குரலில் பேசியுள்ளார்.

...நடிக்கும் 'அரிச்சந்திரா' படத்திற்கு கதை, ...கே. திவாகரன், பலகுரல் (மிமிக்ரி) நிகழ்ச்சிகள் ... இவர் 'அரிச்சந்திரா' படத்தில் நகைச்சுவை ...டிக்கிறார்.

...ரூடே' என்ற கன்னடப் படத்தில் கதாநாயகனாக ...போயிவேன் அந்தப் படம் முடிவடைவதற்கு முன் ...கன்னடப் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

...சன் தற்போது நடித்து வரும் 'லால்பாட்ஷா' ...த்தில் தந்தை- மகன் என இரட்டை வேடம். ...ஜோடியாக ராதிகாவும், மகனுக்கு ஜோடியாக ...சொர்ணாவும் நடிக்கிறார்கள்.

...மெரிக்காவில் இருந்து 'ராஜகுமாரன்' படத்தில் ...விட்டு அமெரிக்கா சென்ற நதியா, மறுபடியும் ...ஒன்றில் நடிப்பதற்காக இந்தியா வந்துள்ளார். ...இவர் நடிப்பது மலையாளப்படம் ஒன்றில்.

## சர்ச்சை மன்னன்

தமிழ்த் திரைப்பட நடிகர்களில் காதல் மன்னன் என்ற பட்டத்துக்கு ஏற்ப நடந்துகொண்டவர் ஜெமினி ... பல மனைவியர், பல காதலிகள் என்று கொட்டம் ...னாலும் ஒரேயொரு மனைவியுடன் மட்டும்தான் ...பிரியாமல் பிரியமுடன் இருக்கிறார்.

...பாப்ஜியை மணந்து 57 ஆண்டுகள் ஆகிவிட்டன. ...மனைவியர் வந்தனர், போயினர். பாப்ஜி மட்டும்தான் ...பிரியாமல் இருக்கிறார்.

...உடை முடியாத வாது வந்துவிட்டால் பின்னர் ...இல்லை' என்று ஜெமினி சமீபத்தில் பேட்டி கொடுத்... பெரிய சர்ச்சையாகிவிட்டது. "காதல் மன்னன் ...படுத்துகிறார். செக்ஸ் மட்டும்தான் வாழ்க்கையா?" ...வரிந்து கட்டிக்கொண்டு கேள்வி கேட்கிறார்கள்.

## நாயக வண்ணன்

சிக்கனமாக குடும்பப் படம் எடுத்து நிறைந்த இலாபமும், சிறந்த பெயரும் சம்பாதித்தவர் வி.சு. ஒரு கட்டத்தின் பின்னர் அவரது படங்கள் சரிவரப் போகவில்லை. இப்போது பிறர் படங்களில் நடிப்பதோடு, சன் ரீவியில் அரட்டை அரங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

குறைந்த செலவில் நிறைந்த பலன் பெறும் இன்னொருவர் இயக்குநர் வி. சேகர். இவரது படங்களுக்கு தாய்க்குலத்திடம் பயங்கர வரவேற்பு.

இதுவரை குடும்பப் படங்களையே எடுத்துவந்த வி. சேகர் முதன் முதலில் அரசியலை கேலி செய்யும் படம் ஒன்றை இயக்கப்போகிறார். கதாநாயகன் யார் தெரியுமா? மணிவண்ணன்.

## குண்டு தயார்

'மை டியர் குட்டிச் சாத்தான்' படத்தில் சிறுமியாக நடித்த சோனியாவின் சொக்கவைக்கும் படம்தான் இங்கே பிரசுரமாகியுள்ளது. 'வீரபாண்டிக் கோட்டையிலே' படம் வெளியான பின்னர் கவர்ச்சிக் குண்டு என்று பெயர் கிடைக்கும் என்று நம்புகிறார். குண்டுத் தாக்குதலால் ரசிகர்கள் பாடு என்னாகுமோ?

## அட அப்படியா!

'நிரோஷா இப்போது தனது வீட்டில்தான் தங்கியிருக்கிறார் என்பது கடைந்தெடுத்த பொய்' என்கிறார் ராம்கி. அதுமட்டுமல்ல, "நிரோஷாவை எப்போதும் நான் காதலித்ததும் கிடையாது" என்றும் முழுப் பூசனிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் அமுக்கப்பார்க்கிறார் ராம்கி.

## தபு ஆசை

'காதல் தேசம்' படத்தின் பின்னர் தபு தமிழில் நடித்து பொங்கலுக்கு வரப்போகும் படம் 'தாயின் மணிக்கொடி'. இந்தியாவின் சுதந்திரத்தின்தன்று வெளியிட நினைத்தார் அர்ஜுன். முடியவில்லை. தீபாவளி ரேஸில் தள்ளிவிட நினைத்தார். முடியவில்லை. இறுதியாக பொங்கல் விருந்தாக நாமுடிவு செய்திருக்கிறார்.

இந்தியாவின் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற தபுவுக்கு தமிழில் நடிக்கத்தான் ஆசையாம். 'காதல் தேசம்', 'தாயின் மணிக்கொடி' போல தரமான, பிடித்தமான படங்கள் கிடைத்தால் சம்பளத்தை சற்று இறக்கிக்கொள்ளவும் தயாராம்.



ராஜ்கிருஷ்ணா-சுலேகா
படம் ஆஹா




பிரபுதேவா-ரம்பா
படம் காதலா காதலா

## மாயஜாலப் படம்

### ராஜேந்தருடன் விஜயசாந்தி

சகலகலா வல்லவரான டி.ராஜேந்தரும் சூப்பர் ஸ்டாரினி விஜயசாந்தியும் இணைந்து கலக்கப்போகிறார்கள்.

இதுவரை அடிதடி என்று தூள் கிளப்பிக் கொண்டிருந்த விஜயசாந்தி, தெய்வ சக்திமிக்க தாயாக நடிக்கப்போகிறார். படத்திற்கு, 'சக்தி பெற்ற வேலன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

டி.ராஜேந்தர் சொந்தமாக தயாரித்து இயக்கப்போகிறார். கதை, வசனம், பாடல்கள், ஒளிப்பதிவு, எடிட்டிங், இசை ஆகிய பொறுப்புக்களையும் ராஜேந்தர் ஏற்றுள்ளார்.

கம்பியூட்டர் கிராபிக்ஸ் முறையில் மந்திர தந்திரக் காட்சிகள், சண்டைக் காட்சிகள் எடுக்கப்படவுள்ளன. தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் பல கோடி ரூபாய் செலவில் தயாராகப் போகிறது.

ராஜேந்தரின் மகன் குறளரசன் வேலனாக நடிக்கிறார். இந்து வருடங்களுக்கு முன்னர் 'எங்க வீட்டு வேலன்' படத்தை ராஜேந்தர் எடுத்தார். அதில் அவரது மூத்த மகன் சிலம்பரசன் வேலனாக நடித்திருந்தான்.

## ரஜினியின் நாயகி சிம்ரான்

சினிமாவில் இருந்து ரஜினி ஒதுங்குகிறார் என்று வதந்தி கிளம்பியதல்லவா. அதற்கு விரைவில் விழப்போகிறது முற்றுப்புள்ளி.

ரஜினியின் அடுத்த படம் பற்றிய அறிவித்தல் விரைவில் வெளியாகும். ரஜினிக்கு ஜோடி யார் தெரியுமா? சிம்ரான்.

சிம்ரானின் மனேஜரான முனுசாமியை நேரில் அழைத்து ரஜினி பேசிவிட்டார்.

ரஜினி அழைத்தால் எப்போதும் தயார் என்று கூறிவிட்டார் சிம்ரான். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்!



தபு

## முரளி ராசி

...ஆஹா' படத்தில் முதலில் ...முரளியைத்தான் நடிக்கக் கேட்...ர்கள். கதை பிடிக்காததால் ...விலக்கிக்கொண்டார். இப்போது ...வெற்றிகரமாக ஓடிவிருக்... சே... வாய்ப்பை நழுவ...விட்டோமே' என்று முரளி ...கவலைப்பட்டிருப்பார்.

...ஆஹா' படத்தில் நடித்ததை ...நினைத்து ஒருத்தர் கவலைப் ...கொண்டிருக்கிறார். அவர் ...சிறு வேடத்தில் நடித்ததால், ...குண்டுக் காட்சிகளில் நடிக்க ...கொண்டிருக்கிறார்களாம். ...கிறார் சுகன்யா.

## ஆனந்தசாமியார்கள்

'காதலா காதலா' படத்தில் போலிச் சாமியார் விவகாரத்தை ஒரு பிடி பிடித்திருக்கிறார்களாம். கிரேஸி மோகனும், வி.எம்.சி.ஹனிபாவும் சாமியார்களாக வருகிறார்களாம். ஒருவர் பெயர் ஆனந்த விகடானந்தா. இன்னொருவர் பெயர், ஜூனியர் விகடானந்தா.

கல்யாண ராமன் படத்தில் ஆவியாக வரும் கமல் போன்ற மேக்அப்புடன் கமல் சில காட்சிகளில் வருகிறாராம். வயிற்றைப் புண்ணாக்கியே தீருவோம் என்ற நம்பிக்கையோடு பல காட்சிகளை படமாக்கி உள்ளனராம்.

## எல்லாமே தங்கச்சி

'பொற்காலம்' படத்தில் அந்தக் கால சுஹாசினி சாயலில் தோன்றிய நடிகை ராஜேஸ்வரி, முரளியின் ஊமைத் தங்கையாக நடித்து, கண்களால் பேசியே அசத்தியிருக்கிறார்.

'பொற்காலம்' பெருவெற்றி பெற்றுவிட்டதால் ராஜேஸ்வரிக்கு மளமளவென்று புதிய படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன. ஆனால், ஒரே ஒரு குறை. ஒப்பந்தமாகியுள்ள எட்டுப் படங்களிலும் தங்கை வேசம்தான்.

'மூவேந்தர்' படத்தில் சரத்குமாரின் தங்கையாக நடிக்கிறார். நிஜத்தில் ராஜேஸ்வரிக்கு அக்கா, தங்கை, அண்ணன், தம்பியாரும் இல்லை. வீட்டில் ஒரே பிள்ளை!

## 'லவ் லெட்டர்'

இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் படத் தயாரிப்பாளராகிறார். தமிழிலும், இந்தியிலும் அவர் தயாரிக்கும் படத்திற்கு 'லவ் லெட்டர்' என்று பெயர் சூட்டியுள்ளனர். மிஸ்டர் ரோமியோ படத்தை இயக்கிய கேஸ்ரவி படத்தை இயக்குகிறார்.

முன்னணி நடிக, நடிகைகள் நடிக்க உள்ளனர். ரகுமான் படம் என்றால் 'ஓகே' சொல்ல கியூவில் நிற்பார்கள்.

## கொழு கொழு குழந்தை வேண்டுமா?

பிறக்கும் குழந்தை ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமானால் கருவுற்றிருக்கும் போதே பெண்கள் உடல் நலம் குறித்து அதிக அக்கறை கொள்ள வேண்டும்.

கர்ப்பம் என்று தெரிந்தவுடன் ஐந்து முறையாவது மருத்துவரை அணுகிப் பரிசோதனை செய்தல் வேண்டும். 3-4வது மாதத்தில் ஒரு முறையும், 5-6வது மாதத்தில் இரண்டாவது முறையும், 7-8வது மாதத்தில் மூன்றாவது முறையும், 8 – 9 வது மாதத் தில் நான் காவது முறையும், 9-10வது மாதத்தில் ஐந்தாவது முறையும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.



கர்ப்ப காலத்தில் முதல் மூன்று மாதங்களும் கடைசி மூன்று மாதங்களும் உடல் உறவு கொள்ளாமல் இருப்பது நல்லது.

இரும்புச்சத்து மிகுந்த அகத்தி, முருங்கை, புளிக் கீரை, பொன்னாங்கன்னி போன்ற கீரை வகைகளையும், கத்தரி, வெண்டி, முருங்கை போன்ற காய் வகை களையும், வாழை, பேரீச்சை, மாதுளை, பப்பாளி, அப்பிள் போன்ற பழங்களையும் ஈரல், மீன் போன்றவற்றையும் சாப்பிட வேண்டும். பட்டினி கிடப்பது கூடவே கூடாது.

கர்ப்ப காலத்தில் அதிக சத்துள்ள உணவு சாப்பிட்டால் குழந்தை பருத்து விடும் என்ற கருத்து தவறானது. சரியான சத்துணவைத் தாய் சாப்பிடவேண்டும்.

ஊர்க்கோழி முட்டைதான் சிறந்தது என நினைக்க வேண்டாம். எல்லாக் கோழி முட்டைகளும் சத்து நிறைந்தவைதான்.

பசும்பால் அல்லது எருமைப்பால், மீன், இறைச்சி, நெய், நல்லெண்ணெய், தயிர், மோர் ஆகியவையும் நல்லதுதான்.

சிறுநீரைப் பெருக்கக்கூடிய உணவுகளைச் சாப்பிட வேண்டும். சிறு நீரக நோய்கள் வராமல் இருக்க வெள்ளரிப்பழம், தர்ப்பூசனிப்பழம் ஆகியவற்றை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்ளவும்.

கொதிக்க வைத்து ஆறிய நீரைத்தான் தினமும் பருக வேண்டும். தினமும் சோம்பு அல்லது சீரகத் தண்ணீர் அருந்தி வர நீரும் நன்றாகப் பிரிந்து வாய்வுத் தொந்தரவும் இருக்காது.

பகலில் உணவு உண்ட பின் குறைந்தது அரை மணி நேரமாவது ஓய்வு எடுப்பது அவசியம். உடல் அசதிக்குத் தக்கவாறு ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது. சக்திக்கு மீறிய வேலைகளில் ஈடுபடக்கூடாது. இரவில் அதிக நேரம் தூக்கம் கொள்ள வேண்டும்.

குறைந்தது ஆறுமணி நேரம் தூங்க வேண்டும்.

ஈரமான இடங்களிலும் கரடு முரடான இடங்களிலும் படுக்கக் கூடாது. இடதுபுறம் ஒருக்களித்துத்தான் படுக்கவேண்டும். வெறும் தரையில் படுக்கக்கூடாது.

வீட்டு வேலைகளைச் செய்வதும், குறு நடை நடப்பதும் நல்லது. வேலைகளைச் செய்யாமல் இருந்து விடக்கூடாது. இவர்களுக்குக் கோபம், பயம், மனவருத்தம் முதலியவற்றை உண்டாக்கக் கூடிய காரியங்களை ஒருவரும் செய்தல் கூடாது.

ஆரம்ப கர்ப்ப காலத்தில் பயணம் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். தேவையெனில் இரயில் பயணம் சிறந்தது.

கர்ப்ப காலத்தில் மருத்துவரின் ஆலோசனையுடன்தான் மருந்துகளைச் சாப்பிட வேண்டும். முக்கியமாக முதல் மூன்று மாதங்களில் மருந்துகளைத் தவிர்க்க வேண் டும். ஒவ்வாத மருந்துகளைச் சாப்பிடக் கூடாது.

யுனிசெ ஃப் ஆதரவுடன் வெளியிடப்பட்டுள்ள சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி மருத்துவர்களுக்கான தாய்- சேய் நலப் பாதுகாப்புக் குறித்த பயிற்சிக் கையேட்டிலிருந்து ...

## கண்ணீரில் கரைந்த இரவுகள் 16

**புவனா**

இளவரசர் சாள்ஸ்சின் தாழ்வு மனப்பான்மை டயானாவுக்கு கவலையளித்தது. அதனை அகற்றும் விதமாக நடந்து கொள்வது எப்படி என்று யோசனையாக இருந்தது.

'பிரிட்டானியா' கப்பலில் தேனிலவை கழிப்பதில் டயானா மகிழ்ச்சியாக இருந்தாலும் அங்கும் ஓர் இடையூறு இருந்தது.

கப்பலில் அவர்களது அறைக்கு முன்புறம் இருந்து இசைக்கலைஞர்கள் இசை மழை பொழிந்து கொண்டிருந்தனர்.

அரச குடும்ப தேனிலவு அப்படித்தான் இருக்கும் என்பதால், அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டாள் டயானா.

இசைக்கலைஞர்களுடனும், கப்பல் அதிகாரிகளுடனும் சமமாகப் பழகினாள். ஆடிப் பாடினாள்.

தங்களுக்கு கீழ்ப்பட்ட அதிகாரிகள் மற்றும் சிப்பந்திகளுடன் டயானா சமமாகப் பழகுவது சாள்ஸ்சுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

சாடைமாடையாகச் சொல்லிப் பார்த்தார். அந்த விடயத்தில் சாள்ஸ்சுக்காக டயானா விட்டுக்கொடுக்கவில்லை.

"ஏன், அவர்களும் மனிதர்கள்தானே, எங்களைச் சுற்றி இருக்கிற மனிதர்கள். எங்களுக்கு மட்டும் என்ன கொம்பா முளைத்திருக்கிறது?" ஜோக் அடிப்பதுபோல் கூறி சாள்ஸ் வாயை சாத்திவிட்டாள் டய்யானா.

அதன் பின்னர் சாள்ஸ் சகித்துக் கொண்டுதான் இருக்கவேண்டியதாயிற்று. டயானா எப்போதும்போல எல்லோருடனும் சமமாகவும், இயல்பாகவும் பழகிக்கொண்டிருந்தாள்.

தேனிலவு முடிந்து இங்கிலாந்துக்கு திரும்பியபோது, மாளிகையில் குவிந்து கிடந்த சஞ்சிகைகள் அனைத்திலும் தனது புகைப் படங்கள் வெளியாகி இருப்பதைக் கண்டாள்.

'பீப்பிள்' என்ற சஞ்சிகையில் மட்டும் டயானாவின் வர்ணப்படங்கள் 47 தடவைகள் முன்பக்க அட்டையை அலங்கரித்திருந்தன.

அந்தப் புகைப்படங்கள் எப்போது எடுக்கப்பட்டன, என்பதுதான் டயானாவுக்கு மாபெரும் ஆச்சரியமளித்தது.

டயானாவுக்கு ஆச்சரியம் ஒருபக்கம், 'திரில்' ஒருபக்கம் என்றால், சஞ்சிகைகளைப் பார்த்த இளவரசர் சாள்ஸ்சுக்கு முகம் கறுத்துவிட்டது.

டயானாவின் படங்களை மட்டுமே அநேகமான சஞ்சிகைகள் வெளியிட்டிருந்தன. சாள்ஸ் ஓரத்தில்கூட இல்லை.

அழகான, இளம் மனைவி தன் அருகில் இருக்கும்போது, தன்னை எவரும் இனிமேல் கவனிக்கப்போவதில்லை. எல்லோருடைய விழிகளும் மின்னும் நட்சத்திரத்தை நோக்கியே செல்லும். அந்த நட்சத்திர பிரகாசத்தின் பின்னணியில் தான் ஒரு நிழலாகக்கூட தெரிவேனா, என்று சாள்ஸ் எண்ணலானார்.

முரண்டு பிடித்தால், அரச குடும்ப மரு மகளாக இருக்க இலாயக்கற்றவள் என்று முடிவு கட்டிவிடுவார்கள். அதனால் விருப்பமில்லாவிட்டாலும் அனுசரித்து நடக்கலானாள்.

### பாரமான உடை

உடைகளில்கூட அரச குடும்ப மரபு பேணப்படும்.

குடைபோன்று விரிந்த பாவாடை அணியும்போது, அதன் அடிமடிப்பில் பாரமுள்ள அணிகள் வைத்துத் தைக்கப்பட்டிருக்கும்.

உடையின் பாரத்துடன் அந்தப் பாரத்தையும் தாங்கியாக வேண்டும். தற்செயலாக காற்றடித்தால் பாவாடை உயர்ந்து விடாமலிருக்கத்தான் அந்த ஏற்பாடு என விளக்கியபோது டயானாவால் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

அரச குடும்பப் பழக்க வழக்கங்களை டயானா அனுசரித்து நடக்கத் தொடங்கியது சாள்ஸ்சுக்கு மகிழ்ச்சி தந்தது.

சாள்ஸ்சும்,டயானாவும் வேல்ஸுக்கு உத்தியோகபூர்வமாகச் சென்றபோது டயானா அரச குடும்ப மருமகள் போன்று மிடுக்காக நடந்து கொண்டாள்.

### காத்திருந்த பிரபுக்கள்

வேல்ஸ் மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பிரபுக்கள், பெரும் புள்ளிகள் அனைவரும் டயானாவுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

டயானாவின் புன்னகைக் காகவும், டயானாவின் பார்வை ஒரே ஒரு முறை தங்களை வருடி விட்டு செல்வதற்காகவும் மதுக்கோப் பைகளை சூப்பிக்கொண்டு அவர்கள் காத்துக் கிடந்தனர்.

இளவரசர் சாள்ஸ்சுடன் கைகுலுக்கும் போதுகூட பிரபுக்களின் கண்கள் டயானாவையே மேய்ந்தன.

டயானாவும் கவர்ச்சியான உடைகளில் சில நிகழ்ச்சிகளில் தோன்றினார். அந்த உடைகள் டயானாவின் உடல் வனப்பை கண்கள் பருகக்கொடுத்தன.

கண்ணால் கண்ட காட்சிகள், கண்ணால் காணாத காட்சிகளை நினைத்து பிரபுக்களை ஏங்கவைத்தன.

பெரிய மனிதர்கள் என்ற தோரணைகளின் பின்னால் மறைந்துகிடந்த சின்னச் சின்ன ஆசைகளை டயானா முன்பாக அவர்களால் தடுத்து வைக்க முடியவில்லை.

மரியாதையுடன் செய்வதைப்போல,டயானாவின் புறங்கையில் முத்தமிட்டபோது, தாங்கள்



வந்தன.

பத்திரிகைகளில் செய்திகளைப் பார்த்ததும் நண்பிகள் துக்கம் விசாரிப்பதுபோல ஃபோன் செய்து பேசும் பேச்சுக்கள் தான் டயானாவை மேலும் கவலை கொள்ள வைத்தன.

டயானாவின் மூத்த சகோதரி ஜேன் ஒருமுறை விருந்துக்கு வந்திருந்தாள். டயானாவும்,அவளும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

சாள்ஸ்- கமீலா பற்றி வெளியாகும் செய்திகள் தொடர்பாக டயானா தன் சகோதரியிடம் பிரஸ்தாபித்தாள்.

இளவரசர் சாள்ஸ்சுடன் மிக நெருக்கமாகப் பழகியவளான ஜேனுக்கு சாள்ஸ்சின் குணம் தெரியாததல்ல.

சிறிது நேரம் மௌனமாக உணவுண்டு கொண்டிருந்த ஜேன், "டச்... உனது நிலை பரிதாபமானது. கறிச்சட்டிக்குள் இருக்கும் கோழிக்குஞ்சு ஆகிவிட்டாய்," என்றாள் ஜேன்.

டயானாவை 'டச்' என்றுதான் ஜேன் அழைப்பது வழக்கம். சகோதரி கூறியதைக் கேட்டதும் டயானாவுக்கு ஆழ்ந்த மனக் கவலை ஏற்பட்டுவிட்டது. எனினும் மனோதிடத்தோடு எதனையும் எதிர்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

எப்படித்தான் மனோதிடம் இருந்தாலும் கமீலாவைக் காணும் போதும், சாள்ஸ்சுடன் கமீலா சிரித்துப் பேசுவதைக் காணும்போதும் எரிச்சலாக இருக்கும். அன்று முழுக்க சரியாக சாப்பிடக் கூட முடியாமல் புழுங்கிக் கொண்டிருப்பார்.

ஆரம்ப நாட்களில் டயானாவிடம்

## பிரபுக்களைக் கவர்ந்த தேவதை



சாள்ஸ்-கமீலா

அரச குடும்பப் பழக்க வழக்கங்களை டயானா படித்துப் பார்த்து பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

அந்தப் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களில் பெரும்பாலானவை நகைப்புக்கிடமாகவும், அனாவசியமானவையாகவும், படு செயற்கையாகவும் இருந்தன.

மக்களிடம் அரச குடும்பம்மீது பலவந்தமாக மரியாதையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பல சம்பிரதாயங்கள் அமைந்திருந்தன.

அரச குடும்பத்தின் நடத்தையாலும், அவர்களுக்கு மக்களிடம் உள்ள தொடர்பாலும் மக்களின் மரியாதையைப் பெறவேண்டுமே தவிர, கட்டாயப்படுத்தியோ, போலியான சம்பிரதாயங்கள் மூலமோ மரியாதை பெறமுடியாது என்பது டயானாவின் எண்ணமாக இருந்தது.

ஆனாலும் சகல விடயங்களிலும்

ஒரு தேவதையை ஸ்பரிசித்துவிட்டதாகவே அவர்கள் சிலிர்த்தனர்.

சாள்ஸ்- டயானா தம்பதியின் ஜோடிப் பொருத்தம் பற்றி உலகமே வியந்து கொண்டிருந்த நாட்கள் அவை.

இடைக்கிடையே தாழ்வு மனப்பான்மை எட்டிப்பார்த்தாலும் சாள்ஸ் டயானாமீது பிரியமாக இருக்கவே முயன்றார். டயானாவும் சாள்ஸ்சை மனப்பூர்வமாக நேசித்தாள்.

சாள்ஸ்சுக்காக தன் பிடிவாத குணங்கள் சிலவற்றை விட்டுக் கொடுக்கவும், சில பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ளவும் டயானா முன்வந்ததும் அதனால்தான்.

இக் காலகட்டத்தில் கமீலா அடிக்கடி டயானாவைச் சந்தித்தார். டயானாவுடன் நெருக்கமாகப் பழக கமீலா விரும்பியபோதும், டயானா அதற்கு இடமளிக்கவில்லை.

"என்ன சாள்ஸ் உன்னை படாத பாடு படுத்துகிறாரா? திருமணத்தின் பின்னர் மெலிந்து காணப்படுகிறாயே? சரியான தூக்கம் இல்லைப் போல் இருக்கிறது. புதிதில் அப்படித்தான் ஆர்வம் இருக்கும்...," என்று கமீலா கூறுவாள்.

அந்தப் பேச்சுக்களுக்கு டயானா வெட்கப்பட்டுச் சிரிப்பார் என்றோ, முகத்தை மூடிக்கொள்வார் என்றோ கமீலா நினைத்திருந்தால், ஏமாற்றம்தான்.

டயானா ஒப்புக்காகக்கூட சிரிப்பதில்லை. சில சமயம் முகத்தை சிடு சிடுப்பாக வைத்திருப்பாள்.

ஆனால் கமீலா அதற்கெல்லாம் மசியும் ஆளில்லை.

"என்ன முகம் ஒரு மாதியாக இருக்கிறது. கஷ்டமாக இருக்கிறதா? எல்லாம் போகப் போக சரியாகிவிடும்!" என்று அதற்கும் ஒரு காரணம் தானாகக் கூறி விட்டுப் போய்விடுவாள்.

### கமீலாவால் குழப்பம்

கமீலாமேல் டயானாவுக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் படிப்படியாக வளரத் தொடங்கின. பத்திரிகைகளும் கமீலாவுக்கும் சாள்ஸ்சுக்கும் இடையில் அந்தரங்க உறவுகள் நிலவுவதாக தொடர்ந்து எழுதி

காட்டிய ஆர்வம் சாள்ஸ்சிடம் குறையத் தொடங்கியது.

என்னதான் இளமையாக டயானா இருந்தாலும், கமீலாவிடம் கண்ட சுகம்தான் சாள்ஸ்சுக்கு உசத்தியாக தெரிந்தது.

ஆரம்ப ஆர்வங்கள், ஆரம்ப அறிதல்கள் போன்றவற்றால் கமீலாவை சில காலம் மறந்திருந்த சாள்ஸ்சுக்கு கமீலாவின் உறவு மறுபடித் தேவைப்பட்டது.

ஒருநாள் இளவரசரின் அலுவலகத்திற்கு டயானா சென்றிருந்தாள். அலுவலக மேசையின்மேல் ஒரு சிறு பெட்டி காணப்பட்டது. பார்த்ததுமே அது நகைப்பெட்டி என்பது தெரிந்துவிட்டது.

தனக்குப் பரிசளிக்கத்தான் ஏதாவது வாங்கி வைத்திருப்பாரோ என்ற ஆர்வத்தோடு, பெட்டியைப் பிரித்துப் பார்த்தார் டயானா.



டயானா–துப்பாக்கி சுடும் பயிற்சி

உள்ளே தங்கச் சங்கிலி, வளையல் இருந்தது. அதில் 'G', 'F' என்னும் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

அப்போது அந்த எழுத்துக்களுக்கான அர்த்தம் டயானாவுக்குத் தெரியாது.

தனது நண்பர்கள் யாருக்காவது பரிசளிக்கப் போகிறாராக்கும் என்று நினைத்து, அதனை மறந்து விட்டார் டயானா.

நீண்டகாலத்தின் பின்னர் அந்த எழுத்துக்களுக்கான அர்த்தம் புரிந்தது.

சாள்ஸ்சும், கமீலாவும் ஒருவரை ஒருவர் செல்லமாக அழைத்துக்கொள்ளும் இரகசியப் பெயர்களின் முதல் எழுத்துக்கள்தான் அவை.

G- கிளாடிஸ். F-ஃபரெட்.

டயானாவின் வாழ்வில் புயல் ஓங்கி வீசத்தொடங்கிய நாட்கள் இனித்தான் ஆரம்பமாகப் போகின்றன.

(அடுத்த வாரமும் வரும்)

**குறிப்பு:** சாள்ஸ்- டயானா திருமணம் நடைபெற்றது 1981 ஜூலை, 29ம் திகதியாகும். சென்றவாரம் ஆண்டு தவறுதலாக 1991 என இடம்பெற்றுவிட்டது.

## அப்பிளோ அப்பிள்

அப்பிள் பழத்தில் மனித உடலுக்குத் தேவையான பல சத்துக்கள் உள்ளன. அப்பிளின் தோலில் மருத்துவ குணம் உண்டு. அதனால் தோலோடு அப்பிளைச் சாப்பிடுவது நல்லது.

அப்பிள் மற்றும் அதன் தோலில் இருக்கும் மருத்துவ குணங்கள்:

* அப்பிள் ஜூஸை காய்ச்சல்காரர்களும் பருகலாம்.
* காயமடைந்த இடத்தில் அப்பிள் தோலை அரைத்துப் பூசினால் இரத்தப்போக்கு நிற்கும்.
* மலச்சிக்கல், அஜீரணம், குடலில் ஏற்படும் சளியின் தொல்லை ஆகியவற்றுக்கு அப்பிள் நல்ல மருந்தாகும்.
* உடலில் உள்ள சுரப்பிகளின் சரியான செயற்பாட்டிற்கு அப்பிள் ஒத்துழைக்கின்றது.
* சிறுநீர்ப்பையில் கற்கள் ஏற்படாமல் தடுக்கிறது.
* தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டால், சருமம் மெருகு பெறும், முடி வளர்ச்சி ஏற்படும், பற்களுக்கு ஆரோக்கியம் கிடைக்கும், வாய்நாற்றத்தைப் போக்கும்.

**தங்கமாலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளின் விபரம் அடுத்த வார முரசில் வெளியாகும்.**


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** CY

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-01-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? தலவாக்கலை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**டி.ஏ.சித்ர தர்ஷனி,**

இல. 95/19 குமார கம இடம், தலவாக்கலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## உயிர் தயங்க உனைப் பிரிந்து...!

இறுதிப் பிரிதலின்
இம்சைமிகு கணங்களை
எண்ணிப் பார்க்கிறேன்!
-0-
இறுதித் தரிசனம் அது;
செங்கோடுகள் இழையோடச்
சிவந்து போயிருந்த- உன்
விழி இரண்டை
நெஞ்சின் ஆழம் வரை
நினைவிருத்த முயன்றேன்!
-0-
அன்று மாத்திரம்
அந்தியின் இருள்
செறிந்து கவிழ்ந்தது;
நாம் அவகாசம் பெற்றிருந்த
நேரத்தின் இடைவெளி
குறுகிக் கொண்டோடியது!
-0-
எனது ஆறுதலுக்காகவேனும்
எந்த நம்பிக்கையையும்
உன்னால் தர முடியவில்லை!
பிரிவது உறுதியாய்ப் போயிருந்த
உன்னுள்ளே-மீண்டும் நாம்
சேர்வதைப் பற்றிய
சொப்பனங்களையெல்லாம்
அழித்து மறைத்திருந்தாய்!
-0-
உன்னெதிரே நான்
கண்ணீரைச் சிந்தவில்லை;
கடைசிச் சந்திப்பின்
சம்பிரதாயமெனக் கூறிச்
சத்தியங்கள் வாங்கவில்லை!
-0-
உன் அழைப்புக்காக
யுகங்கள் அத்தனையும்
காத்திருப்பதாய்க் கூறினேன்;
அதுவரை,
அன்பின் நிழலற்ற
பாலைவன மொன்றில்
சரண்புகுவதாய்க் கூறினேன்;
சாவு என்னுடலைச்
சடலமாக்கும் வரை
என்னுயிரில் நீயே
நிறைந்திருப்பதாய்க் கூறினேன்!
-0-
கரம்பற்றலோ, தழுவலோ
காதலின் அடையாளமெனக்
கருதாததால்
உன் உருவத்தை இனி
உள் வாங்கும் வரமில்லையென
தயங்கித் தயங்கி
இமை மூடிய விழிகளோடு
நானன்று விடைபெற்றேன்!
-0-
இது யாரோ என் வாழ்வுக்குச்
செய்து போன சதியென்றால்
வாதாடி வென்றிருப்பேன்!
விதி என்று நீயே எனக்கு
விடை தந்து அனுப்பினால்
எவரிடம் போய் நான்
நீதி கேட்டு நிற்பேன்...?

பஹீமா ஜஹான்-
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## அவஸ்த்தை...!

வாழ்க்கை- பற்றிய சில
நம்பிக்கைகளில்
மீதம் இருந்தன
உனைச் சந்தித்ததன்-பின்
-★-
உல்லாசமான-உருதுக்
கவிதைகள் போன்று
மென்மையாக இருந்த-நீ
கடுமையாக மாறியது
எப்போது...?
-★-
உனது வழமையில்
ஏற்பட்ட மாறுதல்
வாயில்-ஒரு
சுவையற்ற காய்ச்சல்
வந்துபோன
உணர்வை-உண்டாக்குகிறது
என்னுள்...
-★-
சிதை எரிந்து
அடங்கும்-ஆனால்
மனம் தொடர்ந்து
எரிந்து கொண்டிருக்கிறது...!
எனக்குள்-உன்னால்
ஏற்படுத்தப்பட்ட
விலகுகையின் இடைவெளியினால்...!
-★-
சொல்லிக் கொண்டு-போவது
மரபல்ல-என்பதால்தான்
நீ- அடிக்கடி
சொல்லாமல்-மௌனியாகி
போகின்றாயோ...?
-★-
மௌனத்தால்
கொல்லும்-ஒரு
புதிய ஆயுதமாக-நீ
மாறியது எப்போது..?
-★-
தொலைந்ததாக-உன்
கைக்குட்டையைத்-தூதனுப்பி
எத்தனை முறை
என்னை
நலம் விசாரித்திருப்பாய்...?
-★-
எமக்குள்
காற்றும்-காதலுடன்
கொஞ்சிய காலம்-இப்போது
மலையேறி விட்டதா...?
-★-
நீ- தந்த
ரோஜாக்களுக்குப்-பதிலாக
முரண்பட்ட
முட்களை
பிரதியிடச் சொல்கின்றாயா..?
-★-
நான்
நினைப்பதெதுவுமே
நடப்பதில்லை என்பதற்கு
மிகச் சிறந்த உதாரணமாய்
நீயும்....
-★-
இறுதியாக-உனக்கோர் உத்தரவு
இனிமேலாவது-நீ
சுயமாக இயங்கு...!
சுயமாக பேசு...!
சுயமாக சிரி...!
-★-
கவனம்!!!
துரோகிகளுடன் சேர
எண்ணாதே!
ஏனெனில்-நட்பைவிட
நிரந்தரப் பகை-சில
வேளைகளில்
நிம்மதியானது...!

லியாகத்கான், நற்பிட்டிமுனை.

## அந்தநாள் போர்க்களம்



← .:.பிரான்ஸ் நாட்டு மன்னன் நெப்போலியன் பல நாடுகளை வென்று அடக்கியவன். இத்தனைக்கும் நெப்போலியன் மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவன் அல்ல. சாதாரண படை வீரனாக இருந்து, பின்னர் தளபதியாகி, நாட்டிற்கே மன்னனானான்.

நெப்போலியனுக்கு உத்தியோகபூர்வமாக இரண்டு மனைவிகள், மேலதிகமாக காதலிகள் பலர் உண்டு. முதல் மனைவி இத்தாலி நாட்டைச் சேர்ந்தவள். பெயர் ஜோசப்பின். படத்தில் இருப்பது அவள்தான். இரண்டாம் மனைவி மேரி லூயிஸ் ஆஸ்திரிய நாட்டவள். வெளிநாட்டுப் பெண்கள்மீது தான் நெப்போலியனுக்கு மோகம். ■


நெப்போலியனின் படைகளிடம் 1805ல் ஆஸ்திரிய படைகளும், ரஷ்ய படைகளும் சரண் அடைந்த காட்சி படம் 2ல் உள்ளது. நெப்போலியனுக்கு பின்னால் இலட்சக்கணக்கான படைகள் நிற்கின்றன.



பெரிய படை இருந்தால் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையில் உலகையே அடக்கி ஆள நினைத்தான் நெப்போலியன். மறுபடி ரசியாமீதும் படை எடுத்தான்.

நெப்போலியனின் படைகள் ரசியாவுக்குள் புகுந்தபோது, ரசியப் படைகளால் பெரும் படையை எதிர்த்து நிற்க முடிய வில்லை. தங்கள் நாட்டின் பல பகுதிகளைவிட்டு வெளியேறினார்கள். நெப்போலியனின் படைகளால் மக்கள் வதைபடாமலும், அழிபடாமலும் இருக்க மக்களையும் அழைத்துக் கொண்டு பின்வாங்கினார்கள்.

அந்தப் பகுதிகளில் உள்ள உணவுக் கிடங்குகள், தண்ணீர் தேக்கங்கள் என்பவற்றை அழித்துக் கொண்டும், வயல்களைக் கூட தீவைத்து எரித்துவிட்டும் ரசியப் படைகள் பின்வாங்கின.



வெற்றிக் கோஷத்துடன் புகுந்த நெப்போலியனின் படைகளுக்கு குடிக்கத் தண்ணீரும் இல்லை. உண்ண உணவும் இல்லை. கடும் பனிக்காலமும் தொடங்கியது. இலட்சக்கணக்கான படைகள் பரிதாபமாகச் செத்தன. நெப்போலியன் மீதிப் படைகளுடன் பின்வாங்கிச் சென்றான். ■

→ இறுதியாக வார்ட்டர்லூ போர்க்களத்தில் நெப்போலியன் மண்கவ்வினான். நெப்போலியனை தோற்கடித்த பிரிட்டிஷ் தளபதி வெலிங்டனும், ஜெனரல் பிளூட்சரும் கைகுலுக்கிக் கொள்கிறார்கள் (அனைத்தும் அக்காலத்தில் வரையப்பட்ட தத்ரூப ஓவியங்கள்.)



## முரண்பாடுகள்!

"தீர்வுப் பொதி
விரைவில் விவாதிக்கப்படும்!"
வரவு-செலவுத் திட்டத்தில்
கூடுதல் நிதி
போருக்கு...!

"அர்த்தமற்ற கைதுகள்
நிறுத்தப்படும்!"
சிறைகளில் இடமின்றி
இளைஞர்
யுவதிகள்.

"யுத்த நிறுத்தம்
வேண்டும் சமாதானத்திற்கு!"
கூடியளவு முச்சக்கர வண்டிகள்
உற்பத்தி செய்யப்படும்.

செல்வமலர் சோதிரெட்னம்,
வவுனியா.

## தேன் கிண்ணம்



## புத்தாண்டு



புலர்ந்து கிடக்கிறது
புத்தாண்டு ஒரு பக்கத்தில்!

இறந்து போய்க் கிடக்கிறது
சந்தோஷம் இதயத்தில்!

தொண்ணூற்றேழின்
சிறகை உடைத்து,
தொண்ணூற்றெட்டின்
சிறகைக் கட்டி
பறக்க வந்திருக்கும்
ஆண்டு புத்தகமே!
நீ எழுதப் போவது
எந்த அத்தியாயங்களோ?

கடந்த ஆண்டுகளின்
வறுமையும் போருமே
உன் கருவானால்,
தெருவெங்கும் வீசும்
பிணவாடைகள்தான்
உனக்கும்
(சு)வாசிக்கக் கிடைக்கும்!

ஓயாத யுத்தம்
காயாத இரத்தம்
மாயாத வறுமை
இத்தனையும் சேர்ந்து
எம்மை வீழ்த்தும்
சவால்கள்!
இவைகளை
ஒழிக்கச் சொல்லி
கடந்த புத்தாண்டுகளில்
எம் ஆத்மாக்கள்
அலுத்துவிட்டன!

பாரிச வாதமாய்
விலை மலையும்
வெடிக்கும் போரும்
என்றைக்கு குணமாகுமோ
அன்றைக்குப்

பின் வரும்
புத்தாண்டுகளே
நமக்கு
உத்தம ஆண்டுகள்!

அதுவரை-
புத்தாண்டெல்லாம்
புத்தெழுச்சியில்லா
ஆண்டுகள்தான்!

எம். ஸாலிஹ்
அஸீம்- புத்தளம்.

## ஏன் இப்படி?

இன்னும் இன்னும்
என் நினைவுத் தோட்டத்தில்
நீயோர் வாடா மல்லிகை!
••
தினம் சொல்லத்
துடிக்கும் வார்த்தைகள்
ஏனோ உன் விழிகள் பட்டு
சிதறிப் போகிறது!
••
விழிகளினால் என்னைக்
காதலிக்கச் சொன்னதும்
நீதான்- பின்
வார்த்தை அம்புகளால்
குத்திப்போட்டதும் நீதான்!
••
சிலகாலமாக இரவுகள்
ஏனோ பகலில் தற்காலிகமாக
என்னுள் ஒளிந்து கொள்கிறது!
••
என் பழைய நினைவுகளை
சற்று தூசிதட்டிப்
பார்க்கிறேன் அதில்
உன் பெயரைத் தவிர
வேறேதும் இருந்ததாக
ஞாபகம் இல்லை!
••
கனவுகளில்
என் இதயத்தில் நீ
நடந்து சென்ற
பாதச் சுவடுகள்- இன்னும்
அழியாமலே இருக்கிறது!
••
நிதம் என்
உயிரோடு விளையாடுவதை
ஏன் பழக்கப்படுத்திக்
கொண்டாய்!
••
என் இறுதி ஊர்வலத்திலாவது
என்னை காதலிப்பதாகச் சொல்
அவ் வார்த்தை நிச்சயம்- என்னை
சொர்க்கம் கொண்டு செல்லும்!

எஸ். சுரேஸ்- வவுனியா.

## இந்த வாரம் உங்கள் பலன்

(04.01.1998 தொடக்கம் 10.01.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- காரியானுகூலம், பலவித பேறு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் குறை கேட்டல், மனக் கிலேசம். | பகல் | 11 | மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன விரோதம், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பண வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, செய்தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், கௌரவம். | பகல் | 12 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- அந்நியர் பகை, பொருள் நஷ்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வெளியிட பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, தொழில் பேறு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண் விரோதம், மனப்பயம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- காரியத் தடை, மனப் பயம். | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசன மகிழ்ச்சி, வீண்குறை கேட்டல். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், இனசனப் பகை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- கடன் சுமை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன். |
| மகரம் | - வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

(06.01.98 இல் குடும்பத்திற்கு குரு பிரவேசம்)

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன் - தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், அந்நியர் சகாயம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், செலவுமிகுதி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- பொருள் நஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, காரியக் கேடு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பிரயாண மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- வீண் அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 12 | மணி |
| புதன்- பயனற்ற செயல், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் செலவு, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| சனி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| சனி- வீண் குறை கேட்டல், கடன் சுமை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7





முன்றிலில் ஓடுமோர் வண்டியைப்
-போல ஏறு
மூன்றுலகும் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்!
-சுப்பிரமணிய பாரதியார்.

# ஞானியின் உபதேசம்

## பாப்பா முரசு சிறுகதை



ஒரு காட்டில் ஒரு சுண்டெலி வசித்து வந்தது. இந்தச் சுண்டெலி மிகுந்த பயந்த சுபாவம் உடையது.

ஒரு நாள் சுண்டெலி, அந்தக் காட்டில் இருந்த ஞானியிடம் சென்றது. அந்த ஞானியை வணங்கி விட்டு,

"ஞானியே! எனக்குப் பூனையைக் கண்டாலே பயமாக இருக்கிறது. பூனைகளிடமிருந்து தப்பிக்க என்னையும் பூனையாக மாற்றி விடுங்கள்!" என்றது சுண்டெலி.

ஞானியும் அவ்வாறே மாற்றினார்.

சில நாட்கள் கழித்து, பூனையாக மாறிய சுண்டெலி ஞானியிடம் வந்து,

"என்னை நாய் துரத்துகிறது என்னைக் கொன்றாலும் கொன்று விடும். எனவே என்னை நாயாக மாற்றி விடுங்கள்!" என்று கேட்டது.

ஞானியும் சுண்டெலியை நாயாக மாற்றினார்.

மீண்டும் சில நாட்கள் கழித்து நாய் வடிவில் இருந்த சுண்டெலி, ஞானியிடம் ஓடோடி வந்தது.

"ஞானியே! இந்தக் காட்டிலுள்ள புலி ஒன்று என்னைப் படாதபாடு படுத்துகிறது. எனவே நான் புலியிடமிருந்து தப்பிக்க என்னையும் புலியாக மாற்றி விடுங்கள்!" என்று கேட்டது.

ஞானியும் நாய் வடிவில் இருந்த சுண்டெலியைப் புலியாக மாற்றினார்.

மறுபடி சில நாட்கள் கழித்து, புலி வடிவில் இருந்த சுண்டெலி ஞானியிடம் பாய்ந்து வந்தது.

"இங்கே ஒரு வேடன் வலையுடன் என்னைப் பிடிப்பதற்கு முயற்சி செய்கிறான். எனக்குப் பயமாக இருக்கிறது. எனவே என்னை வேடனாக மாற்றி விடுங்கள்!" என்றது.

அதற்கும் பொறுமையாகச் சம்மதித்து, வேடனாக மாற்றினார் ஞானி.

சில நாட்களின் பின் வேடனாக மாறிய சுண்டெலி ஞானியிடம் வந்து,

"எனக்குப் பிற மனிதர்களைக் கண்டால் பயமாக இருக்கிறது. ஆகவே..." என்று தொடர, உடனே ஞானி இடைமறித்தார்.

"ஏ சுண்டெலியே! உன்னை எதுவாக மாற்றினாலும், உன் பயம் உன்னை விட்டுப் போகாது. எனவே நீ சுண்டெலியாக இருக்கத்தான் சரி," என்று மீண்டும் சுண்டெலியாக மாற்றி விட்டார் ஞானி.

**பயத்தை அகற்றி நம்பிக்கை, துணிவு என்ற எண்ணங்களை நம் இதயத்தில் வைக் காதவரை பயம் நம்மை ஆட்டிப் படைக்கும். பயமே எம்மைத் துரத்திக் கொண்டிருக்கும்.**

# அதிசயம் - ஆனால் உண்மை!





**ஐஸ்கிறீம் பழம்:**
சக்வடோர் நாட்டில் கிடைக்கும் சிரிமோயா பழத்தின் சதைப்பற்று வெள்ளை நிறமானது. இதைக் கரண்டியால் எடுத்து அன்னாசி, வாழைப்பழம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு நறுமணச் சுவை சேர்த்து ஐஸ்கிறீம் போலச் சாப்பிடலாம்.

**தீப்பவழம்:**
செங்கடலில் உள்ள பவழம் நெருப்புப் போன்று சுடும். இதைத் தொட்டால் தீப்புண் கொப்புளம், மாறாத வடுக்கள் ஏற்படும்.



**ஆபிரிக்க ஜக்கானா:**
இந்தப்பறவை நீரில் மிதக்கும் இலை மீது இலாவகமாக நிற்கவல்லது. இப்பறவையின் உடல் அளவுக்கு பரந்த இதன் கால்கள் மற்றப் பறவைகளின் கால்களை ஒப்பிடும்போது மிகப் பெரியவை.



**காது மரம்:**
அமெரிக்காவில் உள்ள வான் கூவர் அருகே வேகாய் தீவில் உள்ள இந்த மரத்தின் அடிப்பகுதி மனிதனது செவி போன்று தோற்றமளிக்கின்றது.

# வாரம் ஒரு நாடு

## சாவோடோம் மற்றும் பிரின்சிப்

| | |
|---|---|
| தலைநகர் | - சாவோடோம். |
| பரப்பு | - 964 சதுர கிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 1.32 இலட்சம் |
| மொழி | - போர்த்துக்கீஸ், உள்நாட்டு வழக்குகள். |
| எழுத்தறிவு | - 50% |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - டோப்ரா |
| தனிநபர் வருமானம் | - 370 டொலர். |


**அமைவிடம்:**
இந்த இரண்டு தீவுகளும், இவற்றின் அருகேயுள்ள சில சிறு தீவுகளும் கினி வளைகுடாவில் அமைந்துள்ளன. இவை காபோனில் இருந்து 125 மைல் தூரத்தில் அமைந்துள்ளன.

**வரலாறு:**
போர்த்துக்கேயரின் காலனியாக இருந்து 1975ல் சுதந்திரம் பெற்றது. ஒரே கட்சி ஒரே ஆட்சி.



**பொருளாதாரம்:**
இந்நாட்டின் பொருளாதாரம் முழுவதும் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியைச் சார்ந்துள்ளது. மொத்த ஏற்றுமதியில் 90% கொக்கோவைக் குறிப்பிடலாம்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.01.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 226
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 224

**பரிசுக்குரியவர்:**
**இப்திகார் பரீட்,**
**ஜாமியுல் அஸ்ஹர், மத்திய கல்லூரி, உடத்தலவின்னை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரிஹானா சுபைர், தாருள் உ.மும், மு.ம.வி, ஹுரீமலுவை, இரம்புக்கனை. | சௌ. துஷ்யந்தினி, சண்முக வித்தியாலயம், காரைதீவு. |
| எம். வின்சன், தமிழ் மகா வித்தியாலயம், கிரான். | செல்வி பஸ்லினா, அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |
| எஸ். சாமிலி பௌஸாத், சம்ஸ் மத்திய கல்லூரி, அக்பர் கிராமம், மருதமுனை. | ஏ. வினோஜி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| ஆர். சுபேந்திரன், தமிழ் மத்திய கல்லூரி, வவுனியா. | ஏ.சி. இக்ஸான், பள்ளிவாசல் துறை, முஸ்லிம் மஹா வித்தியாலயம், புத்தளம். |
| எம். பிரிதிகலா, கோணக்கலை தமிழ் வித்தியாலயம், பசறை. | எம். தினேஷ்குமார், ரோ.க. வித்தியாலயம், அம்பிட்டிய, கண்டி. |

# நால்வகைக் கவிகள்

கவிஞர்களை அவர்கள் பாடும் பாடல்களுக்கேற்ப நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. **ஆசுகவி:**
பொருளடி, பாவணி முதலியன தந்து மற்றவர் பாடுக, என்றவுடன் பாடுபவர்.

2. **மதுரகவி:**
பொருட்செல்வம், சொற் செல்வம், தொடை விகற்பம், செறிய உருவகம் முதலிய அலங்காரத்தோடு இன்னிசை இசைத்தால் பாடுபவர்.

3. **சித்திரக் கவி:**
மாலை மாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துரை, தாசங்கொளல், வாவனாற்று, பாதமயக்கு, பாவின் புணர்ப்பு, கூட சதுக்கம், கோமூத்திரி, ஓரெழுத்தினம், ஒற்றெழுத்துத் தீர்த்த ஒரு பொருட் பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, வினாவுத்தரம், சருப்பதோ பத்திரம், எழுத்து வருத்தினம் இவை முதலிய மிளிரக் கவி பாடுபவர்.

4. **வித்தார கவி:**
மாலை, யமகம், கலம்பகம், தசாங்கம், புராணம் முதலியவற்றை விளித்துப் பாடுபவர்.

# கறுப்புப் பெட்டி (BLACK BOX)



விமான விபத்து நடந்ததும் 'கறுப்புப் பெட்டி' என்று ஒன்றைப் பற்றிச் சொல்வார்கள். 'கறுப்புப்பெட்டி' என்றால் என்னவென்று தெரியுமா?


விமானம் புறப்படுவதிலிருந்து அது தரையிறங்கும்வரை விமானத்திற்குள் என்ன நடக்கின்றது என்பதைப் பதிவு செய்வது கறுப்புப் பெட்டி ஆகும். அதாவது, இந்தக் கறுப்புப் பெட்டியில்- விமானம் பறக்கும் உயரம், அதன் வேகம், வெளிப்புற மற்றும் உட்புற அழுத்தம் ஆகியவற்றைப் பதிவு செய்யும் மின் உபகரணங்கள் உள்ளன.

இது தவிர விமானி மற்றும் விமான உதவியாளர்களின் உரையாடல்கள், விமான நிலையங்களுடன் அவர்கள் நடத்திய தகவல் பரிமாற்றங்கள் ஆகியனவும் கறுப்புப் பெட்டியில் பதிவாகிக் கொண்டிருக்கும்.

அத்துடன் தீப்பிடிக்காது, குண்டு துளைக்காது, உருகாது, உடையாது, அதிர்ச்சி தாங்குவது என்ற பல குணாதிசயங்களை இந்தக் கறுப்புப்பெட்டி கொண்டுள்ளது.

விமானம் விபத்துக்குள்ளானாலும் உடைந்து நொறுங்கிவிடாத இந்தப் பெட்டியை எடுத்து அதிலுள்ள பதிவுகளை ஆராய்ந்தால் விமான விபத்துக்கான காரணம் தெரிந்துவிடும்.

# விசித்திர எறும்புகள்



**தேன் எறும்பு:**
தென் அமெரிக்காவில் காணப்படும் தேன் எறும்புகள் தேனைச் சேகரித்து, பை போன்ற உறுப்பில் சேர்த்து வைக்கின்றன. சாதாரண தேனைப் போன்றே எறும்புகளின் தேனையும் அமெரிக்கர்கள் பயன்படுத்துகின்றார்கள்.

**கூட்டுறவு எறும்பு:**
இவை கூட்டங் கூட்டமாக வாழும் இயல்புடையவை. இவற்றின் புற்றுக்களை வெள்ளம் சூழ்ந்து கொண்டால், ஒன்றையொன்று பந்து போல் கட்டிக் கொண்டு, தண்ணீரில் மிதந்து சென்று மேடான இடங்களில் ஏறிக் கூடி வாழ்கின்றன.

**காந்த எறும்பு:**
அவுஸ்திரேலியாவில் காணப்படும் இவ்வின எறும்புகள் பெரிய புற்றுக்களைத் தெற்கு வடக்காகக் கட்டுகின்றன. எனவே இவற்றிற்கு 'காந்த எறும்பு' என்று பெயர் வழங்கப்படுகின்றது.

**வெள்ளை எறும்பு:**
வெண்ணிறமாக இருக்கும் இந்த எறும்புகள் குளிர்ந்த இடங்களில் கூடு கட்டி வாழும். இவை முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும். இம்முட்டைகள் தோன்றும் போது சிறியனவாய் வெளிவரும். வெளிவந்த பின் இவை வளருகின்றன.

**பிஸ்கட் எறும்பு:**
இங்கிலாந்தில் காணப்படும் இவ்வின எறும்புகள் சேகரித்த தானியங்களை மாவாக்கி அவற்றைச் சிறு உருண்டைகள் போல் திரட்டி உலர வைத்து பிஸ்கட் போல் செய்கின்றன. பின்னர் இவற்றைத் தேவையான போது உபயோகப்படுத்துகின்றன.

# மருத்துவத்தின் தந்தை



மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் ஹிப்போகிரட்டஸ். மிக உன்னத கிரேக்க மருத்துவரான இவர் கி.மு. 460-கி.மு.400 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

மருத்துவம் பார்ப்பது மதகுருமார்கள் தொடர்பானது என்பதை மாற்றியமைத்தவர். மருத்துவத் தொழிலில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைத் தந்தவர். இவரது நெறி முறைகள் 'ஹிப்போகிரட்டிக் ஓத்' (ஹிப்போக்கிரட்டிக் உறுதிமொழிகள்) என்று இன்றளவும் குறிப்பிடப்படுகின்றன.

பல பல்கலைக் கழகங்களில் மருத்துவப் பட்டமளிப்பின்போது இந்த ஹிப்போகிரட்டிக் உறுதி மொழிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அந்த உறுதிமொழிகளில் சில இவை:

★ என் திறமைக்கும் கணிப்புக்கும் ஏற்ப நோயாளிக்குச் சிகிச்சையளிப்பேன்.

★ என் தொழிலையும், வாழ்க்கையையும் புனிதமாக வைத்திருப்பேன்.

★ மருத்துவம் பார்க்க ஒரு வீட்டுக்குள் நுழையும்போது எந்தத் தவறு நேரவும் இடம் தரமாட்டேன்.

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல்.

## புதிய தொடர் 4

# இனி என் முறை

"நீச்சல் சேர வேண்டுமா. மூன்றாவது மாடி பின் பக்கம். எம். ஆர்.வாசுதேவன். அவர்தான் கோச். அவர் அங்கு இருப்பார்."

பின்பக்கம் போய் படியேறினாள். சிறிய நீச்சல் குளம். இரண்டு உயரமான கட்டடங்களுக்கு நடுவே. கீழே கார் பார்க்கும் மேலே குளமுமாய் இருந்தது. குளத்தின் அடியில் சலவைக் கல் பளபளத்தது. கோடியில் சில குழந்தைகள் பிளாஸ்டிக் ட்யூப் மாட்டப்பட்டு கம்பி பிடித்து கால்களை உதைத்துக் கொண்டிருந்தார்கள். இடுப்பில் டவல் அகல முதுகுடன் ஒரு இளைஞன் அவர்களை கவனித்துக் கொண்டிருந்தான். தள்ளி ஷவர். அதற்கு வலது புறம் உள்ளடங்கிய அறை. நாற்காலி மேஜை மீது நடுத்தர வயது ஆள் உட்கார்ந்திருந்தார்.

அமுதா குளம் சுற்றிப் போனாள்.

"இங்க ஸ்விம்மிங் சேரணும். எப்படி..."




"ஃபார்ம் இருக்கு. எழுதிக் கொடுங்க" ஒரு அச்சடித்த காகிதம் நீட்டினார்.

"எவ்வளவு?"

"அறுநூறு ரூபா வருஷத்துக்கு. ஷார்ட் டைம் கோச்சிங்னா முன்னூத்திப் பத்து ரூபா. வாரம் மூணு கிளாஸ். வருஷமா ஜாய்ன் பண்ணுங்க."

"சரி, காசு எங்க கட்டணும்?"

"ரிஸப்ஷன்ல. நீங்க எழுதிக் கொடுங்க ரிஸப்ஷனுக்கு கொடுத்தனுப்பிடலாம்."

பெயர், விலாசம், போன் நம்பர் எல்லாம் கேட்டிருந்தார்கள். கொடுத்தாள்.

"யாரு உங்க ஸன்னா?"

"ஆமாம்."

"அப்பாவுக்கு என்ன உத்தியோகம்?"

"சென்ரல் கவர்ன்மென்ட் சர்வண்ட்."

"எங்க?"

"உள்துறை இலாகா. டெல்லி" செல்வா தன் உத்தியோகம் தேவையின்றி வெளியே சொல்லப்படக் கூடாது என்று எச்சரித்திருக்கிறான். கேட்டால் உள்துறை இலாகா என்று குறிப்பிடச் சொல்லியிருந்தான்.

"நீங்க தான் எம். ஆர்.வாசுதேவனா?"

"இல்ல, இல்ல. என் பேத்தி நீச்சலடிக்கிறா துணைக்கு வந்தேன். அவர்தான் கோச்." கை காட்டினார். பெரிய முதுகு வெயிலில் பளபளக்க அந்த இளைஞன் குழந்தைகளை கரையேற்றிக் கொண்டிருந்தான்.

மழையில் நனைந்த புறாக்களாய் குழந்தைகள் பற்கள் கிடுகிடுக்க கண்கள் சிவக்க தலை சிலுப்பி ஷவருக்கு ஓடின.

"யெஸ்" இளைஞன் நெருங்கி வந்தான்.

"மை நேம் இஸ் மிஸஸ் அமுதா செல்வராஜ். என் ஸன்னை இங்க சேர்க்க வேண்டும்"

"வயது என்ன?"

"எழுதியிருக்கிறேன்."

வாங்கிப் படித்தான்.

"நல்லது. எப்போது சேருகிறீர்கள்?"

"இன்று சேரலாம். மாலையில் வகுப்பு உண்டா?"

"உண்டு. புதன், வெள்ளி, சனி. நான்கு மணி முதல் ஐந்து மணிவரை."

"ஞாயிறு இல்லையா?"

"இருக்கிறது. யார் வருவார்கள். டிவியை விட்டு."

"ஒ... எத்தனை நாளில் நீச்சலடிக்க முடியும்?"

"பையனின் தைரியம் பொறுத்த விஷயம். குறைந்த பட்சம் பத்து நாளில் எவர் துணையுமின்றி குதித்து நீந்தப் பழக்கி விடுவோம்."

"என் பிள்ளை கொஞ்சம் பயந்தவன்."

"எல்லா குழந்தைகளும், ஏன் பெரியவர்கள் கூட தண்ணீருக்கு பயப்படுகிறார்கள். அந்தக் கவலை என்னுடையது. பையனை அழைத்து வாருங்கள்."

"ஆழம் அதிகம் போலிருக்கிறதே."

அவன் சிரித்தான்.

"எப்போது உங்கள் பிள்ளை இந்த இடத்தில் கால் வைத்தானோ அவன் பாது காப்புக்கு நான் பொறுப்பு. மாலை வாருங்கள். மூன்று வயது பெண் குழந்தை மீன் மாதிரி நீச்சலடிப்பதைப் பார்ப்பீர்கள்."

"மூணு வயசுப் பெண்குழந்தையா?"

"ஒரு வயசுக் குழந்தை நீச்சலடிக்க முடியும்."

"கடவுளே."

"மனிதன் கடவுள் போல சக்தி வாய்ந்தவன். அவன் சக்தி அவனுக்குத் தெரிவதில்லை."

பேச்சு கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாய்பட்டது.

"எப்போது பணம் கட்ட வேண்டும். இப்போதா, மாலையா?"

இப்போது கட்டி விடலாமா? பர்ஸ் பிரித்தாள். குழந்தைகள் ஓடி வந்து அவன் எதிரே தூல் சேர்த்து முதுகு வளைத்து பௌவ் செய்தன.

"குட் டே மாஸ்டர். குட் டே மாஸ்டர்"

"குட்டே" அவனும் கால் சேர்த்து குனிந்து குழந்தைகள் முன் பௌவ் செய்தான்.

அமுதா லேசாய் வியந்தாள்.

அவன் வியப்பை வாங்கிக் கொண்டான். "நீச்சல் மட்டுமல்ல. சகலமும் நாம் எப்படி பழக்குகிறோமோ அவ்விதமே குழந்தைகள் வளரும். கரம் கூப்பி ஒரு குழந்தையை நமஸ்கரிக்க, பதிலுக்கு அது சகலரையும் நோக்கி கை கூப்பும். நாம் அலட்சியப்படுத்த அதுவும் அலட்சியப்படுத்தும். இப்படி பௌவ் செய்ய நான் உத்தரவிடுவதில்லை. இரண்டு நாள் நானே பௌவ் செய்தேன். இப்போது முந்திக் கொண்டு பௌவ் செய்கிறார்கள் சந்தோஷமாய்."

"புரிகிறது."

"முதலில் உங்கள் பிள்ளையைக் கரையில் அமர்த்தி, நான் நீச்சல் செய்து காட்டுவேன். அவன் தானாய் நீரில் குதிப்பான். நீந்த ஆர்வம் காட்டுவான். ஏன் உங்களுக்கே நீந்த ஆர்வம் வரும்."

அமுதா வெட்கப்பட்டாள். வெட்கத்தை மறைத்துக் கொண்டாள்.

காசு வாங்கி பார்ம் சேர்த்து உதவிப் பையனிடம் ரிஸப்ஷனுக்கு கொடுத்தனுப்பினான். வந்ததும் ரசீதை கையில் கொடுத்து கால் சேர்த்து குனிந்து அவள் எதிரே பௌவ் செய்து "குட்டே" என்றான்.

அமுதாவுக்கு பௌவ் செய்ய வெட்கம் வந்தது. கரம் குவித்து நன்றி சொன்னாள். பையனுக்கு லஸ் முனையில் இரண்டு ஸ்விம்மிங் நிக்கர் வாங்கினாள். மாலை நான்கு மணிக்கு பையனோடு நீச்சல் குளம் வந்தாள்.

பையன் நகம் கடித்துக் கடித்துத் துப்பி னான்.

"ஏன் நெர்வஸா இருக்க திலீபா? தைரியமா இரு. அம்மா கூடவே இருப்பேன்." சட்டையைக் கழற்றி ஸ்விம் ஸூட் மாட்டினாள். பிள்ளையை அழைத்து வாசுதேவனருகே போனாள்.

"இது என் பிள்ளை திலீபன்."

"ஹலோ" அவன் கை நீட்டினான். பிள்ளை கை நீட்ட குலுக்கினான்.

"இதுதான் மாஸ்டர் வாசுதேவன்."

பிள்ளை கால் சேர்த்து குனிந்து வணங்கியது.

வாசுதேவனும் குனிந்து வணங்கினான். முன்னேறி அணைத்துக் கொண்டான். "நீங்க போய் உட்காருங்க" என்று அவளைப் பார்த்தான். பிள்ளையை அணைத்தபடி நீச்சல் குள மறுமுனைக்குப் போனான். இடுப்பு டவலைக் கழற்றி படிக் கம்பியில் போட்டான். "திலீபா, உட்கார்," கரையில் உட்கார வைத்தான்.

'சௌக்' என நீரில் நீல ஸ்விம் ஸூட்டுடன் பாய்ந்தான்.

நீச்சலா அது? மீன் வேகம். சுறா வேகம். நாலு எட்டில் எதிர் கரைக்கு படகு மாதிரி போனான். பின்னால் திரும்பி மல்லாக்கு நீச்சலடித்தான். நீரைக் குடைந்து குடைந்து வித்தை காட்டினான். எட்டடி ஆழத்தில் நேராய் நின்றான். மரக்கட்டையாய் மிதந்தான். பாயில் உருள்வது போல ஜலத்தில் உருண்டான். திடுமென்று மூழ்கி காணாமல் போனான். அமுதா வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ப்ளோர்' என்ற திலீபன் கால் அருகே எழுந்து வந்தான்.

"வா" என்று கை காட்டினான்.

திலீபன் பின்னுக்கு நகர உற்சாகமூட்டினான். "என் தோள்ல உட்கார்" என்று பிள்ளையை தோளில் சுமந்தபடி கரையோரமாய் வலம் வந்தான். பிள்ளை குரங்காய் பயத்துடன் அவன் தலைமுடியைப் பற்றிக் கொண்டிருந்தது. இடுப்பு வரைக்கும்தான் நனைந்து போயிருந்தது. கரையில் ஏற்றி உட்கார வைத்துவிட்டு மற்ற குழந்தைகளுக்கு பயிற்சி கொடுத்தான்.

"திலீபா ஜம்ப்"

"வேணாம் மாஸ்டர்"

"ட்யூப் மாட்டி விடறேன். உள்ள போக மாட்டே. அப்படியே மிதப்பே."

"வேணாம் மாஸ்டர்."

"பயப்படாத திலீபா." ட்யூப் மாட்டி விட்டான்.

திலீபன் ட்யூப்பிலிருந்து விடுபடத் துடித்தான்.

"ச்சு நான் இருக்கேன். ஏன் பயப்படறே?"

"அம்மா அம்மா..." பிள்ளை பயத்தில் கதறியது. எல்லா குழந்தைகளும் வேடிக்கை பார்க்க அழுதது.

"ச்ச என்ன இது திலீபா?" அவள் எழுந்து அருகே வந்தாள்.

"நீங்க போங்க மேடம். அவனை என்கிட்ட விடுங்க."

"திலீப் பொட்டபுள்ளை நீந்துது. நீ என்னய்யா பயப்படறே? என் கை பிடிச்சுக்க."

"வேணாம் மாஸ்டர். ப்ளீஸ்."

பிள்ளையை வாரி மூன்றடி உயரத்தில் வீச திலீபன் ட்யூப்போடு நீரில் அலறலுடன் விழுந்தான். மிதந்தான்.

அமுதா திடுக்கிட்டு எழுந்தாள். நகம் கடித்தாள். பிள்ளை தத்தளித்தது. ட்யூப் உடம்பைத் தாங்க கைகால் உதைத்தது. "அப்படியே கால் உதைச்சுக்கிட்டு என் கிட்ட வா." வாசுதேவன் கை நீட்ட எட்ட அதை பற்றும் முயற்சியில் உடம்பு அசைத்து கரைக்கு முன்னேறியது. மாஸ்டரின் கை பற்றியது.

"அவ்வளவு தான். நீச்சலடிக்கிறியே. ஏன் பயப்படறே... இப்ப எதிர் பக்கம் போ."

"கண் எரியுது மாஸ்டர்."

"முதல்ல கொஞ்சம் எரியும். அப்புறம் சரியாயிடும் போ."

பிள்ளை முகத்து நீரை வழித்தது. கம்பிகளை இறுகப் பற்றியபடி இருந்தது.

"போ திலீபா."

"வேணாம் மாஸ்டர்."

கை தூக்கி பிள்ளையைக் கரையேற்றி மறுபடி வாரி நீருள் போட்டான். பிள்ளை மறுபடி அலறலுடன் போய் விழுந்தது. கைகால் உதைத்தது. நீட்டிய மாஸ்டர் கை நோக்கி உடம்பு அசைத்து அசைத்து நகர்ந்தது.

"இப்ப பயம் போயிடுச்சா?"

"அப்படியே, கம்பி பிடிச்சுக்கிட்டே சுத்தி வா."

பிள்ளை மெல்ல கை மாற்றி மாற்றி கம்பி பற்றி குளம் வலம் வந்தது. முக்கால் மணி நேரம் நீரில் கிடந்த பிறகு கை நீட்ட கரையேறிற்று. "போ. போய் ஷவர்ல குளி."

நனைந்த கோழியாய் ஷவர் நோக்கி ஓடிற்று. உடம்பு கழுவி அம்மாவிடம் வந்தது. அமுதா பை விரித்து, டர்க்கி டவல் எடுத்தாள். தலை துவட்டினாள்.

"எப்படி இருக்கு திலீப்?"

"நல்லா இருக்கும்மா"

"குட், நல்லா நீச்சலடிக்கிற திலீபா"

"நெஜம்மாவா?"

"கால் உதைச்சு கரைக்கு வந்துட்டியே"

உடுத்துக் கொண்டு வாசுதேவன் அருகே வந்தான்.

"ஸாரி, கொஞ்சம் முரட்டுத்தனம் காட்டிட்டேன். இல்லேன்னா இவன் தண்ணிக்கு லேசுல போக மாட்டான். திலீப் எப்படி?"

"நல்லா இருக்கு மாஸ்டர்"

"நாளைக்கு வரியா?"

"வருவேன் மாஸ்டர்."

"குட்நைட் திலீப்."

குனிந்து வணக்கம் சொல்ல, பிள்ளை குனிந்து "குட்நைட் மாஸ்டர்" என்று பௌவ் செய்தான்.

"வரேங்க," அமுதா கை கூப்பினாள்.

"வாங்க. நாளைக்கு சாடர்டேதானே. பள்ளிக்கூடம் இல்லையே. மூன்று மணிக்குக்கூட வரலாம். வாங்க." திரும்பி நடந்து போனான்.

அமுதா பையனை அணைத்தபடி படியிறங்கினாள்.

இப்படி இதமாய் சொல்லித்தர என் இளம் வயதில் ஆட்கள் இல்லை. காலம் மாறி வருகிறது. **(தொடர்ந்து வரும்)**

---

ஒரு கெரில்லாத் தளபதியின் கதையில் இருந்து....

# கியூபாத் தேர்தலும் சேகுவேராவும்!



**கி**யூபாவில் பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா ஆகியோர் தலைமையில் கெரில்லாக்கள் தங்கள் இறுதிக் கட்ட தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

அமெரிக்காவின் கைப்பொம்மையாக கியூபாவில் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி பாடிஸ்டா மக்களை ஏமாற்றும் திட்டம் ஒன்றை வகுத்தான்.

தன்னை சர்வாதிகாரி என்று கூறமுடியாதளவுக்கு, போலியான ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த பாடிஸ்டா முடிவு செய்தான்.

புரட்சியை மக்கள் நிராகரிக்கிறார்கள். பாடிஸ்டாவின் கீழ் இருக்கவே விரும்புகிறார்கள் என்று காண்பித்து, தன் கொடுங்கோல் ஆட்சிக்கு நியாயம் கற்பிக்கத் துணிந்தான்.

ஜனாதிபதித் தேர்தலுடன், பாராளு மன்றத்துக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்தப் படும் என்று சர்வாதிகாரி பாடிஸ்டா பிரகடனம் செய்தான்.

சேகுவேரா தலைமையில் கியூபாவின் வாஸ் வில்லாஸ் மாநிலத்தில் இயங்கிய கெரில்லா படையினர் தேர்தலை நடக்கவிடாமல் தடுப்பது என்று முடிவு செய்தனர்.

பிடல் காஸ்ட்ரோ மக்களுக்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

"கியூப மக்களே! பாடிஸ்டாவினால் நடத்தப்படும் சகல தேர்தல்களையும் பகிஷ்கரியுங்கள். அதன் மூலமாக பாடிஸ்டாவின் முகத்திரையை கிழித்தெறியுங்கள்!" என்று காஸ்ட்ரோ அறைகூவல் விடுத்தார்.

கியூபாவின் புரட்சிகர தலைமையகம் பின்வருமாறு சட்டம் இயற்றியுள்ளது என அறிவிக்கப்பட்டது.

* இந்தத் தேர்தலில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வோர் துரோக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் எனக் கருதப் படுவர்.

* இத் தேர்தலில் வாக்களிப்போரது சிவில் உரிமைகள் பறிக்கப்படும்.

கியூபாவில் சியாரா மாய்ஸ்ராவில் இருந்து புரட்சிகர தலைமையகம் வெளியிட்ட மேற்படி சட்டத்தை அமுல்படுத்த தீவிரமான இராணுவ நடவடிக்கைகளை கெரில்லாக்கள் மேற்கொண்டனர்.

இது பற்றி சேகுவேரா எழுதுகிறார்;

"காலமோ குறுகிய அளவில் இருந்தது. நாங்கள் ஆற்றவேண்டிய பணியோ அதிக அளவில் இருந்தது.




ஒருபுறம் தோழர் கமிலோ தனது பணிகளைத் துவக்கி சர்வாதிகாரியின் ஆதரவாளர்களை வேட்டையாடினார்.

தேர்தல்களை முறியடிக்க நாங்கள் அருகில் இருந்த கிராமங்களுக்குள் ஊடுருவ வேண்டியிருந்தது.

தீவின் நடுவில் இருந்த செழிப்பான சமவெளியில் அமைந்திருந்த காபைகுயன், போமென்டோ, சால்டி ஸ்பிரிட்டஸ் ஆகிய நகரங்களை ஒரே நேரத்தில் தாக்குவதற்கான திட்டத்தை நாங்கள் தயாரித்தோம்.

நவம்பர் 3ம் திகதி அன்று நாங்கள் நிறையக் காரியங்கள் செய்ய வேண்டி இருந்தது. எங்கும் எங்களது படை தயாராய் இருந்தன. சில இடங்களில் மட்டுமே தேர்தல் நடத்த முடியும்.

சேகுவேரா, ரால் காஸ்ட்ரோ, பிடல் காஸ்ட்ரோ ஆகியோரின் தலைமையில் இருந்த படைப் பிரிவுகளை எதிர்த்து பாடிஸ்டாவின் இராணுவம் நான்கு முனைகளில் போராட வேண்டி இருந்தது.

நவம்பர் மாதத்தில் பாடிஸ்டாவின் துருப்புக்கள் கடுமையாக எதிர்த்து நின்றன. ஆயிரக்கணக்கான வீரர்கள். அவர்களிடம் நவீன ஆயுதங்கள். புரட்சிக் காரர்களிடம் மொத்தம் சில நூறுவீரர்கள்.

கடுமையான யுத்தம் தொடர்ந்தது. இரத்தம் ஆறாய் பெருகியது.

டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியில் சேகுவேராவின் படைகள் எஸ்கம்ரே மலைகளில் இருந்து இறங்கி, லாஸ் வில்லாஸிலுள்ள பலம் பொருந்திய இடங்கள்மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தன.

டிசம்பர் 21ம் திகதி 18 ஆயிரம் பேர் கொண்ட காபைகுயன் நகரம் சேகுவேராவின் படைப்பிரிவிடம் வந்தது.

அங்கு வீடு வீடாக சண்டை நடந்தது. இந்தப் போரின்போது சேகுவேரா ஒரு வீட்டின் மீதிருந்து குதித்தார்.

அவரது இடதுகை முறிந்தது. நெற்றியில் கடுமையான காயம் ஏற்பட்டது.

உள்ளூர் மருத்துவமனையில் கைக்குக் கட்டுப்போட்டுக் கொண்டு அவர் போர் முனைக்கு திரும்பினார்.

# மேக்கப் புன்னகை



**11**

## பட்டுக்கோட்டை பிரபாகர்

> ★ என்.எஸ். கிருஷ்ணன் தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்?
> • என்.எஸ். கிருஷ்ணன் இல்லாத படம் உண்டா? தற்போது தயாராகிக்கொண்டிருக்கும் எல்லாப் படங்களிலும்தான் அவர் நடிக்கிறார்.
> *கேள்வி– பதில் பகுதியில்.. 'கலை' ஜூன், 1949 இதழில்–*

மதுமிதா காரை நிதானமாகச் செலுத்தினாள்.

ரியர்வியூ கண்ணாடியை அட்ஜஸ்ட் செய்தாள். அம்பாஸிடரில் தூரத்தில் ஈஸ்வர் தன் காரைத் தொடர்ந்து கொண்டிருப்பதைக் கவனித்தாள். மெதுவாகச் சிரித்துக் கொண்டாள்.

எல்லோருக்கும் எதிரி வீட்டுக்கு வெளியே இருந்தால், எனக்கு மட்டும் வீட்டுக்கு உள்ளேயே!

அம்மாவுக்கு இந்த ஈஸ்வரை எந்தக் காரணத்தால் பிடித்துப் போனது?

ஈஸ்வரின் சுயமுகம் இன்றுவரை அம்மா உணராமல்தான் இருக்கிறாளா? எனில், அம்மா ஒரு உலக மகா முட்டாள்!

அம்மாவுக்கு அப்போது இவர்மேல் ஏற்பட்ட காதலா? இல்லை– அம்போவென்று கைவிட்டுவிட்டு ஓடிப்போன அப்பாவைப் பழிவாங்கும் ஒரு நடவடிக்கையாகத்தான் ஈஸ்வரைச் சேர்த்துக் கொண்டாளா?

அம்மாவுக்கு அப்போது தேவைப்பட்டது ஒரு நம்பிக்கையான ஆசாமியின் பாதுகாப்பு; மனசுக்கு இதமாக ஆறுதல் வார்த்தைகள்.

செகரெட்டரியாக அருகிலேயே இருந்த ஈஸ்வருக்கு, அம்மாவின் பலமும் தெரியும்; பலவீனமும் தெரியும்.

பெரிய தைரியசாலி மாதிரி வெளியே போனாலும் அம்மா ஒரு பயங்கரக் கோழை என்பது அவருக்குத் தெரியாதா?

அம்மாவிடம் அதிகாரம் செய்தால் வேலையாகாது. அதுவே கெஞ்சலாக இதயத்தைத் தொடும்படியாகப் பேசிவிட்டால் உடனே நடந்து விடும். இது ஈஸ்வருக்குத் தெரியாதா? ஈஸ்வருக்குத் துருதுருவென்ற மூளை. ஆனால் துருப்பிடித்த மனசு! வெளியே சாதுப்பசு. உள்ளே சதி மிக்க நரி.

அம்மாவுக்கு ஆறுதல் சொல்லிச் சொல்லியே ரொம்ப அருகில் வந்து ஒட்டிக்கொண்டு விட்டார்.

அம்மாவின் கழுத்தில் உள்ள தாலி அப்பா கட்டியதுதான் என்று எனக்குத் தெரியும். ஆனால் இது ஈஸ்வர் பெங்களூருக்கு அருகில் ஒரு கோயிலில் வைத்துக் கட்டியது என்றும், அப்பா கட்டிய தாலியை எப்போதோ தான் கழற்றி வீசி விட்டதாகவும் பத்திரிகைக்காரர்களிடம் சொன்ன பொய்யையே எனக்கும், இனியாவுக்கும் இன்றுவரை சொல்லிக் கொண்டிருக்கிறாள் அம்மா.

ஈஸ்வருக்கு இந்த வீட்டில் தன்நிலை என்ன, உரிமை என்ன, அதிகாரபூர்வமாக என்ன உறவு என்று எல்லாம் தெரியும்.

அதனால்தான் நிறைய சதிகள் செய்து கொண்டிருக்கிறார். அவர் மனதில் பலவிதமான திட்டங்கள் இருப்பது எனக்குத் தெரியும்.

ஆனால் அம்மா அவரை ஒரு அப்பாவி என்று அப்பட்டமாக நம்பிக் கொண்டிருக்கிறாள்.

முதல் படம் எடுத்தபோது ஏற்பட்ட நஷ்டத்திற்குள் இவரால் ஏற்படுத்தப்பட்ட நஷ்டம் கணிசமாகப் பங்கு பெற்றிருப்பது எனக்குத் தெரியும். ஆனால் கையும் களவுமாக ஆதாரபூர்வமாக என்னால் நிரூபிக்க முடியாது. அந்த அளவிற்கு ஈஸ்வர் முட்டாள் இல்லை.

இப்போது இரண்டாவது படம் எடுத்துக் கொண்டிருப்பதிலும் ஏதேதோ தில்லுமுல்லுகள் நடந்து வருகின்றன.

அம்மாவின் மூளை மழுங்கி விட்டதால் எல்லாவற்றையும் நம்புகிறாள், என்னைத் தவிர.


என்னைப் பற்றி அவள் மனதில் ஏராளமாக வளர்ந்திருக்கும் வெறுப்புக்கும் ஈஸ்வர்தான் காரணமாக இருக்க வேண்டும். அவ்வப்போது என்னைப் பற்றிய வெறுப்பு ஊசியை அம்மாவின் மனதில் செலுத்திக் கொண்டிருப்பவர் அவர்தான்.

நான் செய்து கொள்ளப்போகும் திருமணம் இனியாவைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான விஷயம். ஏனென்றால், அவளைப் பொறுத்தவரை நான் ஒரு போட்டி. அந்தப் போட்டி விலகிவிடும். தன்னிஷ்டப்படி செயற்படலாம். சுதந்திரம் மீட்கப்படும்.

அம்மாவைப் பொறுத்தவரை உணர்வு ரீதியாகவும் பாதிப்பு இருக்கிறது. பொருளாதார ரீதியாகவும் பாதிப்பு இருக்கிறது.

தான் திருமணம் செய்து கொண்டு அதில் தோல்வியைச் சந்தித்ததால், என் திருமண வாழ்வு பற்றி சந்தேகம் உண்டு. அடி மனதில் பொறாமையும் உண்டு. ஒரு தாய் தன் மகளின் மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பார்த்துப் பொறாமைப்படுவாளா? படுவாள்! என் தாய் படுவாள். எனக்கு அவளைத் தெரியும். அவள் அடி மனதில் படிந்திருக்கும் எல்லாம் தெரியும்.

என்னை நடிகையாக்கியவள் அவள் தான். ஆனால் தன் காலத்தில் தனக்குக் கிடைத்த புகழையும், பணத்தையும் விட பல மடங்கு தன் மகளுக்குக் கிடைத்து வருவது அவள் மனதில் ஒரு நிரந்தரப் புழுக்கத்தை ஏற்படுத்திவிட்டது.



ஏதாவது ஒரு புத்தகத்தில் அட்டைப் படமாக என்னைப் போட்டிருந்தால் அவள் முகம் அன்றைக்கு முழுக்க பார்க்கச் சகிக்காது. ரொம்ப நாளாக, அநேக சம்பவங்களில் அவளைக் கவனித்து நான் யோசித்து அறிந்து கொண்டது தான் அந்தப் புழுக்கம்.

நான்கு வருடங்களுக்கு முன்பாக திடீரென்று எல்லா டைரக்டர்களுக்கும் ஃபோன் செய்து பேசினாள் அம்மா.

"வீட்ல போரடிக்குதுங்க. நடிச்சுப் பழகிட்டதால நடிக்காம இருக்கிறதே உறுத்தலா இருக்கு. மறுபடி நடிக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். அக்கா கேரக்டர், அம்மா கேரக்டர் எதுவா இருந்தாலும் சரிங்க."

தன் முடிவை என்னிடம் சொன்னபோது, நான் சொன்னேன்,

"அம்மா கதாநாயகியாகவே நடிச்சிட்டிருந்துட்டு கௌரவமா நீ ஃபீல்டை விட்டு விலகிட்டே. உன்னைப் பத்தி ஒரு கவர்ச்சியான இமேஜ் இன்னைக்கும் இருக்கு. இப்ப நீ மறுபடி நடிக்கிறதுக்கான அவசியம் என்ன இருக்கு? பணப்பிரச்சனைன்னு சொல்ல முடியாது. நான்தான் லட்ச லட்சமா கொட்டிக் கிட்டிருக்கேன். இப்ப நீ செட்டுக்கு வந்தா பழைய மரியாதை கிடைக்காதும்மா. அந்தப் பழைய கௌரவத்தோட நிறுத்திக்கிறது நல்லது."

"இன்னைக்கு நம்ம குடும்பம் முழுக்க முழுக்க உன் வருமானத்தை நம்பி ஓடுது. எனக்குன்னு ஒரு வருமானம் இருந்தா எல்லா முடிவுரைக்கும் நான் உன்னைக் கேக்க வேண்டியதில்லை பாரு."

"ஏம்மா இப்பிடிப் பிரிச்சுப்பேசறே? இன்னைக்குத்தானேம்மா எனக்கு இத்தனை வருமானம்? என்னை நீதானே இந்தச் சினிமாவுல நுழைச்சு விட்டே. அன்னைக்கு எதுவும் இல்லையே!"

"சினிமா எடுக்கணும்னு சொன்னா நீ மறுக்கறே! என்கிட்ட பணம் இருந்தா உன் தயவை எதிர்பார்க்க வேண்டியதில்லையே."

"அவ்வளவுதானே? சரிம்மா. நான் எந்த மறுப்பும் சொல்லலை. சினிமா எடு. தாராளமா எடு!"

சொந்தப்படத் தயாரிப்புக்கு நான் அப்படித்தான் சம்மதிக்க வைக்கப்பட்டேன்.

ஆனாலும், அம்மா பாத்திரத்தில் இரண்டு படங்களில் நடித்தாள். அதற்காக பியூட்டி பார்லர், ஜிம் என்று போய் உடம்பைக் குறைக்கிற, அழகாக்கிக் கொள்கிற முயற்சியில் ஈடுபட்டு...

அப்படியும் பத்திரிகைகளில் கிண்டல் செய்துதான் எழுதினார்கள்.

'மதுமிதாவின் அம்மாவுக்கு இந்த விபரீத ஆசை ஏற்பட்டிருக்கத்தான் வேண்டுமா? ஸ்கிரீன் முழுக்க வருகிறார். பின்னணியில் 'ஹாத்தி மேரே சாத்தி' பட இசையை ஒலிக்கச் செய்திருப்பது சரியான கிண்டல்.'

அம்மா அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. எனக்குத்தான் வேதனையாக இருந்தது.

எனக்குத் தெரிந்த டைரக்டர்களிடம் எல்லாம் 'தயவுசெய்து நடிக்கச் சொல்லி அம்மாவை அழைக்காதீர்கள்!' என்று நான் கேட்டுக் கொண்டேன்.

அதற்கும் சண்டை! 'தனக்கு வரும் வாய்ப்புக்களைத் தடுக்க நான் யார்? என்று தீவிரமான சண்டை. நான் எதற்காக அப்படிச் செய்தேன் என்பதை புரிந்து கொள்ளாமல் வீம்புச் சண்டை!'

அது முதல் நான் அம்மாவுக்கு எதிரியாகிப் போனேன்.

தன் மகள்மேல் பழி தீர்த்துக்கொள்ள ஒரு தாய் செய்யத் துணியாத ஒரு காரியம் செய்தாள் அம்மா.

தனக்கு வேண்டிய ஒரு நிருபரை அழைத்து, நான் ஒரு நடிகருடன் உல்லாசமாக இருப்பதாகவும், விளைவாக வயிற்றில் கரு உண்டாகி அதை இரகசியமாகக் கலைத்துக் கொண்டதாகவும் செய்தி வெளியிடச் செய்தாள்.

அந்த நிருபர் செய்தியைப் போட்டுவிட்டு, பிறகு ஒரு நாள் போதை நிலையில், அம்மாதான் அப்படிப் போடச் சொன்னாள் என்று என்னிடம் உளறிக் கொட்டியபோது....

நான் நடுங்கிப் போனேன்.

அவள் அம்மாதானா? நிஜமாகவே என்னைப் பெற்றவள் அவள்தானா?

அந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் அம்மா என் மனதிலிருந்து ரொம்பதூரம் விலகிப்போனாள். மதிப்பு, மரியாதை எல்லாம் காற்றில் கரைந்து போனது. பார்க்கும் போதெல்லாம் ஆத்திரம்தான் கொப்புளித்தது.

இனி என் சொந்த உணர்வுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தர வேண்டும் என்று இதயத்தில் அழுத்தமான சிந்தனை பதிந்தது.

அந்த அம்மாதான் நான் யாரை நேசிக்கிறேன், யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று வேவு பார்ப்பதற்காக ஈஸ்வரை உளவாளியாக அனுப்பி வைத்திருக்கிறாள்.

ஹொட்டலுக்குள் ஈஸ்வர் நுழையும் போதே நான் அவரைப் பார்த்து விட்டதால்தான் அவரிடமிருந்து அவசரமாகப் பிரிந்து புறப்பட்டு விட்டேன்.

ஈஸ்வரையும், அம்மாவையும் ஏமாற்றி விட்டுத் திருமணம் செய்து கொள்வது என்பது... ஒரு மிகப் பெரிய சவாலாகத் தான் எனக்கு அமையப்போகிறது.

பார்க்கலாம். என் முடிவிலிருந்து நான் பின்வாங்குவதாக இல்லை. கண்டிப்பாக இந்தத் திருமணம் என் விருப்பப்படி நடக்கத்தான் போகிறது.

சிந்தனையோடு காரைச் செலுத்திக் கொண்டிருந்த மதுமிதா, அந்த விளைவால் மிக வேகமாக வந்த பைக்கைக் கவனிக்கத் தவறியதால்... எதிர்பாராத அந்த விபத்து– இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்துவிட்டது. **(தொடரும்)**

---

## அனுபவம் புதுமை புதிய பகுதி

**கவியரசு கண்ணதாசன் ஈடு இணையில்லாத கவிச் சுரங்கம். அவர் பக்கத்திலேயே இருந்த உதவியாளர் இராம கண்ணப்பன். கவியரசு பற்றி அவர் எழுதிய சுவையான அனுபவங்கள்:**

# "மயக்கம் எனது தாயகம்"



ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதாம் ஆண்டுகளுக்குப் பிறகு, சில ஆண்டு காலங்கள் கவிஞர் மிகவும் குழப்பம் மிகுந்தவராகவே இருந்தார். எனினும், தனது தொழிலில் தெளிவாகவே விளங்கினார்.

'எந்த ஒலிக்கும் எதிரொலி உண்டு,' என்பதற்கேற்ப தனது உணர்ச்சி வசத்தால் உண்டாகியிருந்த எதிர் விளைவுகளை எல்லாம், அக்காலங்களில் அவர் சந்தித்துக்கொண்டிருந்தார்.

தி.மு.கழகத்தின்
விரோதம்–
நண்பர்களின் துரோகம்–
கடன் கொடுத்தோரின் அரிப்பு–
குடும்பத்தின் பெருக்கம்–
குழந்தையின் வளர்ச்சி–
தனது எதிர்காலம்–

இவையனைத்தும் சேர்ந்து அவரை மிரட்டிக் கொண்டிருந்தன.

அப்போது, அவர் மீது நீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் இருந்தன. அனைத்தும், 'கவலை இல்லாத மனிதன்' படத்திற்கு கடன்கொடுத்திருந்தவர்கள் தொடுத்திருந்த வழக்குகள்.

தொழில்-கூட்டாளியை நம்பி, கையெழுத்துப் போடும் உரிமையை அவருக்கு அளித்திருந்ததால், அவர் கையெழுத்து போட்டு ஏராளமாகக் கடன் வாங்கி விட்டார். படம் வெளியாகி தோல்வியுற்றதும், கூட்டாளி சொல்லிக் கொள்ளாமல் தன் ஊருக்குப் போய்விட்டார்.

கையெழுத்து போடாமலே கடனாளியான கவிஞரை கடன்காரர்கள் வளைத்துக் கொண்டார்கள்.

கொடுத்த பணத்திற்கு மேலாகவே வட்டி வசூலித்துக் கொண்டவர்கள் கூட அவரை நீதிமன்றத்திற்கு இழுத்தார்கள்.

இத்தனைக்கும், அன்று திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் நடத்திக் கொண்டிருந்தவர்களில் பெரும்பாலோர் கவிஞரது சமூகத்தவரே. ஒரிரு மார்வாடிகளும் இருந்தனர்.

காலையில் கண் விழித்ததும், கடன்காரர்கள் பிரச்சனையே அவருள் விஸ்வரூபமெடுத்து நிற்கும்.

நேற்றுக் கொடுத்த காசோலை வங்கியில் வந்து நிற்கும். இருப்பில் பணம் இருக்காது. அதற்கு பணம் புரட்டி வங்கியில் கட்ட வேண்டும். வழக்குரைஞரை சந்தித்து இன்று என்ன வழக்கு? என்று தெரிந்து கொள்ள வேண்டும். இத்தனை தொல்லைகளையும், சமாளித்துவிட்டு பாட்டெழுதச் செல்ல வேண்டும்.

இத்தனை வில்லங்கங்களுக்கு மத்தியிலும், அவர் பாடல்கள் புனைந்தார், என்றாலும், அவற்றில் ஒன்று கூட சோடை போனதில்லை.

இசைக்குழுவுக்கு மத்தியில் அமர்ந்து விட்டால், கவிஞர் நாத வடிவாகி விடுவார். எந்தக் கவலையும் அந்த நிமிஷத்தில் அவரை விட்டு நீங்கி விடும். சோகமே சுகமானதைப் போல கற்பனைகளை வடித்து வைப்பார்.

அன்று (1960) அவருக்கிருந்த கடன்– வட்டியும், முதலுமாக ஆறு இலட்சத்திற்கும் மேல்.

கவலைகளுக்கு மத்தியிலும் தனது கற்பனை வல்லமையால் கவிஞர் புகழை வளர்த்துக் கொண்ட காலம் அது.

'பாட்டு...பாட்டு...' என்று தயாரிப்பாளர்களின் கூட்டம் ஒரு பக்கமும், கடன் கொடுத்தவர்கள் கூட்டம் ஒரு பக்கமுமாக அவரது வீட்டு வாசலில் காலை வேளையில் கூடி நிற்பார்கள்.

'காலை எழுந்தவுடன்
படிப்பு–பின்பு
கனிவு கொடுக்கும்
நல்ல பாட்டு
மாலை முழுதும்
விளையாட்டு– என்று
வழக்கப்படுத்திக்
கொள்ளு பாப்பா!'

–என்று மகாகவி பாரதி, பாப்பாவுக்கு போதித்தற்கொப்ப, 'காலை எழுந்தவுடன் கடன்காரரைப் படித்து அந்தக் கடனை அடைக்கப் பாட்டெழுதி, மாலை முழுதும் அரசியல் விளையாட்டு விளையாடி'– இவ்வாறே அவரது பொழுதுகள் போய்க் கொண்டிருந்தன.

வெட்டிச் சேவையில் நல்ல பொழுதுகள் வீணாகிக் கொண்டிருந்தன...

இலக்கியத்தில், அரசியலில், வாழ்க்கையில் தன் பாத்திரம் என்ன? விமர்சகர்கள் கூறுவது போல இழுத்த இழுப்புக்கெல்லாம் ஓடிக் கொண்டிருப்பவன் தானா?

'குங்குமம்' படத்தின் கதாநாயகனுக்கும் இதே பிரச்சனை.

தன்னிலை விளக்கமாக பாட்டுப் பிறக்கிறது:

*'மயக்கம் எனது தாயகம்*
*மவுனம் எனது தாய்மொழி*
*கலக்கம் எனது காவியம்–நான்*
*கண்ணீர் வரைந்த ஓவியம்!*

*பகலில் தோன்றும் நிலவு–கண்*
*பார்வைக்கு மறைந்த அழகு*
*திரை மூடிய சிலை நான்–துன்பச்*
*சிறையில் மலர்ந்த மலர் நான்!*

*நானே எனக்கு பகையானேன்–என்*
*நாடகத்தில் நான் திரையானேன்*
*தேனே உனக்கு புரியாது–அந்தத்*
*தெய்வம் வராமல் விளங்காது!*

*விதியும், மதியும், வேறம்மா–அதன்*
*விளக்கம் நான்தான் பாரம்மா!*
*மதியில் வந்தவள் நீயம்மா–என்*
*வழி மறைத்தவள் விதியம்மா!'*

–இவ்வாறு தனது அன்றைய நிலையை விளக்கி, சூசகமாக எழுதினார்.

அந்தக் காலத்தின் சூழ்நிலையை உணர்ந்தவர்களுக்கு, கவிஞரது தன்னிரக்க வரிகள் புரியும்.

இதற்கிடையே மூன்று திரைப்படங்களையும் தயாரித்தார்.

'வானம்பாடி', 'இரத்த திலகம்', 'சுமைதாங்கி'.

'சுமைதாங்கி' படத்தின் கதாநாயகன் குடும்பத்தின் மூத்த மகன். தம்பிகளும், தங்கைகளும் உண்டு. தந்தைக்கு வருமானம் இல்லை. இவனே உழைக்க வேண்டும். குடும்பத்தின் சகல பொறுப்புகளையும் ஏற்க வேண்டும். இந்த நிலையில் இவனுக்கும் ஒரு காதல்.

தம்பிகளைப் படிக்க வைக்கிறான். தங்கைகளுக்கு திருமணம் செய்து வைக்கிறான். படிப்பை முடித்த தம்பிகள் வேலைக்கு போனதும், தன்சுமை குறையும் என்று கருதுகிறான். அவர்களோ தனி வாழ்க்கை அமைத்துக் கொள்கிறார்கள்.

காதலி வேறு நெருக்குகிறாள்–

மன நிம்மதி இழந்து அவன் தவிக்கிறான்.

அவன் ஆறுதல் கொள்ள வேண்டும்.

பாடலுக்கான சூழ்நிலையை கூறினார் இயக்குநர் ஸ்ரீதர்.

கவிஞரின் அப்போதைய மனோநிலையும் இதுதானே! பிரச்சனைகள் வேறு வேறு என்றாலும், மனோநிலை ஒன்று தானே!

தன்னையே முன்னிருத்தி, தனக்கே ஆறுதல் கூறிக்கொண்ட வரிகள்:

*'மயக்கமா கலக்கமா*
*மனதிலே குழப்பமா*
*வாழ்க்கையில் நடுக்கமா?'*

–இதையெல்லாம் கண்டு மயங்காதே! இவையெல்லாம் இயல்பானவை!– தொடர்கிறார்:

*'வாழ்க்கை யென்றால் ஆயிரமிருக்கும்*
*வாசல் தோறும் வேதனையிருக்கும்*
*வந்த துன்பம் எதுவென்றாலும்,*
*வாடி நின்றால் ஓடுவதில்லை!*
*எதையும் தாங்கும் இதயம் இருந்தால்*
*இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்!'*

'ஒவ்வொருவருக்கு ஏற்படும் ஒவ்வொரு துயர அனுபவங்களும் தனிப்பட்டவையல்ல; உலகப் பொதுவானவை. அது தனக்கு மட்டும் ஏற்பட்டதல்ல எனவே, அதற்காக கூறப்படும் சமாதானங்கள் எல்லாருக்கும் பொருந்த வேண்டும்,' என்ற கொள்கையில் கவிஞர் மிகவும் குறியாக இருந்தார்.

வாழ்க்கையில் வெறுப்பும், விரக்தியும் கொண்டு வருந்திக் கொண்டிருந்த பலருக்கு, இந்தப் பாடல் சமாதானம் மிகுந்ததாக அமைந்தது.

இன்று பிரபலமாக விளங்கும் ஒரு பாடலாசிரியர், தனது ஆரம்ப காலத்தில் வாழ்க்கையில் விரக்தி அடைந்தவராய் தற்கொலைக்கு முயன்றார் என்றும், அவரது தற்கொலை முயற்சியை இந்தப் பாடல்தான் தடுத்து வாழ்க்கையில் பிடிப்புக் கொள்ளச் செய்தது என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன். □

# வியாபாரம்

மலர்விழியின் வாழ்க்கையில் இன்றைய நாள் மறக்கமுடியாததாக இருந்தது. அவள் வாழ்க்கையில் அதிக சந்தோசமாக இருக்கின்ற நாள் இன்றுதான் என்று சொன்னால்கூட மிகையாகாது.

அவளது நான்கு வருடக் காதல் கல்யாணத்தில் முடிவதற்காக அடித்தளம் போட தீர்மானம் எடுப்பதற்கான நிச்சயதார்த்தத்திற்கு எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன.

மாப்பிள்ளையும் அவர் குடும்பமும்- மன்னிக்கவும் காதலனும்- அவனது குடும்பமும் வருவதுதான் மிகுதியாக இருந்தது. அவர்கள் வருகைக்காக அவள் மனசு ஏங்கி, எதிர்பார்த்துக் கொண்டிருந்தது....



யாழ். மு.கலை

சிவாவும் மலர்விழியும் காதலிக்கத் தொடங்கிய சில காலங்களுக்குள்ளேயே அவர்களது காதல் இரு வீட்டாருக்கும் தெரிந்து விட்டது. மலர்விழி வீட்டார் சிவா மீதோ, அவர்கள் குடும்பத்தின் மீதோ குறை கண்டு பிடிக்க முடியாதமையால் காதலுக்கு எதிர்ப்பு எதுவும் காட்டவில்லை. ஆனால் சிவாவின் அப்பா- ஆண்பிள்ளையைப் பெற்றவர்களுக்கு வழமையில் ஏற்படும் திமிருடன்- காதலை எதிர்த்து வந்தார்.

இதனால் தனது காதல் கல்யாணத்தில் முடியுமா? என்ற கேள்விக்குறியுடனேயே சிவாவுடன் பழகிவந்த மலர்விழிக்கு-

"அப்பா எங்கடை காதலுக்குச் சம்மதம் சொல்லிவிட்டார். நாளைக்கு உங்கடை வீட்டை சம்பிரதாயப்படி எங்கடை கல்யாணத்தைப்பற்றி பேசிறதுக்கு நாங்கள் வருவோம். அதுக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுங்க," என நேற்று சிவா சொன்னதிலிருந்து மலர்விழியால் நிலத்தில் நிற்க முடியவில்லை. வானத்தில் பறந்து கொண்டிருந்தாள்...

"அவை வருகினம் அவையை வந்து உள்ளே கூப்பிடுங்க!" என மலர்விழியின் அம்மா அப்பாவுக்குச் சொல்வது அவளுக்குக் கேட்க, அவளது இதயம் காரணமில்லாது வேக வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

மலர்விழியின் அப்பாவும், அம்மாவும் வந்தவர்களை இனிதாக வரவேற்றனர்.

மலர்விழி தனது அறை ஜன்னலின் ஊடாக- போடப்பட்டிருந்த திரைச் சேலையினூடாக- வந்தவர்களைப் பார்த்தாள்.

சிவா, அவனது அப்பா, அம்மா சித்தப்பா, சித்தி ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

கல்யாணப்பேச்சை ஆரம்பித்தவுடன் மாப்பிள்ளைக்கு ஏற்படும் கல்யாணக்களை சிவாவின் முகத்தில் தெரிந்தது. கம்பீரத்துடன் அங்கு சிவா இருந்தது அவளுக்கு மேலும் சிவாமீது பிடிப்பை ஏற்படுத்தியது.

மலர்விழியின் குடும்ப சார்பாக அவளது மாமாவும் அங்கு வந்து சேர்ந்திருந்தார். மலர்விழியின் அம்மா எல்லோருக்கும் பலகாரங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தாள். எல்லோரும் இரசித்துச் சாப்பிட்டுக் கொண்டும் பேசிக் கொண்டுமிருப்பதை அப்பொழுதும் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள் மலர்விழி.

"அவையளுக்கு சாப்பிட எல்லாம் குடுத்திட்டன். குடிக்க ரீ போடுறன். வந்து எடுத்துக் குடு பிள்ளை," என்ற தாயிடம், "நீங்களே கொடுங்களேனம்மா!" தயக்கத்துடன் சொன்னாள்.

"எனக்கே கலியாணம்? உன்னை அவையள் பார்க்க வேண்டாமோ? அதுக்காக நீதான் கொண்டு போய்க் கொடுக்க வேணும்!"

வெட்கம், அச்சம் அவளை ஆட்கொள்ள "என்ன அவையளுக்குத் தெரியுந்தானேயம்மா," என்றாள்.

"உன்னை அவைக்கு முன்பே தெரிந்தாலும் இது ஒரு சம்பிரதாயத்துக்கு செய்யிற சடங்கு, சரி...சரி...கதைச்சுக் கொண்டு நிற்காம வந்து ரீயைக் கொண்டுபோய்க் குடு!" என்ற தாய் குசினிக்குள் நுழைந்து விட்டாள்.

மீண்டும் கண்ணாடிக்கு முன் நின்று அலங்காரத்தைச் சரி செய்து கொண்டு, தாய் தயாரித்து வைத்த பால்தேனீரை எடுத்துக்கொண்டு- கால்கள் பின்ன, கைகள் பதற- முன் அறைக்கு வந்தாள்.

எல்லோர் கண்களும் அவளை மொய்த்துக் கொண்டன. நாணம் அவள் தலையில் வந்தமர, தலை கவிழ்ந்தபடியே தேனீரைப் பரிமாறிவிட்டு, உள்ளே வந்து மீண்டும் ஜன்னல் வழியே அங்கு நடப்பவற்றை விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதுவரை இனிய சூழலை ஏற்படுத்தியிருந்த அவர்களது பேச்சுக்கள் "நீங்கள் உங்கள் பிள்ளைக்கு என்ன செய்யப் போறியள்?" என சிவாவின் சித்தப்பாவின் கேள்வியைத் தொடர்ந்து புதிய சூழலை மலர்விழியின் வீட்டார் மனங்களில் ஏற்படுத்தியது.

"இந்த வீடும், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மலர்விழிக்கு இருக்குது. அதைவிட காசாக ஒரு இலட்சம் ரூபா கொடுக்கலாம் என யோசித்திருக்கிறன்," என மலர்விழியின் அப்பாவும், மாமாவும் முன்பே கதைத்து வைத்ததை மாமா சொன்னார்.

சிவாவின் அப்பாவின் முகத்தில் தொடர்ந்து ஏற்பட்ட மாறுதலை மலர்விழியும் அவதானிக்கத் தவறவில்லை. இவர்களது சீர்வரிசை போதாது என்பதையே அவரது முகம் திரையிட்டது.

"வீடும் நகையும் போதும். காசைக் கொஞ்சம் கூட்டித் தந்தால் நல்லது!" என சிவாவின் அப்பா சொன்னார்.

"தர இருக்கிற ஒரு இலட்சத்தையே கடன் பட்டுத்தான் தர இருக்கிறன். இதைப் புரட்டுறதே கஷ்டம்," என வார்த்தைகளை மென்று விழுங்கினார் மலர்விழியின் அப்பா.

**ஆவேசத்துடன் வெளியே வந்தாள். எல்லோர் கண்களும் அவளை நோக்கின.**

"சிவாவுக்குக்கீழே இரண்டு பெண் சகோதரங்கள் இருக்குதுகள். சிவா வாங்குற சீதனத்தைக் கொண்டுதான் அவையளைக் கரை சேர்க்க வேணுமெண்டு யோசிச்சிருந்தன். இவன் என்ரை எண்ணித்திலை மண்ணைப் போட்டுட்டான். இவன் காதலிச்சுத் தொலைக்காவிட்டால் நல்லசீதனம் கிடைக்கக் கூடிய இடத்திலை கட்டிக் கொடுத்து, தங்கைச்சிமாருக்கும் ஒரு வழியைத் தேடியிருப்பன்!" என சிவாவின் அப்பா கதைத்தது மலர்விழியின் அப்பாவுக்குத் துளி கூடப் பிடிக்கவில்லை. ஆனாலும் மகள் காதலித்து விட்டாள். அவளின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, நெஞ்சில் வலி ஏற்படுத்திய வார்த்தைகளைக்கூட பொறுத்துக் கொண்டார்.

"இன்னுமொரு அம்பதாயிரத்தைக் கூடத்தர முயற்சிக்கிறேன்," என மலர்விழியின் அப்பா சொன்னார்.

"அப்படி நீங்க ஒன்றரை இலட்சம் தந்தாலும் அதிலை கல்யாணச் செலவுகளுக்கே அம்பதாயிரம் போனால் மிச்சம் ஒரு இலட்சத்தை வைச்சு நான் என்ன செய்ய முடியும்?" என மனிதாபிமானம் இல்லாமல் சிவாவின் அப்பா சொன்னார்.

இப்பேச்சுக்களில் தலையிடாமல் ஒரு சடப்பொருள் போல் சிவா இருந்தது மலர்விழிக்கு கோபத்தை உண்டாக்கியது.

எல்லோரும் அமைதியாக இருந்தனர். சில நிமிடங்களின் பின்..

"நீங்கள் காசாக இரண்டரை இலட்சம் தந்தால்கூடப் பரவாயில்லை. அம்பதாயிரத்தைக் கல்யாணச் செலவுக்கு எடுத்துக் கொண்டு மிச்சத்தை ஆளுக்கு ஒரு இலட்சப்படி தங்கைச்சிமாருக்குக் கொடுப்பன்," என சிவாவின் அப்பா சொன்னார்.

அவர் கேட்கும் தொகையை எப்பாடுபட்டும் கொடுக்க முடியாது என்பதை உணர்ந்த மலர்விழியின் அப்பா மௌனியானார். மீண்டும் மயான அமைதி நிலவியது.

திரும்பவும் அமைதியை சிவாவின் அப்பாதான் குலைத்தார்.

"இவன் கம்பஸிலை படிக்கிறதுக்கே நான் இலட்சக்கணக்கிலை செலவழிச்சனான். இவனுக்குச் செலவழிச்ச காசை பாங்கிலை போட்டு வைச்சிருந்தாலே இரண்டு பிள்ளையளின்ரை கல்யாணத்துக்குப் போதும். இதை விட்டால், இவன் கல்யாணஞ் செய்தாப்பிறகு எனக்கா உழைச்சுத் தரப்போறான்? என்னுடைய நிலமையைச் சொல்லிப் போட்டன். ஏதோ நல்ல முடிவா சொல்லியனுப்புங்க!" என்றவாறு எழும்பியவரை,

"கொஞ்சம் இருங்க!" என்ற வார்த்தை இருக்கையில் மீண்டும் அமர்த்தியது.

அந்த வார்த்தை மலர்விழியிடமிருந்துதான் வந்தது. ஆவேசத்துடன் வெளியே வந்தவளை எல்லோர் கண்களும் அகல விரிந்து நோக்கின.

"உங்க மகனை நான் விரும்பியது உண்மைதான். ஆனால் உங்க மகனுக்கு அதிக விலை சொல்லுவியளெண்டு நான் எதிர்பார்க்கவில்லை. நீங்க சொல்லுற விலைக்கு உங்க மகனை வாங்கக்கூடிய வசதி எங்களட்டை இல்லை. கடன்பட்டு உங்க மகனை வாங்க வேண்டிய அவசியமும் எங்களுக்கில்லை. அதனாலை நீங்கள் வேறெங்காவது உங்க மகனை நல்ல விலைக்கு விற்க முயற்சி செய்யுங்க!" என்ற முகத்திலடித்த பதிலை அவளிடமிருந்து எவரும் எதிர்பார்க்கவில்லை. ▭

# மாறிய பாதை



வீரமுனை வானவர்கோன்

கொள்ளுப்பிட்டி செல்வதற்காக நுகேகொட பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸின் வருகைக்காக நீண்ட நேரமாக காத்திருந்தான் காந்தன். கொள்ளுப்பிட்டி செல்வதற்காக அந்தப் பாதையில் ஒரு சில பஸ்களே நேரம் குறித்துச் செல்வதால், காந்தனால் நினைத்தவாறு உடனடியாக பஸ்ஸைப் பிடிக்க முடியவில்லை. அவன் தரிப்பிடம் வருவதற்கு சில வினாடிகளுக்கு முன்பே நூற்றிப் பன்னிரெண்டாம் இலக்க பஸ் சென்றிருந்தது. என்ன செய்ய முடியும் காந்தனால்? அடுத்த பஸ்ஸின் வருகைக்காக காத்து நிற்க வேண்டிய கதி ஏற்பட்டு விட்டது.

கொழும்பு மாநகரை அடுத்து நுகேகொட பகுதி பிரபல்யம் மிக்க சந்தைத் தொகுதியைக் கொண்டது. மக்கள் சாரி சாரியாக வருவதும், போவதும், தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதுமாக இருந்தனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் பாதசாரிகளின் எண்ணிக்கை குறைந்து இருந்தது என்பது உண்மைதான். ஆனால் கடைகளினுள் சனக்கூட்டம் நெரிசலாகவே இருந்தது. அதுவும் குளிரூட்டிய கடைகளின் முன்னாலும் சனக் கூட்டங்களைத் தொடர்ந்து பார்க்கக் கூடியதாக இருந்தது.

ஆங்காங்கே காதலர்களும் கைகோர்த்த வண்ணம் பஸ் தரிப்பிடம், மரநிழல் போன்ற இடங்களில் நின்று கதைக்கின்றனர், அவர்களில் சிலர் தன் நிலை மறந்தவர்களாகக் காட்சி தருகின்றனர்.

காந்தனும் வாலிப வயதுடையவனானபடியினால் சலனம் அவனையும் தாக்கியதில் தப்பில்லை. இந்தப் பகுதியில் காதலரின் கூத்து இல்லறத்தை நாடாத முனிவர்களையும் திரும்பிப் பார்க்க வைக்கும்.

நீண்ட நேரமாக பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்த காந்தனின் பார்வை, தெருவின் முன்னே இருந்த கண்ணாடியால் போர்த்தப்பட்டிருந்த ஜவுளிக் கடைக்கு அடிக்கடி தாவிச் சென்று கொண்டிருந்தது. காரணம் ஜவுளிக் கடையின் கண்ணாடியில் தொங்கிக் கொண்டிருந்த சீலையை விலக்கியவாறு அழகிய பெண்ணொருத்தி வெளியே நின்று கொண்டிருந்த காந்தனை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.


அழகியின் பூ முகத்தினைக் கண்டதும் காந்தன் சந்திரனைக் கண்ட தாமரை மலரானான். ஜவுளிக் கடையின் திரைச் சீலை விலகுகின்றதா, மங்கையின் திருமுகம் தரிசனம் தருகின்றதாவெனவும், தெருவில் பஸ் வருகின்றதாவெனவும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே இருந்தான் காந்தன்.

உடல் நிலையில் ஏதோ மாற்றம், நெஞ்சு கூடுதலாக அடித்து படபடத்துக் கொண்டிருந்தது. நினைவில் அந்த மெல்லிடையாள் முகமே வந்து கொண்டிருப்பதுடன், தெருவில் அவளுடன் கை கோர்த்து நடப்பது போன்ற உணர்வும் மேலோங்கி நின்றது.

அவளின் நினைவில், ஜவுளிக் கடையையே பார்த்துக் கொண்டிருந்ததால் அவன் செல்ல வேண்டிய பஸ் வண்டி அவன் நின்று கொண்டிருந்த தரிப்பிடத்துக்கு வந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற விடயத்தினை அவனால் அறிந்து கொள்ள முடியாமல் இருந்தது, சுயநிலையை மறந்ததால் அந்த பஸ்ஸையும் தவற விட்டான் காந்தன்.

நேரம் மதியத்தை எட்டி விட்டதால் இனிமேலும் பயணத்தைத் தொடர்வதால் எந்தவொரு பிரயோசனமும் இல்லையெனத் தெரிந்து கொண்டு பாவையின் முக அழகினை நேரில் தரிசித்து விட்டு வீடு திரும்பலாம் என எண்ணியவாறு ஜவுளிக் கடையின் உள்ளே சென்று, அவள் ஜாடை காட்டிய பக்கத்தில் திரும்பியபோது காந்தனுக்கு தன்னையறியாமல் சிரிப்பே வந்து விட்டது. அங்கு தரிசனம் தந்தவள் இறப்பரினால் செய்யப்பட்ட பொம்மையே! ஜவுளிக்கடையின் மின் விசிறிக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் கண்ணாடித் திரைச்சீலை விலகி மூடியதே காந்தனின் பாதை மாறியதற்குக் காரணம்!

# பிளேன் ரிக்கற்



"ஏய்... அந்த பிச்சைக்காரனை உள்ளுக்கு விடாதை. இஞ்சை ஒண்டும் பிச்சை கொடுக்கிறேல்லை எண்டு சொல்லு" வங்கியின் உள்ளிருந்த மனேஜர் வாசலில் இருந்த செக்கியூரிட்டிக்கு சத்தம்போட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அழுக்கான சாரமும், கிழிந்தசேட்டும், தோள்பட்டையில் தொங்கும் பையும், கையில் தடியோடு காணப்பட்ட பிச்சைக்காரனைப் பார்த்து முகத்தை சுழித்துக் கொண்டான் செக்கியூரிட்டி.

"நான் ஒண்டும் பிச்சை எடுக்க வரேல்லை. எக்கவுண்ட் திறக்கத்தான் வந்தனான். அடையாள அட்டை இருக்கு. எக்கவுண்ட் திறக்க போம் ஒண்டு தாய்யா" என்றான் பிச்சைக்காரன்.

"எக்கவுண்ட் திறக்கவா? மனேஜரோடை போய் கதை" எண்டு மனேஜரின் அறையைக் காண்பித்தார் செக்கியூரிட்டி.

தன் முன்னே நின்ற பிச்சைக்காரனைப் பார்த்த மனேஜர், "எக்கவுண்ட் திறக்கவா? உனக்கு காசு எங்காலை?" என்று ஏதோ திருடனைக் கேட்பது போல் கேட்டார். உதட்டில் ஒரு புன்னகையைத் தவழ விட்டபடி "ஐயா- றோட்டிலை படுக்கிற எனக்கு வீடும் இல்லை. வாசலும் இல்லை. யாழ்ப்பாணம் போற பிளேனுக்கு ரிக்கற் கொடுக்கிற இடத்தில இப்ப ஒரு கிழமையாய் படுக்கிறன். விடியமுன்னரே எழும்பி கியூவிலை நிண்டு இடம்பிடிச்சுக் கொடுத்து மூவாயிரம் ரூபாய் வைச்சிருக்கிறன். அதுதான் ஐயா எக்கவுண்ட் திறக்க போம் ஒண்டு தாங்கோ" என்றான் பிச்சைக்காரன்.



வி.ரி.ராஜேந்திரா

ஊரிலை இருக்கிற குடும்பத்தைப் பார்க்க-ரிக்கற் எடுக்க ஆறேழு முறை போய் திரும்பி வந்த மனேஜரின் முகத்தில் சந்தோஷம் மலர்ந்தது. பிச்சைக்காரனை நாற்காலியில் அமரச் செய்து கணக்கு திறக்கும் படிவத்தை நிரப்பினார் மனேஜர்.

"ஐயா நான் மூவாயிரந்தானே தந்தன். நீங்கள் என்னன்டா மூவாயிரத்தி ஐந்நூறெண்டு எழுதியிருக்கிறியளே?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் பிச்சைக்காரன்.

"அது ஒண்டுமில்லை. என்ரை ஐந்நூறு ரூபாவையும் சேர்த்துத்தான் எக்கவுண்ட் திறக்கிறன். நாளைக்கு கியூவிலை நிண்டு எனக்கும் ஒரு நம்பர் எடுத்துத் தா. நானும் மனிசி பிள்ளையை பார்த்து ஆறுமாதமாச்சு" என்றார் மனேஜர்.

"ஐயா- நீங்கள் வரத்தேவையில்லை. நாளைக்கு விடிய நானே நம்பரைக் கொண்டு வந்து தாறன்" என்று சொல்லி விடைபெற்றான் பிச்சைக்காரன் அல்ல...அல்ல... வங்கியின் புதிய வாடிக்கையாளன்.

மனேஜரின் உள்ளம் குடும்பத்தினரை பார்க்கும் எண்ணத்தில் மலர்ந்திருந்தது. ■

# பால்மா

பாலுக்கு வீறிட்டது குழந்தை.

ஐந்தாவதோ, ஆறாவதோ முறையாக மார்புகளை மாறி மாறிச் சப்பிப் பார்த்து விட்டு அலறுகிறது அது!

துருத்திக் கொண்டிருக்கின்ற மார்பெலும்புகள் என்ன இயந்திரங்களா- இரையேதும் இல்லாமல் பால் சுரக்க...?

ஏழ்மை- தன்னிரக்கம்- இயலாமை இவை மூன்றும் இறுக்கிய முடிச்சில் தளர்வுற்றுச் சரிந்திருக்கும் சங்கரன் மெல்லத் திரும்புகின்றான். கிழிந்த கோரைப்பாய் 'சரக்' கென்ற சத்தத்தோடு கால்களுக்குள் சிக்குகிறது. வந்திருக்கும் இந்த வன்னிமண் பிடிக்கலியோ, என்னமோ? நாசமாய்ப் போன இருமல் நெஞ்சுக் கூட்டையும், தொண்டையையும் என்னமாட்ப் படுத்துகிறது...?!

"...... என்னங்க... கொஞ்சம் கடைப் பக்கம் பார்த்திட்டு வர்றீங்களா...? புள்ள அழுறத நிப்பாட்டுறானில்லையே...."

எனக்குத் தெரியும். கையில் செப்புச் சதமில்லை. கடைப்பக்கம் போய்த்தான் என்ன செய்ய...? ஏதேனும் அதிசயங்கள் நிகழ்ந்து அரைப் பக்கற்று மாவாவது கிடைக்காதா? என்கி..., ஆதங்கம்- நப்பாசை!

ஒளியிழந்த கண்களால் என்னைப் பார்க்கிறார். நெய்தல் நிலத்தலைவனாய் 'கெண்டைகளோடும், பாரைகளோடும், சுறாக்களோடும் நின்ற கோலம்' கண்களுக்குள் மின்வெட்டாய் மறைய... ஆற்றாமையோடு தலை குனிந்தேன்.

சுடுகாட்டு அமைதியோடு பாதை.

".... சரியா அடிக்கிறாங்கள்..." அப்புக் கிழவர்.... அகதி முகாமுக்குள் கிடந்து முணு முணுத்துத் திரியிறார். பாவம்....

**இது போர் மேகம் சிந்திய ஒருதுளி இரத்தம்**

சுருட்டுப் பத்தக் கூட கிழவருக்கு துட்டில்ல. பித்துப் பிடிச்சவராய் அலையிறார்.

'...சே துப்பாக்கிச் சன்னங்கள் இங்கே அகதிகளின் சந்ததியையல்லவா ஜனிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

எத்தனை நாளாயிற்று....

அகதிச் சுவாசம்.... அக்கினியாய் வாழ்க்கையைத் தகித்து... எத்தனை நாளாயிற்று....?'

"... நாங்கதான் பாவஞ் செய்தமெண்டு இங்க வந்து பிறந்தமெண்டு அவலஞ் சுமக்க... இந்தப் பச்சை மண் என்ன பாவஞ் செய்தது கடவுளே... நீ கண் திறக்க மாட்டாயா...?"

போத்தலுக்கை தண்ணீர் விட்டு சீனியை விட்டுக் கரைச்சுக் குடுக்க, உறிஞ்சத் தொடங்கிற்று குழந்தை. களைப்புற்று ஓடிவந்த ஆட்டுக்குட்டியாட்டம் "ஹா...ஹா" வென்று அது உறிஞ்சுவதில்தான் எத்தனை வேகம்!



அ.புரம்-எஸ்.ஸப்ரீனா

சங்கரன் தவழ மாட்டாத குறையாய் நடந்தான்.

"விர்" ரென்று வந்த அலுமினியப் பறவை அங்கொன்றும், இங்கொன்றுமாய் முட்டையிட்டுப் பறந்தது.

"ஹா" இதென்ன அற்புதம்!

சத்தியமாய் கடவுள் கண் திறந்து விட்டார்...!

இந்த முழு உலகமுமே தங்கத் தட்டாய் பொன்னொளி சிந்தி மின்னிற்று. ஓடினான். அங்கே!! அங்கே!!! ஒரு நிமிடம். ஒரே நிமிடம்...தன்னிலை மறந்தவனாய் ஷெல் வீச்சில் சிதறியிருந்த சில்லறைக்கடையில் சிதையாமல் சிரித்துக் கொண்டிருக்கும் பால்மா பக்கற்றுகள்.

சின்னக் குழந்தையாய்... வாரியெடுத்து, அள்ளியணைத்து... வாஞ்சையோடு வருடினான் சங்கரன்- கைகளில் அங்கர் பால்மா...! போர் தூவும் இந்தச் சன்னமழை கூட பொன்மயமாய் துலங்கியது.

எழுந்தும், தவழ்ந்தும் போனான். கொஞ்சம் தூரத்தில் தெரிந்தது 'அகதி மாளிகை!'

"....கண்ணம்மா.... என்ன அற்புதம் நிகழ்ந்தது பார்த்தியா...?" என்று சொல்லும் போது விரிகின்ற மனைவியின், மழலையின்... முகங்களின் மலர்ச்சியை நினைக்கையிலேயே நெஞ்சு பொங்கியது. விம்மிச் சிலிர்த்தது!

★-★-★

காதுகளை செவிடாக்கி மிக அருகில் விழுந்த 'அலுமினியப் பறவையின்' அக்கினி முட்டைக்கு அலறித் துடித்து ஓடி வந்தேன் நான்!!

சிதைந்திருந்த அந்த உடலின் ஒரு துண்டமான கையில் கெட்டியாகப் பிடிக்கப் பட்டிருந்தது அங்கர் பக்கற்...

(யாவும் கற்பனையல்ல) ■

# திறக்கப் பயந்த விழி

தருவது ரதீகன்



நீர் இல்லாத
ஏரியிருக்கலாம்
நினைவுகள் இல்லாத
நெஞ்சுண்டா?

கண்ணில்லாத
மனிதர் இருக்கலாம்;
கனவுகள்
இல்லாத மனிதருண்டா?

தமிழ்ச்செல்வி
கண்களை மூடியிருந்தாள்!

விழிகளை திறந்தால்
வெளியேறிவிடுவானோ
என்று பயந்தாள்!

கண்களின் வழியாக
மனதுக்குள் புகுந்தவன்
வெளியேற வேண்டுமானால்
இமைக்கதவங்கள்
விரிந்திட வேண்டும்!

வசமாக மாட்டினான்,
அதனால் என்ன,
நலமான இடத்தில்தானே
பதமாக இருக்கிறான்!

விழிகள் மூடியிருக்க
இதழ்கள் மட்டும்
விரிந்து மலர்ந்து
புன்னகைப் பூவானது!

புன்னகைப் பூ மலர
காரணம் இருந்தது!

உள்ளிருந்தவன்
என்ன,
சும்மாவா இருப்பான்?!

மூடிய இமைகளில்
முத்தமிட- உள்ளே
ஓடிய சுகத்தை
என்ன சொல்வாள்!

விரிந்த மஞ்சத்தில்
சரிந்த பொன்னுடலை
ஆராயும் அவசரத்தில்
கைபோகும் இடமெல்லாம்
தீ பரவும் இரகசியத்தை
யாரிடம்தான் சொல்லி மகிழ்வாள்?!

தங்கரதம் என்று கூறி
தழுவிக் கிடப்பவனை,
கட்டிக் கரும்பு என்று
கைக்குள் சிறையிட்டு
மொய்த்துக் கிடக்கும்
சுகம் கோடி சுகமே!

கோல இதழ் சுவையை
காளை அவன் அறிய,
வதைபடும் இதழிரண்டும்
இன்பக் கதை சொல்லும்
மாயம் என்ன?

## இலக்கிய நயம்

"செழிப்புக்கு குறைவில்லை
செல்வ மேனி,
பாவம் இடை மட்டும்
ஏழையாக இருப்பதேனோ?

இதழ் இரண்டும்
விருந்தாக இருக்கும்போது,
விழி இரண்டும்
வீரவாளாக இருப்பதேனோ?

விருந்துக்கு வந்தவனை
மிரட்டுவது
முறையாமோ? தர்மமாமோ?"

குறும்பான கேள்வி
குறுகுறுப்பான பார்வை
கொல்கிறானே காளை
அள்கிறானே மனதை!

தீக்குள் எறிந்துவிட்டான்
தேகம் எரிகிறது.
அணைக்க மாட்டானா?
அங்கம் தகிக்கிறது!

'நேர் நின்று
பார்க்கையிலே
தீக்கு நெய்யன்றோ
உன் நோக்கு!

போர் செய்ய
வந்தவனே,
போரிடு வெல்வதற்கு!

தீக்கு
நெய்யும் நீதான்!
தீயை அணைக்கின்ற
நீரும் நீதான்!

வெல்வதும் நீதான்
தோற்பதும் நீதான்
வென்றாலும், தோற்றாலும்
அதில் பாதி உனக்கு
மறு பாதி எனக்கு!'

சொல்லத்தான் நினைத்தாள்
சூழ்ந்த வெட்கத்தால்
சொல்லாமல் தவித்தாள்!

அவள் நினைத்ததையே
அவனும் சொன்னான்;

"அக்கினியும் நீதான்
சுவைக் கனியும் நீதான்!

அணைத்தால் தீ
சுவைத்தால் கனி

முறைத்தால் வாள்
நகைத்தால் பால்

முல்லையாய் சிரிப்பாய்,
மனதை
கொள்ளையும் அடிப்பாய்!

அணைக்கையில்
தேகம் சிலிர்க்கும்!
நினைக்கையில்கூட
தேகம் தகிக்கும்!

தீதான்- ஆனால்
தீதே அல்ல!
தா! தா!- எனக்கு
தீ உண்ணத் தா!"

அவன் வார்த்தைகளிலும்
வெப்பம் வீசியது!

அவன் பார்வையிலும்
பொறி பறந்தது!

தீயும், தீயும்
ஒன்று கலந்தால்
தேகம் என்னாகும்?

அதுதான்-அதுதான்
அங்கே அரங்கேற்றம்!

தேக சுரங்கள்
அவன் மீட்ட,
தேவ சுகம் என
அவள் மிதக்க
தாகம் தீராத
மோகக் கடல்!

கனவும்
தணித்தது தாகத்தை!
கனவும்
தகித்தது தேகத்தை!

எத்தனை நேரம்தான்
கனவு இருக்கும்?

கலைந்தது கனவு
கண் திறந்தாள்!

விடைபெற்ற
கனவை கோபித்தாள்!

கனவு போனதும்
கண்ட இன்பமும்
களவு போனது!

நனவில் கண்ட சுகமும்
காணும்போதுதான் இன்பம்!
கனவில் கண்ட சுகமும்
காணும்போதுதான் இன்பம்!

எப்போதும் இன்பம்
எப்போது வரும்?
புலம்பினாள் பூவை.

"நனவினால் கண்டதூஉம் ஆங்கே
—கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது"
அதிகாரம்-122, குறள்- 1215

ஸ்போர்ட்ஸ்

## இந்தியாவில் அவுஸ்திரேலிய அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. வருகிற பெப்ரவரி மாதம் இந்தியாவுக்குச் செல்லும் அவுஸ்திரேலிய அணி 53 நாட்கள் தங்கியிருந்து போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுடன் 2 மூன்று நாள் போட்டிகளிலும், 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடுகின்றது.

முதலாவது டெஸ்ட் போட்டி மார்ச் 5ம் திகதி சென்னையிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி மார்ச் 19ம் திகதி பெங்களூரிலும், மூன்றாவது டெஸ்ட் போட்டி மார்ச் 24ம் திகதி கட்டாக்கிலும் நடைபெறுகின்றது.

இப்போட்டிகள் முடிவடைந்ததும் இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுடன் ஸிம்பாப்வே கலந்து கொள்ளும் முத்தரப்பு (TRIANGULAR) ஒரு நாள் கிரிக்கெட் தொடர் போட்டிகளும் நடைபெறவுள்ளன.


முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

இந்தியா எதிர் அவுஸ்திரேலியா
ஏப்ரல் 01-கொச்சின்
அவுஸ்திரேலியா எதிர் ஸிம்பாப்வே
ஏப்ரல் 03-அகமதாபாத்
இந்தியா எதிர் ஸிம்பாப்வே
ஏப்ரல் 05-பரோடா
இந்தியா எதிர் அவுஸ்திரேலியா
ஏப்ரல் 07-கான்பூர்
இந்தியா எதிர் ஸிம்பாப்வே
ஏப்ரல் 09-கல்கத்தா
அவுஸ்திரேலியா எதிர் ஸிம்பாப்வே
ஏப்ரல் 11-பரிதாபாத்

இறுதிப்போட்டி ஏப்ரல் 14ம் திகதி நடைபெறுகிறது.

இத்தகவலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் ஜே.வை.லெலெ அண்மையில் தெரிவித்துள்ளார்.

## கப்டனாக லத்தீப்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டனான வாசிம் அக்ரம் தோள் பட்டையில் ஏற்பட்டுள்ள வலி காரணமாக சிகிச்சை பெறுவதற்கு இலண்டன் செல்கிறார். எனவே அக்ரமுக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியின் விக்கெட் கீப்பரான ரஷீத் லத்தீப் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 10ம் திகதி பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் நடக்கும் 'பங்களாதேஷ் வெள்ளி விழா' கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு ரஷீத் லத்தீப் கப்டனாகவும் சயீட் அன்வர் துணைக்கப்டனாகவும் இருப்பார்கள்.

பங்களாதேஷ் வெள்ளி விழா கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொள்கின்றன என்பது தெரிந்ததே.

## கண்டன ஊர்வலம்



இந்திய கிரிக்கெட் அணி, இலங்கை அணியுடன் 3 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடுவதற்காக ராகுல் ட்ராவிட், வெங்கடேஷ் பிரசாத், அனில் கும்ப்ளே, அபே குருவில்லா, வினோத் காம்ப்ளி, சபா கரீம் ஆகிய ஆறு வீரர்களை அணியில் இருந்து நீக்கியது.

இவர்களில் ட்ராவிட், பிரசாத், கும்ப்ளே ஆகியோர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். எனவே இவர்களை நீக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டிசம்பர் 27ம் திகதி பெங்களூரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

கன்னட நடிகர் அம்ரிஷ் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான கிரிக்கெட் இரசிகர்கள் கலந்துகொண்டு இந்திய தேர்வுக் குழுவினரின் கொடும்பாவிகளைப் பல இடங்களில் கொளுத்தினர்.

## சிந்தியா பதில்கள்

★ இந்தியாவில் சோனியா காந்தி அரசியலில் குதித்துவிட்டாரே? காங்கிரஸ் ஜெயிக்குமா?

பி. ஆனந்தராமன், கொழும்பு-06.

ஜெயிக்காது! சோனியா காந்தி சில மாதங்களுக்கு முன்னர் குதித்திருந்தால் காங்கிரசை ஓரளவு காப்பாற்றியிருக்கலாம். தன்னைப் பற்றிய எதிர்பார்ப்பு மக்களிடம் வடிந்துபோன நிலையில் மேடையேறுகிறார் சோனியா! குறித்து வையுங்கள், காங்கிரஸ் அடி வாங்குவது உறுதி!

### சோனியா காப்பாற்றுவாரா?

★ சிந்தியா! இந்தியாவில் எக்கட்சி பதவிக்கு வரும்? தமிழ் நாட்டில் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிவாய்ப்பு யாருக்கு?

உ. ரகு, கண்டி

பாரதிய ஜனதா! தமிழ்நாட்டில் செல்விக்கு சுக்ர திசையாம்!

★ டியர் சிந்தியா! எங்கள் சூப்பர் ஸ்டார் ரஜினி யாருக்காகப் பிரசாரம் செய்யப் போகிறார்?

தா. கமலேஸ்வரன், வவுனியா.

பாரதிய ஜனதாமீதும் அவருக்கு பிடிப்பு இருப்பதால், யாருக்கும் பிடி கொடாமல் தான் நடப்பார் என நினைக்கிறேன்! அப்படியே காங்கிரசை ரஜினி ஆதரித்தாலும்கூட இந்தத் தடவை சென்ற தடவைபோல அலையடிக்காது!

★ நடிகர் ஜெய்சங்கர் அரசியலில் ஈடுபடப் போவதாக இந்தியப் பத்திரிகைகளில் படித்தேன். வெல்லுவாரா?

இ. சரோஜா, பொகவந்தலாவ.

புகழ்பெற்ற நடிகர் என்பது மட்டும் அரசியலில் வெற்றி பெறுவதற்கு உரிய தகுதியாகாது. உதாரணம்: நடிகர் திலகம்!

★ சிந்தியா! மருதநாயகம் கொள்ளைக் காரனா?

வி. சத்தியேந்திரன், பதுளை.

'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' படம் தயாரானபோதுகூட கட்டப்பொம்மன் கொள்ளைக்காரன் என்று தி.மு.க. காரர்களும் பிரசாரம் செய்தனர். கவியரசு கண்ணதாசன் கட்டப்பொம்மனுக்கு போட்டியாக 'சிவகங்கை சீமை' படம் எடுத்தார். ஆனால் வென்றது கட்டப்பொம்மன்தான்! 'மருதநாயகம்' பற்றி யாருக்கும் முழு விபரமும் தெரியாது! ஆளாளுக்கு தமிழ்நாட்டில் கற்பனைக் கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

★ பார்த்ததில் பிடித்த படம் எது?

செல்வி கி. யோகேஸ்வரி, மட்டக்குளி.

'தடயம்', 'அரசியல்.' முன்னதில் விஜய சாந்தி விசயமுள்ள சாந்தி!

★ யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகளின் தேர்தல் போட்டி எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

ஆர். விஜயராசா, கொழும்பு-11.

இராணுவ அதிகாரி நேரில் அழைத்து ஒற்றுமை பற்றி உபதேசிக்கும் கட்டத்தில்!

★ அளவறிந்து செலவு செய்வதை கஞ்சத்தனம் என்று நினைப்பவர்கள் பற்றி?

ஜி. அரசரத்தினம், மட்டக்களப்பு.

கஞ்சத்தனம் என்பதும், சிக்கனம் என்பதும் ஒன்றல்ல.

கடைக்குப் போய் தேவைக்கு ஏற்றாற் போல ஒரு செருப்பை வாங்குவது சிக்கனம். அதைக் காலில் மாட்டினால் தேய்ந்து போகுமே என்று யோசிப்பது கஞ்சத்தனம்!

★ சிறந்த அரசியல்வாதிகள் எப்போது தோன்றுவார்கள்?

திருமதி வசந்தி ராஜேஸ், கொழும்பு-09.

பொய் எது, உண்மை எது? புளுகு எது? என்பதையெல்லாம் தீர ஆராய்ந்து பார்க்கும் மக்கள் தோன்றும்போது!

★ யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

சா. ரவீந்திரன், திருமலை.

'எய்ட்ஸ்'!

★ குட்டி ஜோக் ஒன்றிரண்டு சொல்ல முடியுமா?

ஏ. புவன், சிலாபம்.

**ஆசிரியர்:** இளமையில் கல்,
**மாணவன்:** முதுமையில் பாறாங்கல்லா?
**ஆசிரியர்:** பானை பிடித்தவள் பாக்கியசாலி
**மாணவன்:** குடம் பிடித்தவள் கொடுமைக்காரியா?

★ இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகளில் யாருடைய ஆட்டம் உங்களைக் கவர்ந்தது?

சி. விக்கினராஜா, ஹெந்தளை.

கோவாவில் இரசிகர்கள் தறிகெட்டு ஆடிய ஆட்டம்! கிரிக்கெட் போட்டியில் தங்களுக்குப் பிடித்த அணி தோற்குமானால் இரசிகர்கள் வரம்புமீறுவது தொற்று நோய் மாதிரி பரவி வருவது ஆரோக்கியமல்ல! அழகும் அல்ல!


ரம்பா

★ ரம்பாவுக்கு சிம்ரானைக் கண்டால் பிடிக்காதாம் உண்மையா?

பி. முஸம்மில், கண்டி.

இரண்டு பேருக்குமே முழுசான ஆடைகளைக் கண்டால் பிடிக்காது என்பது மட்டும்தான் எனக்குத் தெரிந்தது.

★ யாழ் குடாநாட்டில் புலிகளின் நடமாட்டம் உள்ள பகுதிகளிற்கு உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் செல்வார்களா?

ஆர். சிறிதரன், யாழ்ப்பாணம்.

தூக்கத்தில் நடக்கும் வியாதி இருந்தால் மட்டும்தான் செல்வார்கள்.

★ சிந்தியா! ரூபவாஹினியில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னாவின் பேட்டி பார்த்தீர்களா? எப்படியிருந்தது?

ஜெ. தனசேகர், கொழும்பு-05.

கேள்விகளால் ஒரு வேள்வி நிகழ்ச்சியில் இதுவரை ஒளிபரப்பானதில் உருப்படியான பேட்டி அதுதான்! துணிச்சலான பதில்கள்! நியாயப்படுத்த சுற்றி வளைக்காமையால் 'சுருக்' என்றிருந்தது!

★ காதல் விஷமா? அமுதா?

என். தர்மா, அம்பாறை.

நல்லாய் கேட்டீர்கள் போங்கள். கவியரசு கண்ணதாசன் கூறிய குட்டிக் கதை ஒன்று:

சக்தியும், சிவனும் சரசமாடிக் கொண்டிருந்தபோது, சிவத்தின் கழுத்தில் இருந்த பாம்பு மெதுவாகக் கீழிறங்கி வெளியே போயிற்று.

வெளியே இருந்த ரிஷபம் கேட்டது:

"ஆமாம், ஏன் இறங்கி வந்து விட்டாய்?"

பாம்பு சொன்னது:

"என்னைவிடக் கொடிய விஷம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் காதல் செய்து கொண்டிருக்கிறார்கள்."

(பி.கு: கண்ணதாசன் கருத்து; சிந்தியாவின் கருத்தல்ல)

# இராமாயணம் அங்கம் 115

## சோதியாய் திகழ்ந்த சீதை

இராமபிரானின் முகம், அவர்தம் அகத்தின் கொந்தளிப்பினைத் தெட்டத் தெளிவாகக் காட்டியது. தன்னைக் கண்டதும் மகிழ்ச்சிப் பெருக்குடன் வரவேற்பார் அண்ணல், என்றுதான் பிராட்டியார் பெரிதும் எதிர்பார்த்தார். அவருடைய மகிழ்ச்சிக் கடலில் தான் மூழ்கித் தத்தளிக்கப் போவதாக அன்னை அப்போதுவரை அகமகிழ்வுடன் காத்திருந்தார். ஆனால் அண்ணலின் முகத்தில் அப்போது கண்ட கடுமைத் தன்மையை பிராட்டியார் முன்னெப்போதும் கண்டதேயில்லை. எப்போதும் சாந்த சொரூபியாகவே அவர் காணப்படுவார்.

பிராட்டியார் மட்டுமல்ல, அங்கு அப்போது திரண்டு நின்ற அனைவருக்குமே இராமபிரானின் அப்போதையத் தோற்றம் பெரு வியப்பைத் தந்தது. வானரர், விபீடணருடன் வந்திருந்த அசுரர் ஆகியோரை விட வானவர்களும் முனிவர்களும்கூட இராமபிரானைக் காண அங்கு வந்து குழுமியிருந்தனர். தங்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக இராமபிரான், சினம் கொண்டவராகவும்- அதே நேரத்தில் விபரிக்க முடியாத சோகத்தில் திளைத்தவராகவும் காணப்பட்டமையினால் எல்லோரும் திகைப்புற்றிருந்தனர்.

சீதாப்பிராட்டியார் தனது கண்களிலி



ருந்து பெருக்கெடுத்தோடிய கண்ணீர்க் கடலை தனது முந்தானையால் துடைத்துவிட்டு இராமபிரானின் தாள்களில் வீழ்ந்தார். ஆனால் இராமபிரானோ தன் பாதங்களை பிராட்டியார் தீண்டி விடாதவாறு அப்பால் விலக்கிக் கொண்டார்.

### பிராட்டியாரின் பரிதவிப்பு

இச்செயல் பிராட்டியாரை மேலும் துயர சாகரத்தில் அமிழ்த்தியது. வேதனை தாங்காது தவித்தார்.

பிராட்டியாரைப் பார்க்காமலே வேறு புறம் திரும்பியவாறு இராமபிரான், "இவ்வளவு காலமும் காமுகனான- அரக்கர் தலைவனான- இராவணனின் ஆதரவில் வாழ்ந்தவள் நீ! ஆகவே உன்னை உத்தமி, பத்தினி, பதிவிரதை என்று ஏற்றுக்கொள்ள என் மனம் ஒப்பவில்லை. பிறன் மனையில் ஒரு நாள் தானும் வாழ்ந்த எந்த ஸ்திரியையும் எந்த ஆடவனும் ஏற்க மாட்டான். நீயோ பல நாட்கள்- உன் மீது காமமுற்று அழைத்துச் சென்றவனின் அனுசரணையுடன் வாழ்ந்திருக்கிறாய்! மனைவியை அபகரித்துச் சென்றவனைப் பழிவாங்கும் பொருட்டே இங்கு படை நடத்தி வந்தேன்! மனையாளை அபகரித்துச் சென்றவனை அழித்தேன்; அத்துடன் என் கடமை முடிந்தது. உண்மையில் நீ கற்பு நெறிதவறாதவளாக இருந்தால், உன்மீது ஆசை வைத்தவன் உன்னை அழைத்துச் சென்ற அன்றே உன் உயிரை மாய்த்திருக்க வேண்டும்! ஆனால் இத்தனை காலம் நீ சுகமாகவே வாழ்ந்திருக்கிறாய். ஆகவே உனக்கு உகந்த இடம் தேடிச் சென்று விடு!" என்று தீயை விடச்சுடும் சொற்களால் சீதாப்பிராட்டியாரைச் சுட்டுத் தீய்த்தார்.

பிராட்டியார் இச் சொற்களால் செயலற்று நின்றார். சற்று நேரம் சுயநினைவை இழந்தார். தான் காண்பது கனவா- நனவா என்பதை நிர்ணயித்துக் கொள்ள முடியாமல் தவித்தார். தழுதழுத்த குரலில் பின்வருமாறு கூறினார்:

"பிரபு! நான் எப்பாவமும் அறியாதவள். மனத்தால்கூட மாற்றானை நினைந்தவளல்ல. கற்பறத்தினின்றும் நான் பிறளவில்லை. என் தன்மையை முற்று முழுதாக அறிந்த தாங்களே என்மீது சந்தேகப்படலாமா?

அன்று மாருதி, என்னிடம் வரும்போது, நான் என் உயிரைப் போக்கும் நோக்கத்துடன் தானிருந்தேன். அவர் எனக்களித்த வாக்குறுதிக்கு அமைய ஒரு மாதத்துக்குள் தாங்கள் வந்து என்னைச் சிறை மீட்காவிட்டால், நான் உயிர் வைத்திருக்கப்போவதில்லை என்று தங்களிடம் கூறிவிடுமாறு தெரிவித்தேன். இவ்வேண்டுகோளை நிச்சயம் தங்கள் தூதரான மாருதி தங்களுக்குக்கூறியிருப்பார். அவ்வாறிருந்தும் என் கற்பறத்தின் மீது தாங்கள் ஐயப்பட்டுவிட்டீர்கள்! தாங்கள் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட இந்நிலையில் எனக்குப் புகலிடம் வேறில்லை. எனது உயிரை மாய்த்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை!" என்று கூறும்போது பிராட்டியாரின் சோக நிலை நீங்கி ஒரு வைராக்கியம் கொண்டநிலைதான் அவர் குரலில் தொனித்தது.

### இலக்குவனின் நிலை

இராமபிரானின் திடீர் மாற்றம் இளைய பெருமாள் இலக்குவனை வெகுவாகப் பாதித்தது. தனது அண்ணனின் கூற்றை இடைமறித்து மறுத்துரைக்க அவர் தொண்டை வரை வந்த வார்த்தைகள் வாயிலிருந்து வெளிவர மறுத்துவிட்டன. இத்தகைய கொடிய வார்த்தைகள், தான் தெய்வமாகப் போற்றும் அண்ணனின் வாயிலிருந்துதான் உதிர்ந்தனவா, என்ற சந்தேகம் அவரை வாட்டியது. அவருடைய கண்கள் சிவந்து அவற்றிலிருந்து செந்நீர்தான் சொரிந்தது, தனது முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டு விம்மி விம்மி அழலானார். அவரைத் தேற்றும் பொருட்டு அவரருகில் வந்து சேர்ந்த அங்கதனின் தோளைப் பற்றிக் கொண்டு தேம்பினார்.

### அனைத்தும் அறிந்த ஆஞ்சநேயர்

ஆஞ்சநேயரும் அண்ணலின் சுடுவார்த்தைகளால்-ஆரம்பத்தில் சுட்டெரிக்கப்பட்டாராயினும் இராமபிரானின் இத்தகைய கூற்றில் ஏதோ ஒரு பொருள் தொக்கி நிற்கிறது என்பதை உணர்ந்து கொண்டார். தெய்வத்துக்கும் மேலாகத் தன்னால் போற்றி வணங்கப்படும் அப்பரம்பொருள், எப்பொருளுமில்லாமல் இப்படியான வார்த்தைகளைப் புகன்றிருக்க முடியாது என்று திடமாக நம்பினார். ஆனால் அங்கு சூழ்ந்திருந்த ஏனையோர் சிந்திக்கவே திராணியற்றவராகக் காணப்பட்டனர்.

இந்நிலையில் சீதாப்பிராட்டியாரின் குரல் ஓங்கி ஒலித்தது, "தம்பி இலக்குமணா! என் கணவரால் சந்தேகிக்கப்படும் இந்த அபலை இனிமேலும் உயிருடன் வாழ்வதில் பொருளில்லை. உடனடியாகத் தீயினை மூட்டும்! தீயுடன் இந்தத் தீய உடலை சங்கமித்து விடுகிறேன்!" என்று ஆணையே பிறப்பித்தார்.

இலக்குவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருக தனது அன்னைக்கு நிகரான பிராட்டியாரின் முகத்தை அப்பொழுதுதான் முதன் முதலில் பார்த்தார். அதே கண்களால் தனது அண்ணனின் முகத்தையும் அப்போது தான் முதன் முதலில்- நேருக்கு நேராகப் பார்த்தார். இராமபிரான் தனது கண்களினாலேயே-பிராட்டியார் கேட்டுக் கொண்டபடி- தீயினை மூட்டுமாறு இலக்குவனைப் பணித்தார்.

தீக்குளிப்புக்கு உரிய முறைப்படி விறகுகளை அடுக்கிய இலக்குவன் தீயை மூட்டினார். பிராட்டியாரின் முன் சென்று சைகையினாலேயே அவரிட்ட கட்டளை நிறைவேற்றப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

பிராட்டியார் இரு கைகளையும் கூப்பிய வண்ணம் தனது தெய்வமாகிய இராமபிரானை மும்முறை வலம் வந்தார். அதே போல் சுவாலை விட்டெரிந்த தீயினையும் மும்முறை வலம் வந்து பின்னர் தீயினுள் இறங்கினார். இந்தக் காட்சியை இராமபிரானோ, இலக்குவனோ நேரடியாகப் பார்க்காமல் வேறுபுறம் தம் பார்வையைத் திருப்பிக் கொண்டனர். ஆனால் ஒரேயொருவர் மட்டும் புன்முறுவலுடன்- பயபக்தியோடு- இக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்தான் இராமபிரானின் உள்ளக்கிடக்கையைப் பூரணமாக உணர்ந்த ஆஞ்சநேயர்!

கொழுந்து விட்டெரிந்த தீ, சீதாப்பிராட்டியார் அதனுள் இறங்கியதும் மேலும் உயர்ந்து பெரும் சுவாலையாக விரிந்தது. வானில் இடிபோன்ற பேரொலி எழுந்து எங்கும் எதிரொலித்தது. பூமியும் ஒரு கணம் நடுங்கியது. காற்றும் புயல் போல் பயங்கரமாக வீசியது. அப்பொழுதுதான் இராமபிரான் உட்பட அனைவரும் தீயை ஊடுருவிப்பார்த்தனர். தீச்சுவாலையினுள் கூப்பியகரங்களுடன் சோதி வடிவமாகவே சீதாப்பிராட்டியாரின் திருவுருவம் தென்பட்டது, மெல்ல மெல்ல தீச்சுவாலை தணிந்தது, எந்தவிதமான குறையுமின்றி பிராட்டியார் காணப்பட்டார். அதேவேளை அங்கு அக்கினி தேவனும் தோன்றினார்.

**அங்கி யான் என்னை இவ் வன்னை கற்பு எனும்**
**பொங்கு வெந் தீச்சுடப் பொறுக்கிலாமையால்**
**இங்கு அணைந்தேன் உறும் இயற்கை நோக்கியும்**
**சங்கியா நிற்றியோ எவர்க்கும் சான்றுளாய்!**

*(யுத்த காண்டம்-513)*

பொருள்:

### இராஜகுமாரன்

*"எல்லார்க்கும் சான்றாக நிற்பவனே! தாய் போன்றவளான சீதாப்பிராட்டியாரின் கற்பு நெறியானது தீயாகிய என்னையே சுட்டெரித்தது. அத்துன்பத்தைப் பொறுக்க முடியாமல் நான் தங்களிடம் ஓடிவந்தேன். எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கிவிடும் எனக்கு நேர்ந்த கதியினைப் பார்த்த பின்னரும் இந்தக் கற்புக்கரசி மீது ஐயம் கொள்ளலாமா?"*

அக்கினி பகவான் இராமபிரானிடம் இவ்வாறு எடுத்துரைத்ததும், சீதாப்பிராட்டியாரை வழமையான கருணைமிகுந்த தனது கண்களால் ஏறிட்டு நோக்கினார் இராமபிரான். அப்பார்வையின் பொருளுணர்ந்த பிராட்டியார் அண்ணல் அருகில் வந்தார்; அவர் தம் தாள்களைப் பற்றினார். அண்ணலும் அன்னையைத் தூக்கி நிறுத்தி தனது இடப்பாகத்தில் அணைத்துக்கொண்டார். அதுவரை என்ன நடைபெறுமோ என்று ஏங்கிக்கொண்டிருந்த அனைவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

ஆஞ்சநேயர் தனது இருகைகளையும் மேலே உயர்த்திக் கூப்பிய வண்ணம், "ஸ்ரீ ராம ஜெயம்" என்ற மந்திரத்தை உச்சரித்தபடி இராமபிரான், சீதாப்பிராட்டியார் மற்றும் இளையபெருமாள் ஆகியோரை வலம் வந்தார். ஆஞ்சநேயரைத் தொடர்ந்து, விபீடணர், சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவன் ஆகியோரும் மந்திரத்தை ஜெபித்த வண்ணம் ஆஞ்சநேயரைப் பின் தொடர்ந்தனர்.

தேவர்களும் முனிவர்களும் இராமபிரானை வாழ்த்தி வணங்கிவிட்டு விடைபெற்றுச் சென்றனர். எல்லாரும் கலைந்து சென்ற பின்னர் இலங்காதிபதியான விபீடணர், அண்ணலை வணங்கினார். அத்துடன் வினயமாக ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். பல நாட்கள் போரில் ஈடுபட்டுக் களைப்புற்றிருந்தமையினால் சில நாட்கள் தன்னுடன் இலங்கை மாநகரில் வந்து தங்கி, சிரமபரிகாரம் செய்து தனது விருந்துபசாரத்தினை ஏற்றருளுமாறு வேண்டிக்கொண்டார். ஆனால் அவ்வேண்டுகோளினை ஏற்க இராமபிரான் முற்றாக மறுத்துவிட்டார்.

அயோத்திமாநகரின் அரச பரிபாலனத்தைத் துறவியாகவே மேற்கொண்டு வரும் தனது தம்பி பரதனுக்குத் தான் கொடுத்த காலக்கெடு அன்றைய மாலைப் பொழுதுடன் காலாவதியாகி விடுகிறது. அன்றைய தினமே தான் அயோத்தி மாநகரைச் சென்றடையாவிட்டால், பரதன் தன் உயிரை மாய்த்து விடுவான். ஆகவே அன்றே அயோத்தி மாநகர் சென்றாக வேண்டும் என்றும் கடுவேகத்தில் செல்வதற்கேற்றதோர் விமானத்தைத் தந்துதவினால் அதுவேபெரும் உதவியாகவிருக்கும் என்றும் விபீடணரிடம் தன் நிலையை இராமபிரான் வெளிப்படுத்தினார்.

(தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி: 113

**சரியானவிடை:- இலக்குமனன்.**

1. மா. குபேரன், வவுணதீவு, மட்டக்களப்பு.
2. ஜெ. ஜெனார்த்தனி, கந்தசாமி கோயில், வவுனியா.
3. எஸ். முகமட் ஹாரிஸ், 519/1 ஏ, ஜெயந்தி மாவத்தை, அனுராதபுரம்.
4. சு. தர்மினி, இல.445 திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
5. செல்வன் எம். இப்திகார், இல 220/4, உடபடலதெனிய, மடவள பஸார், மடவளை.

**போட்டி இல. 115** கேள்வி:- **இராமபிரானை விபீடணர் எங்கு வருமாறு அழைத்தார்?**

**ஜனவரி 10 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**இராமாயணப் போட்டி – இல.115, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## செல்வாவுக்கு மலர்வளையம்

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்தினர். அப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழி பின்வருமாறு:

"எங்கள் தந்தை செல்வாவே!

உமக்கும், உமது கொள்கைகளுக்கும் கட்டப்பட்டுவிட்ட



இந்த சமாதியில், எங்கள் சார்பாக வைக்கப்படும் இந்த மலர்வளையத்தையும் ஏற்றுக் கொள்வீராக.

'தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று நீர் கூறினீர். யார் யாரிடமிருந்து காப்பாற்ற வேண்டும்? என்று நீர் குறிப்பாக கூறாமல் போனதற்காக நாம் உமக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்.

ஏன் எனில், நீர் அவ்வாறு குறிப்பிட்டுக் கூறியிருப்பீரேயானால், இன்று எங்களை இந்த மக்கள் கல்லால் அடித்தே கொன்றிருப்பார்கள். குறைந்த பட்சம் காறி உமிழ்ந்தாவது துரத்தியிருப்பார்கள். அந்த நன்றிக் கடனுக்காகவும் இந்த மலர் வளையத்தை நாம் உமக்கு சாத்துகிறோம்.

உங்கள் கொள்கைக்கு இறுதி அஞ்சலி. உங்கள் சகல முன்னுதாரணங்களுக்கும் இறுதி அஞ்சலி. தந்தையே எங்களை மன்னித்துக் கொள்ளும். நாங்கள் உங்கள் பெயரிலும் ஒரு 'டம்மி வேட்பாளரை' நிறுத்தி இருக்கிறோம்."

## வாக்காளர் பட்டியலும் வேட்பாளர் பட்டியலும்

வேட்பாளர் பட்டியலை நிரப்ப பெயர் பஞ்சமாம். அதனால் பெயர் தேடி அலைந்தோமாம். மூளையைக் குடைந்தோமாம். விஷமிகள் சிலர் சேறு பூசுகிறார்கள்.

அவர்களது முட்டாள்தனம் உரித்து வைத்த வாழைப்பழம்போல நன்கு புலப்படுகிறது.

யாழ் மாவட்ட வாக்காளர் பட்டியலில் இலட்சக்கணக்கான பெயர்கள் உள்ளன. அதில் இருந்து ஒரு நூறு, நூற்றைம்பது பெயர்களை உருவி, வேட்பாளர் பட்டியலை நிரப்பும் அறிவுகூட எங்களுக்கு இல்லையா? தயவுசெய்து தங்களைப் போல எங்களையும் முட்டாள்களாக கருத வேண்டாம் என்று அந்த விஷமிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒன்றில் இருந்து இன்னொன்று உருவாகுவதுதான் உலக தத்துவம். பூ காயாகிறது. காய் கனியாகிறது.

மக்கள் வாக்காளராகிறார்கள். வாக்காளர்கள் வேட்பாளராகிறார்கள். அது போல வாக்காளர் பட்டியல் வேட்பாளர் பட்டியலுக்கு உதவுகிறது. அந்த அரிய தத்துவத்தை திருட்டுத்தனம், மோசடி, ஏமாற்று என்று யாராவது கூறினாலோ, அதிர்ச்சி அடைந்தாலோ, அவர்கள் எங்களைப் பற்றி இதுவரை தப்புத்தப்பாக எடைபோட்டு வைத்திருந்தனர் என்றே அர்த்தம். இனியாவது எங்கள் தகுதியை புரிந்து கொள்வார்களாக!

இப்படிக்கு
சகல சபைகளிலும்
போட்டியிடும் புத்திசாலிக் கட்சி.

## எங்கிருந்தாலும் வாழ்க

நாவாந்துறையைச் சேர்ந்த திருமதி மருசலீன் மற்றும் அவர் பிள்ளைகள் அனைவரும் இத்தால் பணிவுடன் விடுக்கும் விண்ணப்பம் யாதெனில்:

அன்பும், பட்சமும், பாசமும் நிறைந்த அருமைக் கணவருக்கு,

நீங்கள் ஒரு பெரிய பெரிய கில்லாடி என்பது நான் அறியாத விடயமல்ல. ஆனாலும் இத்தனை மாபெரிய கில்லாடியாக இருப்பீர்கள் என்று நான் நினைத்தது இல்லை.

ஐந்து வருடத்தின் முன்னர் இறந்து நல்லடக்கம் செய்யப்பட்ட நீங்கள, மறுபடி திரும்பி வந்திருப்பது சாதாரண விஷயமா என்ன?!

எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியப்பட வேண்டாம். அதுதான் உங்கள் பெயர் வேட்பாளர் பட்டியலில் இருக்கிறதே.

முடியுமானால் இந்தப் பக்கமும் வரவும். இங்கு பத்து வாக்குகள் வரை உள்ளன.

நிற்க: உங்கள் அருகில் நல்லடக்கம் செய்யப்பட்ட உங்கள் தாத்தா, அப்பா, பாட்டி, மாமா ஆகியோ ரையும் தட்டி எழுப்பி தேர்தல் தினத்தன்று அழைத்துச் செல்லவும்.

எங்கிருந்தாலும் வாழ்க,
எப்படியாகினும் வெல்க,
என்றும் மறவாத
உங்கள் மனையாள்.

## காணவில்லை.... காணவில்லை..... காணவில்லை....



விமான மூலம் கொழும்பு மற்றும் வவுனியா, மன்னார் பகுதிகளில் இருந்து சுடச்சுட இறக்குமதியாகிய 20 வேட்பாளர்களைக் காணவில்லை.

ஒவ்வொருவரிடம் தலா 20 ஆயிரம் ரூபா பணமும், ஒரு முழுச் சாராய போத்தலும், கோழி வறுவல் பொதி ஒன்றும் இருந்தன.

வாக்குகளை தரமான விலையில் கொள்வனவு செய்வதற்காக சென்றிருந்த வேளையில்தான் இவர்கள் காணாமல் போயுள்ளனர்.

கடைசியாக காணப்பட்ட இடம்:- பூமணி வடிசாராய சாலை.

## பகிரங்க அறிவித்தல்

ஐயாம்பிள்ளை ஆறுமுகமாகிய நான் இத்தால் தெரிவிப்பதாவது:

என்னை கொலை செய்யும் அல்லது கொலை செய்விக்கும் துர் நோக்கோடு என் ஊரவர்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

என் வசம் உள்ள 40 பரப்புக் காணி, மற்றும் அதில் உள்ள கல்வீடு, (ரிவிரசவில் ஓடுகள் களவுபோய்விட்டன) மா, பலா, தென்னை ஆகியவற்றை ஆண்டு அனுபவிக்க விரும்பும் என் உறவினர்கள் சிலரும் கொலைச் சதிக்கு உடந்தையாக இருப்பதாக எனக்கு ஐமிச்சம் (சந்தேகம்) ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்சியிடம் என் பெயரை வேட்பாளராக சிபாரிசு செய்தவர்கள் மேற்கண்ட வகையினரே ஆவர்.

ஆகையினால்,எனக்கோ,என் உயிருக்கோ ஏதாவது தீங்கு நேர்வதாயின் அதற்கு மேற்சொல்லப்பட்டவர்களே பொறுப்பாவர். என் ஆதனங்கள் எதுவும் எனக்குப் பின்னர் மேற்சொல்லப்பட்ட எவருக்கும் சேரக் கூடாது என்று இத்தால் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம்,
இக்கட்டில் மாட்டியிருக்கும்
ஐயாம்பிள்ளை ஆறுமுகம்

## ஆவிகள் சங்கம் கோரிக்கை

நேற்று நள்ளிரவு ஆவிகள் சங்கத்தினர் கூடி முக்கய தீர்மானங்களை எடுத்துள்ளனர். அவை பின்வறுமாறு:

1) தேர்தல் தினமான எதிர்வரும் 29ம் திகதி கல்லறைகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்க வேண்டும்.
2) கல்லறைச் சுவர்களில் மட்டுமாவது தேர்தல் பிரசார சுவரொட்டிகள் ஒட்டுவதோ, சின்னங்கள் வரைவதோ தடை செய்யப்பட வேண்டும்.
3) எங்கள் கொள்கைகளுக்கு முரணான கட்சிகள், எங்களை தங்கள் ஆட்கள் என்று எங்கள் வீடுகளிற்கு சென்று உரிமை கோருவதை கைவிடவேண்டும்.
4) எங்களைக் கல்லறையிலாவது நிம்மதியாக தூங்கவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## அரிய சந்தர்ப்பம்

நீண்ட காலத்தின் பின்னர் ஓசிச் சவாரி செய்ய அரிய வாய்ப்பு! ஜனவரி 29ம் திகதி அதிகாலை உங்கள் வீடுகளுக்கு எங்கள் வாகனங்கள் வந்து சேரும்.

உங்கள் பாதம் நோகாமல் வாக்குச் சாவடிவரை வாகனத்தில் ஏறிச்செல்லலாம். கட்டணம்: எங்கள் சின்னத்திற்கு வாக்குப் போடுவது மட்டுமே! திரும்பிச் செல்லும்போது மட்டும் பொடி நடையாகச் சென்று உடல் நலத்தைப் பேணுங்கள்.

தங்கள் நல்வரவை நாடும்
முன்னாள் போராளிகள்

காதிலை பூ கந்தசாமி



பெண்களின் அழகே இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன
கிளை: 105. காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436637


# உல்லாசம்



↑ குடிசையில் இருப்பவன் மாடியில் வாழ ஆசைப்படுவதும், மாடியில் இருப்பவன் குடிசையில் வாழ்வதே நிம்மதி என நினைப்பதும் புதுமையல்ல.

மைதானம்போல பெரிய பெரிய பங்களாக்களில் வாழ்ந்து சலித்தவர்கள், இயற்கையான சூழலில் பொழுதைக் கழிக்க ஆசைப்படுகிறார்கள்.

கடற்கரைகளில் குடிசைகள் அமைத்து வைத்து அவர்களை வரவேற்கிறது ஜமெய்க்கா நாடு. படத்தில் இருப்பது அந்தக் குடிசைகளில் சிலதான். இதுவா குடிசை?! என்கிறீர்களா? பணக்காரர்களின் குடிசை இப்படித்தான் இருக்கும்!

ஜமெய்க்கா கடற்கரைகளில் காணப்படும் அழகான இந்த குடில்களில் தங்குவதற்கு உல்லாசப் பயணிகளிடம் கடும் போட்டியாம். சொகுசுக் குடிசை.


ஜமெய்க்கா மேற்கிந்திய தீவுகளில் ஒன்று. கரிபியன் கடலில் கியூபாவுக்கு தெற்கே 144 மீட்டர் தொலைவில் இருக்கிறது. 1494ல் கொலம்பஸ் கண்டுபிடித்த தீவு இது. சுற்றுலாத்துறைதான் ஜமெய்க்காவுக்கு பணம் சம்பாதித்து கொடுத்துக் காப்பாற்றுகிறது.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழை
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


↓ மனிதர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மொழி உதவுகிறது. இதே போன்று வேறு உயிரினங்களும் அவற்றின் வாயிலிருந்து வெளிப்படும் ஒலிகளினாலும் அங்கங்களின் சைகைகளினாலும் கருத்துப் பரிமாறிக் கொள்கின்றன.

# செம்மண்




← சோவியத் யூனியன் சோசலிச நாடாக இருந்த போது, புரட்சியாளர்களின் புனித மண் என்று கருதப்பட்டது தலைநகர் மொஸ்கோ. அங்குள்ள செஞ்சதுக்கத்தைக் காணாத கண் என்ன கண்ணோ? என்பர்.

கோபச்சேவ் அதிபரான பின்னர் அமெரிக்காவின் அரவணைப்பில் மயங்கி இழுபட்டார். 1991ல் சோவியத் பல துண்டுகளாக சிதறுண்டது. செம்மண்ணில் எதிர்ப்புரட்சி சேறுகள்.

மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் செங்கொடியுடன் பல நிறக் கொடிகள் கலந்து ஆக்கிரமித்தன. மகிழ்ச்சியுடன் அக் காட்சியை படமாக்கியவர் ஒரு அமெரிக்கப் புகைப்படப்பிடிப்பாளர்.

நல்லவை வீழ்ச்சி கண்டால் எதிரிகளுக்கு கொண்டாட்டம் தான். தங்கள் வீழ்ச்சிக்கு தாமே குழிபறிப்பது தெரியாமல் சோசலிசத்துக்கு எதிரான ஆரவாரமான கவர்ச்சிப் பிரசாரங்களை சோவியத் மக்கள் நம்பியதுதான் பெரிய சோகம்.

# அம்மா பிள்ளை



பிராணிகளில் டொல்ஃபின் மீன்கள் மிகவும் புத்திசாலிகள் என்பதை ஆய்வாளர்கள் நுண்ணியமாக ஆராய்ந்தறிந்துள்ளனர்.

படத்தில் காணப்படும் டொல்ஃபின்களில் பெரியது தாய், சிறியது அதன் குட்டி. தாய் டொல்ஃபின் முதுகில் குட்டி தனது முதுகை உராசுகிறது. இதன் அர்த்தம் என்னவெனில்- "நாம் போட்டுள்ள திட்டப்படி காரியத்தை முடிக்க எதுவித தடையுமில்லை," என்பதாகும்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள ஏ.எம். பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக கத்தலின் டட்ஸின்ஸ்கி என்ற பெண்மணி, டொல்ஃபின்கள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

ஆராய்ச்சிக்காக ஒரு பெரிய குளத்தை அமைத்து அதில் டொல்ஃபின் களை வளர்த்தார். இக் குளத்தின் பல பகுதிகளிலும் தானியங்கி வீடியோக் கமராக்களைப் பொருத்தி ஆய்வு களை நடத்தினார்.

இப்பிராணிகள் வாயிலிருந்து பல வகை ஒலிகளை எழுப்புதல், சீறுதல் ஏனைய டொல்ஃபின்களின் பல்வேறு உறுப்புக்களைத் தீண்டுதல் போன்ற சமிக்ஞைகளால் தமக்கிடையே தொடர்பு கொள்கின்றன என்பதை நிரூபித்துள்ளார்.

# சவாரி




↑ இது சாதாரணப் படகுகள் அல்ல. காதல் படகுகள். காதலரின் தேனிலவுப் பயணப் படகுகள் கனவையான கதைகளைக் கேளுங்கள். [illegible] 61 வயதான அமெரிக்கப் படகோட்டி 35 வயதான [illegible] 1986ல் மணந்து கொண்டார். இப்பெண்ணும் ஒரு படகோட்டும் வீராங்கனைதான். இருவரும் திருமணம் புரிந்து கொண்டதும் தங்கள் தேனிலவைக் களிக்க எந்த சுகவாசஸ்தலத்துக்கோ, [illegible] நட்சத்திர ஹோட்டலையோ நாடவில்லை.

37 அடி நீளமும் 800 இறாத்தல் எடையும் கொண்ட இரு படகுகளை அமைத்து அவற்றில் ஏறி [illegible] இருந்து தென் அமெரிக்காவின் கேப் ஹோர்ன் முனை வரையிலான [illegible] ஆயிரத்து 246 மைல் தூரத்தைக் கடலில் கடந்தவாறு தேனிலவைச் செலவிட்டனர். இதற்காக இவர்கள் 32 மாதங்கள் செலவிட்டனர். மிக நீண்ட தேனிலவுப் பயணம் என்று உலக சாதனையில் இடம்பிடித்து விட்டனர்.

இருவரும் தங்கள் பயணத்தின் போது பல்வகையான பயங்கர அனுபவங்களைப் பெற்றனர். [illegible] [illegible] போதல், புயல், சுழி [illegible] ஆகியவற்றிலிருந்து தப்பியது மாபெரும் அதிஷ்டம்.

பயணத்தின்போது 35 ஆயிரம் புகைப்படங்களை எடுத்து வந்துள்ளனர்.

# முன்னணி



→ அவர் அந்தனி டொனால்ட். தென்னாபிரிக்க அணியின் சிறப்பிக்க பந்துவீச்சாளர்.

தென்னாபிரிக்கா நிறவெறி நாடாக இருந்த போது அந்த நாட்டு கிரிக்கெட் அணியை உலகம் ஒதுக்கிவைத்தது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களின் ஆட்சி மலர்ந்த பின்னர் கிரிக்கெட் அணி (1992) மீண்டும் ஏற்கப்பட்டது. (ஆனால் அணியில் தான் கறுப்பினத்தவர் எவருமில்லை)

1992ல் அறிமுகமான டொனால்ட் தூள் கிளப்பத் தொடங்கினார். சர்வதேச ஒருநாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் இரண்டிலுமே 175 விக்கெட்டுக்களை தாண்டிவிட்டார்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவுடன் நடந்த டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்டுக்களை சாய்த்திருக்கிறார்.

சீறிவரும் டொனால்ட்டுக்கு பல சாதனைகள் காத்திருக்கின்றன. படைக்கும் வேகமும் இந்த மனிதரிடம் நிரம்பவே இருக்கிறது.


# நியூ பொம்பே பசார்




ஆடைகள் விற்பனையில் பல வருட அனுபவத்தைக் கொண்டுள்ள ஏறாவூர்–நியூ பொம்பே பசார் ஸ்தாபனத்தார் மீண்டும் புதுப் பொலிவுடன் வாடிக்கையாளர்களை வரவேற்கிறார்கள்.

மாறும் நாகரிகத்திற்கேற்ப [illegible] உடைகள், நங்கையரின் மனதைக் கொள்ளை கொள்ளும் ஆடைகள், சாறிவகைகள், திருமண கூறைச்சேலைகள், ரெடிமேட் உடைகள், [illegible] இறக்குமதியான வெளிநாட்டு உடுதுணிகள், மற்றும் பிளவுஸ் பீஸ்கள், வாசனைப் பொருட்கள், கைக்கடிகாரங்கள், குடைகள் என்பவற்றுடன் ஆடவருக்கு அழகூட்டும் சேட்டிங்ஸ், சூட்டிங்ஸ், இறக்குமதியான சேட் வகைகள், ரீ-சேட் வகைகள்.

எந்த மத கொண்டாட்டங்களானாலும் மனதில் நிறைவு தரும் ஆடைத் தெரிவுக்கு நியாய விலையில் நம்பிக்கையான ஓரே ஸ்தாபனம். ஏறாவூர்-நியூ பொம்பே பசார் ஸ்தாபனம். ஒரு முறை வாருங்கள். உள்ளம் பூரித்துப் போவீர்கள்.

பிரதான வீதி
ஏறாவூர்-03.